

2004-ஆம் ஆண்டில் இந்தியாவின் சிறந்த இளம் செய்தியாளர் மற்றும் நிகழ்ச்சி நடத்துநராக அமெரிக்க அரசால் தேர்வுசெய்யப்பட்டு அந்நாட்டில் நடந்த சர்வதேச செய்தியாளர்கள் கலந்தாய்வில் பங்கேற்றார்.

ஊடகங்களில், இவருடைய சிறப்பான பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக, இந்தியாவின் முன்னணி செய்தி வார இதழான 'இந்தியா டுடே' வழங்கிய 2006ஆம் ஆண்டிற்கான 'இந்தியாவின் இளம் சாதனையாளர்கள்' விருதைப் பெற்றவர்.

2007-ஆம் ஆண்டு, ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னியில் நடைபெற்ற சர்வதேச சுகாதார மாநாட்டில் கலந்துகொள்வதற்காக தேர்வு செய்யப்பட்டவர்.

2007-ஆம் ஆண்டு சிறந்த நிகழ்ச்சித் தொகுப்பாளராக ஆனந்த விகடன் வார இதழால் தேர்வு செய்யப்பட்டார்.

2008 - ஆம் ஆண்டு ஜூனியர் சேம்பர் இண்டர்நேஷனல் அமைப்பால் (ஜேசிஐ) வழங்கப்பட்ட 'சிறந்த இளம் இந்தியர்' விருது பெற்றவர்.

2008-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சிறந்த பத்து நபர்களுள் ஒருவராகவும் சிறந்த நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் 'ஆனந்த விகடன்' வார இதழால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவருடைய முதல் புத்தகம் 'தெருவெல்லாம் தேவதைகள்' 2007ஆம் ஆண்டு வெளிவந்தது.


உலக அறிவுச் சுரங்கங்கள்
அனைத்தும் உங்களுக்காகத் தமிழில்

சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷன்ஸ்

617


ப்ளீஸ்! இந்தப் புத்தகத்தை வாங்காதீங்க! - கோபிநாத்

1,75,000 பிரதிகளைத் தாண்டி 2,00,000 பிரதிகளை நோக்கி



# ப்ளீஸ்! இந்தப் புத்தகத்தை வாங்காதீங்க!

விற்பனையில் நெ. 1

## கோபிநாத்


சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷன்ஸ்

Title :
Please Intha
Puthakathai
Vaangaatheenka

Author :
Gobinath

Publisher :
K.S. Pugalendi

New Address :
SIXTHSENSE PUBLICATIONS
10/2 (8/2), Police Quarters Road,
(Between T.Nagar Bustand &
Police Station)
T.Nagar, Chennai - 17
Ph: 6527 9654, 2434 2771

Old Address:
SIXTHSENSE PUBLICATIONS
29 (7/3), 'E' Block, Ist Floor
Madley Road, T.Nagar, Chennai - 17
Ph: 6527 9654, 2434 2771

Email: sixthsensepub@yahoo.com

Editions

| | |
|---|---|
| First | : December, 2008 |
| Second | : January, 2009 |
| Third | : February, 2009 |
| Fourth | : June, 2009 |
| Fifth | : August, 2009 |
| Sixth | : September, 2009 |
| Seventh | : December, 2009 |
| Eighth | : April, 2010 |
| Nineth | : August, 2010 |
| Tenth | : November, 2010 |
| Eleventh | : January, 2011 |
| Twelveth | : March, 2011 |
| Thirteenth | : June, 2011 |
| Fourteenth | : August, 2011 |
| Fifteenth | : December, 2011 |
| Sixteenth | : March, 2012 |

No part of the book may be reproduced or transmitted in any form without permission in writing from the author & Publisher

Layout :
Shrusti Graphics
Chennai - 17

Pages : 112

Price : ₹ 70
Outside India:
5 $ U.S. Dollar

தலைப்பு :
ப்ளீஸ்!
இந்தப் புத்தகத்தை வாங்காதீங்க!

கோபிநாத்

பதிப்பாசிரியர்: கே.எஸ்.புகழேந்தி

புதிய முகவரி :
**சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷன்ஸ்**
10/2 (8/2), போலீஸ் குவார்ட்டர்ஸ் சாலை
(தி.நகர் பேருந்து நிலையத்திற்கும் காவல்
நிலையத்திற்கும் இடைப்பட்ட சாலை)
தி.நகர், சென்னை - 600 017
தொலைபேசி: 6527 9654, 2434 2771
மின்னஞ்சல்: sixthsensepub@yahoo.com

பழைய முகவரி :
**சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிகேஷன்ஸ்**
29 (7/3), 'ஈ' பிளாக், முதல் தளம்,
மேட்லி சாலை, தி.நகர், சென்னை - 600 017
தொலைபேசி: 6527 9654, 2434 2771

பதிப்புகள்

| | |
|---|---|
| முதலாவது | : டிசம்பர், 2008 |
| இரண்டாவது | : ஜனவரி, 2009 |
| மூன்றாவது | : பிப்ரவரி, 2009 |
| நான்காவது | : ஜூன், 2009 |
| ஐந்தாவது | : ஆகஸ்டு, 2009 |
| ஆறாவது | : செப்டம்பர், 2009 |
| ஏழாவது | : டிசம்பர், 2009 |
| எட்டாவது | : ஏப்ரல், 2010 |
| ஒன்பதாவது | : ஆகஸ்ட், 2010 |
| பத்தாவது | : நவம்பர், 2010 |
| பதினொன்று | : ஜனவரி, 2011 |
| பன்னிரெண்டு | : மார்ச், 2011 |
| பதின்மூன்று | : ஜூன், 2011 |
| பதினான்கு | : ஆகஸ்ட், 2011 |
| பதினைந்து | : டிசம்பர், 2011 |
| பதினாறு | : மார்ச், 2012 |

இந்தப் புத்தகத்திலுள்ள எந்த ஒரு பகுதியையும் எழுத்தாளர் மற்றும் பதிப்பாளரின் அனுமதியை எழுத்து மூலம் பெறாமல் பதிப்பிக்கக் கூடாது.

அச்சிட்டோர் :
பத்மாவதி ஆப்செட், சென்னை-2
தொலைபேசி : 28450105
பக்கங்கள் : 112

விலை: ₹70.00

வெளிநாடுகளில்: 5 அமெரிக்க டாலர்

**ப்ளீஸ்!**

**இந்தப் புத்தகத்தை**

**வாங்காதீங்க!**

**ஏன்னா...**

இந்த புத்தகத்தில் நான் எதையும் புதிதாக சொல்லி விடவில்லை. எனக்குக் கிடைத்த வாய்ப்பில் நான் சந்தித்த மனிதர்கள், படித்த புத்தகங்கள், பயணங்கள் இவை எனக்குச் சொன்னதை நான் உங்களுக்குச் சொல்லி இருக்கிறேன்.

இந்த "உங்கள்" என்பதில் நானும் அடக்கம். இந்த புத்தகம் உங்கள் வாழ்க்கையை புரட்டிப் போட்டு விடும் என்றெல்லாம் சொல்லவரவில்லை. ஆனால் இது உங்களுக்கு... உங்களை அடையாளம் காட்டும். உங்கள் சிறப்பியல்புகளையும், உங்கள் திறனின் நீள, அகலங்களையும் உங்களுக்குச் சொல்லும்.

அரக்க பரக்க ஓடிக்கொண்டும், அடுத்த நாள் என்ன செய்வது என்று தேடிக்கொண்டும், தோளில் இருந்து கழற்ற முடியாத சுமையாக சவால்களை சுமந்து கொண்டும் களைத்துப் போய் ஓடிக்கொண்டும் இருக்கிறோம். நமக்கு நாம் சரியாகத்தான் ஓடிக்கொண்டு இருக்கிறோமா...

ஓடுகிற திசையில்தான் என் இலக்கு இருக்கிறதா என்று ஒரு மரத்தடியில்

உட்கார்ந்து யோசிக்க வைக்க இந்த புத்தகம் பயன்படலாம்.

என்ன செய்து கொண்டு இருக்கிறோம்? என்ன செய்ய வேண்டும்? ஏன் இது நடக்கவில்லை? இது நடக்க என்ன செய்வது என்பது போன்ற கேள்விகளை வெறும் உறுத்தலாக பார்த்துக்கொண்டு இருக்கும் நம்மில் பலருக்கும் இந்த கேள்விகளுக்கான பதிலைத் தேடும் ஒரு பார்வையாக இந்த புத்தகம் இருக்கும்.

நாம் சவால்கள் என்று நினைத்துக் கொண்டு இருந்தவற்றை... இந்தப் புத்தகம் சாதாரணம் என்று சொல்லலாம். சாதாரணம் என்று நினைத்துக் கொண்டு இருந்தவற்றை சவால்கள் என்றும் விளக்கலாம்.

ஆனால் அதை உங்கள் வாழ்வோடு பொருத்திப் பார்த்து இந்த குறிப்பிட்ட விஷயத்தில் எனது வேலை என்னவாக இருக்க வேண்டும் என்று இந்த புத்தகம் உங்களுக்கு உணர்த்தக் கூடும்.

மறுபடியும்...நான் எதையும் புதிதாக சொல்லி விடவில்லை. ஒன்றும், ஒன்றும் இரண்டு என்று நம் எல்லோருக்கும் தெரியும்.

ஆனால் கணக்குகளின் எண்ணிக்கை அதிக மாகிறபோது ஒரு கால்குலேட்டரை தேடுகிறோம். அதனால் உங்களுக்கு கணக்கு தெரியாது என்பதல்ல.

இந்த புத்தகம் ஒரு கால்குலேட்டர். உங்க ளுக்கு தெரிந்ததை... நீங்களே வேகமாக புரிந்து கொள்ள இது எழுத்து கால் குலேட்டர்.

நன்றி!

அன்புடன்
கோபிநாத்

# நன்றி...


- ஆண்டனி
- சாய்ராம்
- ரேடியோ சிட்டி நண்பர்கள்
- விஜய் டி.வி. நண்பர்கள்
- பத்திரிகை சகோதரர்கள்
- ராமகிருஷ்ணன்
- குமாரவேல்
- சேகர்
- சுவாமிநாதன்
- கார்த்திகைச் செல்வன்
- முதல் புத்தகத்தை வெளியிட்ட அண்ணன் நக்கீரன் கோபால்
- சிக்ஸ்த்சென்ஸ் புகழேந்தி
- விஜயன்
- பாலகிருஷ்ணன்

## சமர்ப்பணம்

என்னையும்
என் தன்னம்பிக்கையையும்
என்னை விட
அதிகமாக நம்பும்
என்
அப்பாவுக்கு



# 1

சந்தோஷத்தை தன்னுள்ளே வைத்திருக்கிறவன் அதை வெளியே தேடிக் கொண்டிருக்கமாட்டான். அதற்காக அவன் அலையப்போவதுமில்லை.

நீங்கள் சந்தோஷமாக இருக்க என்ன வேண்டும்?

கோடி ரூபாய் பணம்?

கடற்கரையில் ஒரு பங்களா?

சினிமாவில் ஹீரோ சான்ஸ்...

கோடீஸ்வரன் வீட்டு சம்பந்தம்...

இவை மட்டும் கிடைத்து விட்டால் உங்களுக்குப் போதுமா? நீங்கள் காலம் முழுவதும் கவலைகளின்றி சந்தோஷமாக இருந்து விடுவீர்களா?

அவரவர் ஆசையை ஒட்டி உங்களுடைய இந்தத் தேவைகள் மாறலாம்.

அமெரிக்க வேலை,

அழகான பெண்களின் நட்பு,

ஆங்கிலம் பேசுகிற தொடர்புகள் இப்படி வெவ்வேறு மாதிரியாய் இவை இருக்கலாம்.

ஆனால் இவை கிடைத்திருக்கிற எல்லாரும் சந்தோஷமாக இல்லையே... 'என்ன வாழ்க்கையடா இது' என்று அவர்களும் அலுத்துக் கொள்ளத்தானே செய்கிறார்கள்.

பணக்காரன் ஏழையைப் பார்த்து இவன் என்னைவிட நிம்மதியாய் இருக்கிறான் என்று நினைத்து பெருமூச்சு விடுகிறான். ஏழை பணக்காரனைப் பார்த்து... இவர்கள் எந்தக் கவலையுமின்றி சந்தோஷமாக இருக்கிறார்கள் என்கிறான்.

மத்திய தர வர்க்கத்தினரின் நிலையோ இன்னமும் மோசம். அவர்கள் பார்வையில் ஏழை, பணக்காரன் இந்த ரெண்டு வர்க்கமுமே சந்தோஷமாகத்தான் இருக்கிறது. கஷ்டப்படுவது தாங்கள் மட்டும்தான் என்பது அவர்களின் அபிப்ராயம்.

சரி விஷயத்திற்கு வருவோம். என்ன கிடைத்தால் உங்களுக்கெல்லாம் சந்தோஷம் கிடைக்கும்? கொஞ்சம் ஆழ்ந்து யோசித்துப் பாருங்கள்.

யாரெல்லாம் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ... அவர்களிடம் இருப்பதெல்லாம் உங்களுக்குக் கிடைத்தால் நாமும் அவர்களைப்போல் சந்தோஷமாய் இருக்கலாம் என்று நினைக்கிறீர்கள். நான் சொல்வது சரிதானே! இப்போது ஒன்று தெளிவாகத் தெரிகிறது. எது உங்களிடம் இல்லையோ அதில்தான் உங்கள் சந்தோஷம் இருக்கிறது என்று நீங்கள் முடிவுக்கு வந்து விடுகிறீர்கள்.

அப்படியானால் உங்களது சந்தோஷத்தையும் சரி, துக்கத்தையும் சரி, நீங்கள் தீர்மானிப்பதில்லை... வேறு யாரோதான் அதைத் தீர்மானித்துக் கொண்டு இருக்கிறார்கள். உங்கள் வாழ்க்கையின் இரண்டு முக்கியமான உணர்வுகளை யும் யாரோ ஒருவரின் கட்டுப்பாட்டில் விட்டு விட்டு அப்படி என்னதான் வாழ்கிறீர்களோ தெரியவில்லை.

**சந்தோஷம் எதில்தான் இருக்கிறது?**

**ரொம்ப சுலபம்.**

**சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற உங்கள் எண்ணத்தில்தான் அது இருக்கிறது.**

எந்த விஷயத்திலும் ஒரு பிரச்னையை பார்க்கத் தெரிந்த உங்களுக்கு, அதில் நிறைந்திருக்கும் சந்தோஷத்தை மட்டும்



பார்க்க முடிவதில்லையே அது ஏன்? காரணம் அது உங்களிடம் உள்ள ஒரு பழக்கமாக இருக்கிறது.

எனது நண்பன் ஒருவன், எல்லாரும் சோகமாக ஒரு சினிமாவைப் பார்த்துக் கொண்டிருக்கிறபோது, அவன் மட்டும் அதில் இருக்கிற சினிமாத்தனத்தைப் பார்த்து சிரித்துக் கொண்டு இருப்பான்.

சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று ஒருவர் நினைப்பது ஒன்றும் பேராசை இல்லை. அடுத்தவரின் நிம்மதியை கெடுத்து ஆனந்தம் அடைய வேண்டும் என்று அவர் நினைத்தால்தான் தவறு.

**கவலைப்படுவதற்கான காரணிகளைத் தேடித்தேடி கவலைப்பட்டுக் கொண்டிருக்கிற நீங்கள்தான் அங்கிருக்கும் சந்தோஷத்திற்கான வெளியை மறைத்துக் கொண்டிருக் கிறீர்கள்.**

நீங்கள் சந்தோஷமாய் இருப்பது என்று முடிவெடுத்த பிறகு யாரால் அதைத் தடுக்க முடியும்.

உங்கள் மனது உங்களுக்குள்தானே இருக்கிறது.

உங்கள் சந்தோஷம் அடுத்தவர்கள் வசம் இருக்கும்போது தான் அது சாத்தியமில்லை. பல நேரங்களில் நம் மகிழ்ச்சி அடுத்தவரிடம்தானே இருக்கிறது. எதிர் வீட்டுக்காரன் வீழ்ந்தால் மகிழ்ச்சி. நாம் வாழ்ந்தால் வரும் மகிழ்ச்சியைவிட அவன் வீழ்ந்தால் நாம் அடையும் மகிழ்ச்சிதானே நம்மிடம் அதிகமாக இருக்கிறது.

சந்தோஷத்தை தன்னுள்ளே வைத்திருக்கிறவன் அதை வெளியே தேடிக் கொண்டிருக்கமாட்டான். அதற்காக அவன் அலையப்போவதுமில்லை. வானம், நட்சத்திரம், பக்கத்து வீட்டுக் குழந்தை, கும்மிருட்டு, பசி இப்படி இந்தப் பிரபஞ்சத் திலிருக்கும் எல்லாமே அவனைப் பொறுத்தவரையில் சந்தோஷத்துக்குரியவைதான். இப்படி நினைப்பது ஞானி களுக்கு மட்டுமே சாத்தியம் என்று என்னுடன் சண்டைக்கு வராமல், உங்கள் மனதுடன் மல்லுக்கு நில்லாமல் சிறிது யோசித்துப் பாருங்கள்.

என் சீனியர் ஒருவர் இருக்கிறார். அவரது இரண்டு சக்கர வாகனத்தை யார் கேட்டாலும் கொடுத்து விடுவார். இரவு 10 மணிக்கு மேல், தன் வேலைகளை யெல்லாம் முடித்து விட்டு, 7 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் தன் வீடு வரை நடந்தே போவார். ஏன் சார் உங்கள் வண்டியை ஓசி கொடுத்துட்டு இப்படி கஷ்டப்பட்டு நடந்து போகணும் என்று கேட்டால் இதை யார் கஷ்டம்னு சொன்னா? என்று சிரிப்பார்.



நீங்கள் கடைசியாக காலார நடந்து போனது எப்போது என்று எங்களைப் பார்த்துக் கேட்பார். இரவில் அந்த அமைதியான சூழலில், ஒய்யாரமாக நடந்து போகிற சுகமே தனி. அந்த அரிய வாய்ப்பை எனக்கு வழங்கியது, எனது வண்டியை ஓசி வாங்கிக் கொண்டு போன அந்த நண்பர்தான் என்பார்.

உங்களால் இந்த அளவுக்கு முடியாவிட்டாலும், எல்லாவற்றுக் குள்ளும், கவனித்துப் பார்த்தால் சந்தோஷம் இருப்பதை நீங்களும் கண்டு கொள்ளலாம்.

சந்தோஷம் உங்களுக்குள் இல்லாமல் போவதால் அதை நீங்கள் எங்கெல்லாமோ தேடிக் கொண்டு திரிவதால்தான் யார் யாரோவெல்லாம் உங்கள் மகிழ்ச்சியைத் தீர்மானிப்பவர்களாக ஆகி விடுகிறார்கள். அவர்கள் எளிதில் உங்கள் மகிழ்ச்சியைக் கெடுத்து விடுகிறார்கள். நல்ல மூடில இருந்தேன். ஆட்டோக்காரன் 'உனக்கு என்ன தெரியும்னு' கேட்டு என்னை மூட்அவுட் ஆக்கிட்டான். பெட்ரோல் விலை என்னன்னு தெரியுமா என்று அவன் என்னைக் கேட்கிறான். இவ்வளவு படித்த எனக்கு இது தெரியாதா?... சே...

எந்த வகையிலும் நம்மோடு நேரடித் தொடர்பு இல்லாத இந்த ஆட்டோக்காரர் மட்டுமல்ல... செய்தித்தாளில் வந்த ஒரு செய்தி... உங்கள் அவசரம் புரியாமல் போனில் உங்களை வெறுப்பேற்றிய உங்கள் நண்பர்கள்... டிபன் பாக்சில் இருக்கிற



உப்புமா... இப்படி எத்தனையோ விஷயங்கள் உங்கள் சந்தோஷத்தை மிகவும் சுலபமாகத் தட்டிப் பறித்து விடுகின்றன.

**கேவலம் டிபன் பாக்சில் இருக்கிற ஒரு உப்புமாவுக்கு... உங்கள் சந்தோஷத்தைக் கெடுக்கும் வல்லமை இருக்கும் என்றால் உங்களின் சந்தோஷ உணர்வு எவ்வளவு பலகீனமானதாக இருக்கிறது என்று யோசித்துப் பாருங்கள்.**


இவர்களில் யாரும், இவை எதுவும் உங்கள் நிம்மதியை கெடுத்து விட வேண்டும் என்று திட்டம்போட்டுக் கொண்டு எதையும் செய்யவில்லை. உங்கள் சந்தோஷ சிந்தனை அவ்வளவு பலமில்லாமல் இருக்கிறது அவ்வளவுதான்.

ஆட்டோக்காரரிடம் உங்களுக்குப் பெட்ரோல் விலை தெரியும் என்பதை நிரூபிப்பதன் மூலமா உங்கள் அறிவுத் திறனை இந்த உலகத்திடம் நீங்கள் மெய்ப்பிக்கப் போகிறீர்கள்? இல்லையே. பிறகேன் உங்களுக்கு அவர்மேல் இவ்வளவு எரிச்சல். இதோ... அந்த ஆட்டோக்காரர் அடுத்த சவாரியை ஏற்றிக்கொண்டு தன் வேலையைத் தொடங்கி விட்டாரே... இங்கே உங்கள் சந்தோஷத்தைக் கெடுத்தது... அந்த ஆட்டோக்காரரா... இல்லை, இன்னமும் அதைப் பற்றியே புலம்பிக் கொண்டு, உங்கள் சந்தோஷத்தைத் தொலைத்துக் கொண்டு மற்றவர்களின் நிம்மதிக்கும் வெடி வைத்துக் கொண்டிருக்கும் நீங்களா?

உலகின் மிகச்சிறந்த கணிதமேதை ஐன்ஸ்டின்... டிராமில் ஒருநாள் பயணம் செய்து கொண்டிருந்தபோது, கண்டக்டர் தன்னிடம் கொடுத்த மீதிச் சில்லரையை எண்ணிப் பார்த்துவிட்டு சில்லரை குறைவாக இருக்கிறது என்றாராம். உடனே கண்டக்டர்... "உங்களுக்கு சரியாக எண்ணத் தெரியாது என்று நினைக்கிறேன், ஒழுங்காக எண்ணுங்கள்" என்றாராம்.

யாரைப் பார்த்து எண்ணத் தெரியாது என்கிறாய், நான் உலகின் மிகச் சிறந்த கணிதமேதை தெரியுமா? என்று அவரிடம் ஐன்ஸ்டின் சண்டைக்குப் போகவில்லை. மனசுக்குள் சிரித்துக் கொண்டே மறுபடியும் அதை எண்ணினாராம்.

அந்த கண்டக்டர் அப்படிச் சொன்ன சமயத்தில் எனக்கு அடக்கமாட்டாத சிரிப்புதான் வந்தது என்று அந்த சம்பவத்தைப் பற்றி அடிக்கடி தன் நண்பர்களிடம் மிகவும் சிலாகித்துச் சொல்வாராம் ஐன்ஸ்டின்.



ஐன்ஸ்டின் இருந்த இடத்தில் நாம் இருந்திருந்தால், நான் +2வில் கணக்கில் எவ்வளவு மார்க் தெரியுமா என்று ஆரம்பித்து ஏதேதோ பேசியிருப்போம். ஆட்டோக்காரரிடம் உங்கள் அறிவாளித்தனத்தை நிரூபிக்க அவருடன் மல்லுக்கு நிற்பதைவிட உங்கள் சந்தோஷம் உங்களுக்கு முக்கியமாகப் படவில்லையா?

**ஏன் இப்படித் தேடித் தேடிக் கவலையை அனுபவிக்க நீங்கள் உங்கள் சக்தியை செலவிடுகிறீர்கள்.**

**காரணம் உங்கள் சந்தோஷத்தை நீங்கள் தீர்மானிப்ப தில்லை... அதுதான் நிதர்சனமான உண்மை.**

ஒரு நாள் இப்படி செய்து பாருங்களேன். நான் இன்று முழுவதும் சந்தோஷமாக இருக்கப்போகிறேன் என்று முடிவெடுத்துக் கொள்ளுங்களேன்.



நான் அப்படி சந்தோஷமாக இருக்க வேண்டுமானால் அதற்கு என்னிடம் நிறையப் பணம் இருக்க வேண்டுமே. அதை என் அப்பாவிடம் முதல் நாள் இரவே வாங்கி வைத்துக் கொள்ளவா என்று கேட்கிறீர்களா?

சந்தோஷ எண்ணத்துடன் சந்தோஷமாக இருக்கும் உளவியல் பயிற்சி இது. அதற்கு உங்களிடம் பணம் இருக்க வேண்டுமென்றெல்லாம் அவசியமில்லை.

அப்படி முடிவெடுக்கிற நாளில், காலையில் இருந்தே மலர்ச்சியாக இருங்கள். உங்கள் காபியை அனுபவித்துக் குடியுங்கள். கல்லூரியோ, அலுவலகமோ உற்சாகமாக எல்லாருக்கும் சிரித்த முகத்தோடு ஹாய் சொல்லுங்கள். How are you என்று கேட்பவர்களிடம் "ஏதோ இருக்கேன்" என்று விட்டேத்தியாகச் சொல்லாமல், நன்றாக இருக்கிறேன் என்று சந்தோஷமாகச் சொல்லுங்கள்.

மதிய உணவை நண்பர்களோடு பேசிச் சிரித்தபடி சாப்பிடுங்கள் (சாப்பிடும்போது பேசக்கூடாது என்ற உங்கள் கொள்கையை ஒரு நாளைக்கு ஒத்தி வைத்துக் கொள்ளுங்கள்) மாலைக்குள் உங்களைச் சுற்றி உள்ள நிறையப் பேர் சந்தோஷமாக இருப்பதை உங்களால் பார்க்க முடியும்.

மதியம் வருகிற முதுகுவலி, 3 மணிக்கு வருகிற தலைவலி, எப்போதும் வெறுப்பேற்றுகிற நண்பர்கள் இந்தத் தொந்தரவு களெல்லாம் உங்களுக்கு இன்று இருந்திருக்காது.

ஏன்?...

காரணம், இன்று முழுவதும் நீங்கள் சந்தோஷத்தின் காரணிகளை மட்டுமே கவனித்தீர்கள். உங்கள் சந்தோஷ எண்ணம் உங்களிடத்தில் ஆழமாக இன்று பதிந்து இருந்தது.


கவலைப்பட வைக்கிற காரணிகளை கவனிக்க விடாமல் சந்தோஷ உணர்வு இன்றைக்கு உங்களை இயக்கியது.

எதைத் தேடுகிறீர்களோ அதுதானே கிடைக்கும்.

சந்தோஷமாய் இருப்பது என்பது உங்கள் விருப்பம்தான். அதை ஏன் யார் யாரிடமோ அடமானம் வைக்கிறீர்கள்?

**சந்தோஷத்தை உங்களுக்குள் வைத்திருங்கள்... அப்படி வைத்திருந்தால் யாராலும் அதை தொந்தரவு செய்ய முடியாது.**

நீங்களும் சந்தோஷத்தை நிறைய பேருக்குக் கொடுக்கலாம்.



**2** நம் அக்கறை சிரிக்கக்கூடாது என்பதில் இல்லை... உண்மையில் பார்த்தால் அது அழக்கூடாது என்கிற நம் அச்சத்தின் மீதுதான் இருக்கிறது.

இன்னைக்கு ரொம்பவே சிரிச்சுட்டேன். நாளைக்கு ஏதாவது மோசமா நடக்காம இருந்தா சரிதான். இப்படி சிரிக்கிற போதெல்லாம் நினைத்துக் கொள்ளுகிறவர்கள், உங்களில் பத்தில் - ஐந்து பேராவது இருப்பீர்கள். வாழ்க்கை என்பது இன்பமும், துன்பமும் நிறைந்ததுதான். அதனால் இன்னைக்கு சிரிச்சா... நாளைக்கு அழுவோம்... இப்படி ஒரு லாஜிக் இவர்கள் மனதில்.

இதுக்கு கட்டுப்பட்டே சந்தோஷத்தைக்கூட முழுசா அனுபவிக்கத் தயங்குகிறவங்கதான் இங்கே அதிகம். ஆனால் துன்பம் வருகிறபோது இந்த லாஜிக்கையெல்லாம் நாம் பார்ப்ப தில்லை. கவலையோடு இருப்பதில் அவ்வளவு ஆனந்தம் நமக்கு. ஒருவர் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறித்தான் வரும் என்பது உலக நியதி என்று நீங்கள் நினைத்தால் துன்பம் வரும்போது நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும். நோ. ப்ராப்ளம் நாளைக்கு நாம் நிச்சயம் சந்தோஷமாக இருப்போம் என்று நீங்கள் நம்பலாமே.



**சந்தோஷமாக இருப்பதில் அவ்வளவு பயம் நமக்கு.**

வாழ்க்கை ரொம்பக் கஷ்டமானது என்று சொல்லிச் சொல்லியே வளர்க்கப்பட்டதால் ஆனந்தம் அடைவதில் அத்தனை வருத்தம் இருக்கிறது நமக்கு. நம் லாஜிக்படியே வைத்துக் கொண்டாலும் வரப்போகிற துன்பத்தை நம்மால் தடுக்க முடியாது என்றால் சிரிக்கிற நேரத்திலாவது அனுபவித்து சிரிக்கலாமே என்றால் அதற்கும் நாம் தயாராக இன்னொரு லாஜிக்கை வைத்திருக்கிறோம்.

இப்ப கொஞ்சமா சிரிச்சா, நாளைக்கு வரப்போகிற துயரம் கொஞ்சமா இருக்கும்.

அடடா... இந்த மூளையை வைத்துக் கொண்டு நாம் படுகிற பாடு இருக்கிறதே. நம் அக்கறை சிரிக்கக்கூடாது என்பதில் இல்லை... உண்மையில் பார்த்தால் அது அழக்கூடாது என்கிற நம் அச்சத்தின் மீதுதான் இருக்கிறது.

அழுகிற குழந்தை... யாராவது போக்கு காட்டினால்..., பாசமாக வாரிக்கொண்டால் சிரிக்கிறது... பிறகு பசித்தால்



அழுகிறது. அதைப் பொறுத்தவரை அதற்கு சிரிப்பு... அழுகை எல்லாம் ஒன்றுதான். சிரிப்பைப் பற்றிய ஆசையும் அதற்கு இல்லை, அழுகையைப் பற்றிய அச்சமும் அதற்கு இல்லை.

உங்களுக்குத் தெரியாததில்லை... சந்தோஷத்தின் உச்சம் அழுகையில்தான் போய்முடியும். அதற்கு நம்மூர் உலக அழகிகளே சாட்சி.

அளவுக்கு அதிகமாக சிரிக்கவும்... கண்ணீர் விட்டு அழவும் நம் சமூகம் சொல்லாத தடை ஒன்று வைத்திருக்கிறது.

சிரிப்பதில் - பெண்களுக்கு...

அழுவதில் - ஆண்களுக்கு.

நீங்கள் ஆங்கிலப் படங்களைப் பார்த்தால் அமானுஷ்ய ஹீரோக்கள்கூட அழுவார்கள். நம்மூரில் காமெடியன்தான் அழுவார். வன்மம் இல்லாமல் நெருடல் இல்லாமல் மனவுணர்வுகளை வெளிப்படுத்த நமக்கு வாய்த்திருப்பதுதான் இந்தச் சிரிப்பும்... அழுகையும்.

**சிரிப்பு வந்தால் சிரியுங்கள். நாளைக்கு அழுகை வந்தால் அழுது கொள்ளலாம். கொஞ்சமாக சிரித்து கொஞ்சமாக அழுவதை விட... நிறைய சிரித்து நிறைய அழுங்களேன்.**

சமூகச் சங்கடங்களைத் தாண்டி இதில் ஒளிந்து கிடக்கிற மனச்சங்கடங்கள் அதிகம்.

**நாம் மகிழ்வோடு இருப்பதற்காக படைக்கப்பட்டவர்களா... இல்லை அழுது கொண்டு திரியட்டும் என்று சொல்லி படைக்கப்பட்டவர்களா?**

இயற்கையோ... இறைவனோ... நம்மைப் படைத்தது யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும். நிச்சயமாக, அழுது புலம்புவதற்காக மட்டும் நாம் படைக்கப்பட்டிருக்க மாட்டோம். இங்கே சந்தோஷங்கள் நிறைய இருக்கின்றன. அனுபவிக்கத்தான் ஆள் இல்லை என்கிறது ஒரு சீனப் பழமொழி. வருத்தம் தருகிற விஷயமாகத் தேடித் தேடி கவலைப்படத் தெரிந்த நமக்கு... கண்களுக்கு முன்னால் இருக்கும் சந்தோஷங்களைக்கூட கண்டு கொள்ளத் தெரிய வில்லையே. அது ஏன்?





மீண்டும் பழைய இடத்துக்கே வருவோம். இங்கே வாழ்க்கை ரொம்ப கடினம் என்று சொல்லிச் சொல்லியே வளர்க்கப்பட்டிருக்கிறோம் நாம்.

நாளை பற்றிய பயமும், கவலையும்தான் இன்றைய சந்தோஷத்தை அனுபவிக்க நமக்குத் தடைபோடுகிறது. நாளைக்கு... அதற்கடுத்த நாள் குறித்த பயம் உங்கள் முன்னால் வந்து உட்கார்ந்து கொள்கிறது. நாளைக்கு எல்லாம் நன்றாகவே நடக்கட்டும்... சரி. இன்றைக்கு என்பது நேற்றின் நாளைதானே. அதில் ஏன் இப்படி கன்னத்தில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறீர்கள்.

நேற்று... நீங்கள் நாளை குறித்து... அதாவது இன்றைப் பற்றிக் கவலைப்பட்டீர்கள். அதனால் இன்று உங்களுக்கு சந்தோஷம் வந்து விட்டதா... இதோ இப்போது மீண்டும் நாளை குறித்த கவலை உங்களுக்கு ஆரம்பித்து விட்டது. உங்களிடத்தில் முக்கியமானதொரு கேள்வி...

**நாளை உலகம் இல்லை என்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்...? அநேகமாய்... நாளைக்கு உலகம் இருக்காதா? ஐய்யய்யோ அப்படி உலகம் இல்லையானால் என்ன செய்வது என்று இப்போதே கவலைப்பட ஆரம்பித்து விடுவீர்கள்.**

நாளை குறித்த எல்லா கவலைகளுக்கும் பின்னால் இருப்பது... தோல்வி குறித்த பயம்தான். நான் ஜெயித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற உங்கள் எண்ணம்...

அதில் என்ன தவறு இருக்க முடியும்...? என்று நீங்கள் கேட்கலாம்.


உங்கள் எண்ணத்தில் எந்தத் தவறும் இல்லை... உங்கள் அணுகுமுறையில்தான் கொஞ்சம் குழப்பம் இருக்கிறது.

உங்கள் எண்ணமெல்லாம் ஜெயிக்க வேண்டும் என்பதி லேயே இருக்குமேயானால் நீங்கள் வெற்றியைப் பற்றி மட்டும் தானே யோசிக்க வேண்டும். ஏன் தோல்வியைப் பற்றியே யோசிக்கிறீர்கள்.

தோற்காமல் இருப்பதற்குப் பெயர்தான் வெற்றி... என்பதுதான் உங்கள் சித்தாந்தம். இங்குதான் குழப்பமே. தோற்காமல் இருப்பது என்பது வெறும் பாதுகாப்பு உணர்வு. வெற்றி பெறுவது என்பது நம் ஆசை... இலக்கு.

பாதுகாப்பாக இருப்பதற்கும்... இலக்கை எட்டுவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது.

ஒழுகுகிற வீட்டிற்குள் நனையாமல் இருக்க ஒரு குடையைத் தேடச் சொல்கிறது உங்களது பாதுகாப்பு உணர்வு... அதாவது தோற்காமல் இருக்க நீங்கள் வழி தேடுகிறீர்கள். ஆனால்... வீட்டிற்கு மேலே ஒழுகாத தன்மையுள்ள ஓட்டையோ கான்கிரீட் தளத்தையோ போட வேண்டும் என்பதுதான் உங்கள் இலக்காக இருக்கவேண்டும்.



நாளை நனைந்து விடக்கூடாது என்ற அச்சத்தில் குடையைப் பிடித்துக்கொண்டே திரிகிறீர்களேயொழிய ஒழுகாத ஓடு போட வேண்டும் என்ற இலக்கு நிறைவேற்றப்படாமல் இன்னமும் அப்படியேதான் இருக்கிறது.

இப்போது ஒரு முடிவுக்கு வாருங்கள். உங்களது எண்ணமெல்லாம் குடை மீது இருக்கிறதா? இல்லை ஓடு மீது இருக்கிறதா.



தோற்கக்கூடாது என்று நீங்கள் ஓடிக் கொண்டிருக்கிறீர்களா?... ஜெயிக்க வேண்டும் என்று ஓடிக் கொண்டிருக்கிறீர்களா?

ஓட்டப்பந்தயத்தில் தோற்றுப் போவோம் என்று பயப்படுகிறவன், பின்னால் வருபவனை திரும்பிப் பார்த்துக் கொண்டே ஓடித் தன் இலக்கை விட்டு விடுகிறான். தோற்கக் கூடாது என்ற அவனுடைய பயம் அவனது வெற்றியை அவனிடமிருந்து பறித்து விடுகிறது.

ஜெயிப்பதற்காக ஓடுகிறவனுக்கு அவனது இலக்கு ஒன்றின் மீது மட்டுமே அவனுக்குக் குறி. அவனுக்கு தோல்வி குறித்த பயம் இல்லை. வெற்றியை அடையும் இலக்கு மட்டுமே அவன் மனசெல்லாம் நிறைந்திருக்கிறது.

உங்கள் எண்ணம் வெற்றி குறித்தே இருக்கிறது என்றால், இலக்கு நோக்கி ஓடுங்கள். தோல்வியின் பின்னால் ஓடாதீர்கள்.

**தோற்காமல் இருக்க வேண்டுமே என்பதற்காக நீங்கள் ஜெயிக்கப் பார்த்தால், தோல்விதான் உங்களுக்கு மிஞ்சும்.**

இதோ... உங்கள் இலக்கு... வெற்றியை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு ஓடுங்கள்... அதிவேகமாக ஓடுங்கள்.

**தோல்வி உங்களைத் துரத்தட்டும்... பரவாயில்லை. ஆனால் தோல்வியை துரத்திக் கொண்டு நீங்கள் ஓடாதீர்கள்...**



**3** ஒரு வேலையை விரும்பிச் செய்கிறபோது உங்களுக்கு அதன் கஷ்டம் தெரிவதில்லை. வருந்திச் செய்கிறபோது உங்கள் கஷ்டம் பல மடங்காகிறது.

கடுமையான உழைப்பாளிகள் என்று தன்னைப் பற்றி அடிக்கடி சொல்லிக் கொள்ளுகிற பலருக்கும் தான் அவ்வாறு மற்றவர்களால் பாராட்டப்பட வேண்டும் என்கிற ஆவல் அவர்களின் மனதுக்குள் ஒளிந்து கிடக்கிறது என்கிறார்கள் உளவியலாளர்கள்.

சின்ன சிராய்ப்பைக்கூட இவர்கள் பூதாகர மாக்கிக் காட்டுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நம்மில் பலரும் அப்படித்தான்... இங்கே "கடின உழைப்பாளி" என்ற அடைமொழிக்கு எப்போதுமே சமூக அந்தஸ்து உண்டு என்ற உங்கள் நம்பிக்கைதான் இதற்கெல்லாம் காரணம்.

சாதாரண விஷயத்தைக்கூட நீங்கள் கஷ்டப் பட்டுதான் செய்வீர்கள் என்றால் அதற்குப் பெயர் திறமைக் குறைவு என்பதுதானே அன்றி கடின உழைப்பு என்பது அல்ல.



ஒரு வேலையைக் கடினம் என்று நீங்கள் நினைக்கிறபோதே அதை நீங்கள் இஷ்டப்பட்டு செய்யவில்லை என்பதாகத்தானே அர்த்தம். தாங்கள் அனுபவித்துச் செய்கிற எந்த வேலையையும் கஷ்டப்பட்டு செய்ததாய் வெற்றி பெற்றவர்கள் சொல்வதில்லை.

எழுத்தாளர் சுஜாதாவிடம் "இவ்வளவு புத்தகங்கள் படிக்கிறீர்களே... உங்களுக்கு இது கஷ்டமாக இல்லையா" என்று கேட்டேன். "இதை வேலையாகச் செய்கிறவனுக்குத்தான் இது கஷ்டம். நான் எனது விருப்பமாக இதைச் செய்கிறேன்" என்றார். விருப்பத்தோடு செய்கிற யாரும் "ரொம்பக் கஷ்டம், ரொம்பக் கஷ்டம்" என்று அங்கலாய்த்துக் கொள்வதில்லை.

**கஷ்டப்பட்டு உங்களை யார் அந்த வேலையைப் பார்க்கச் சொன்னது? இதே வேலையை இஷ்டப்பட்டுச் செய்ய ஆயிரம் பேர் இருக்கிறார்களே. அவர்களிடம் அதை விட்டு விடலாமே.**

இதெல்லாம் சொல்றதுக்கு நல்லா இருக்கும். பிராக்டிக் கல்லாக கஷ்டம் என்று மனசுக்குத் தோன்றும்.

நான் செய்கிற வேலை ரொம்பக் கஷ்டமானதாகத்தான் இருக்கு. ஆனாலும் என்ன பண்றது? சம்பளம் வேணுமே... அப்பா வாங்கின கடனை அடைக்கணும். தவணை முறையில் வாங்கியிருக்கிற இரண்டு சக்கர வண்டிக்கு தவணை கட்டணும். இப்படி பட்ஜெட் பட்டியல் வாசிப்பவர்கள் பாதிப்பேர் இருப்பார்கள்.

பிள்ளைக்கு பள்ளி கட்டணம், வாகனத்துக்கு தவணை இதெல்லாம் கட்ட, கஷ்டமான வேலையை செய்ய உங்கள் மனது தயாராயிருக்கிறது. நீங்கள் சொல்கிற அந்த கஷ்டமான வேலையை நீங்கள் செய்து கொண்டிருப்பதற்குக் காரணமே உங்களுக்கு இருக்கிற தேவைகளால்தானே?

இந்தத் தேவைகள் உங்களுடைய விருப்பங்கள். அதனால் அதை சுமக்க உங்கள் மனசு தயாராக இருக்கிறது. ஆனால் அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக நீங்கள் செய்கிற உத்தியோகத்தை மட்டும் உங்கள் மனசு வெறும் 'வேலையாக'

மட்டுமே பார்க்கிறது. அது நான் செய்யும் வேலை, கஷ்டமானது என்று புலம்ப வைக்கிறது. ஏன்டா ஆபீசுக்கு வந்தோம் என்று அலுத்துக் கொள்ள வைக்கிறது.

எப்படியும் அந்த வேலையை நீங்கள் செய்துதான் ஆகவேண்டும் என்றால் ஏன் அதை நீங்கள் வெறுப்போடு செய்ய வேண்டும். ஆசைப்பட்டும் செய்யலாமே. மனசுக்கு பிடித்த சுமைகளை சுகமாக சுமப்பதுபோல்... வேலையையும் சுகமாக சுமக்கலாமே? அப்படி சுமக்கிறபோது நிச்சயமாய் உங்களுக்கு அதன் கனம் தெரியாது என்பதுதான் உண்மை.

நீங்கள் இந்த வேலையை வெறுப்போடு செய்கிறீர்கள் என்பதற்காக உங்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படும் என்றால் பரவாயில்லை. உங்களுக்கே தெரியும் அந்த வேலையை நீங்கள் ஆசையோடு செய்தால், கூடிய விரைவிலேயே நீங்கள் நீண்ட நாளாய் விரும்புகிற ஒரு விஷயம் கிடைத்து விடும் என்று.

ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்.

**"பாவம் புள்ள ரொம்ப கஷ்டப்படுறான்" என்று நாலுபேர் சொல்ல வேண்டும்... இந்தக் குடும்பத்துக்காக "மாடா உழைக்கிறான்" என்று உங்கள் காதுபட யாராவது கவலைப்பட வேண்டும்... அதற்காகவேணும் இந்த வேலையை வெறுப்போடு செய்தாக வேண்டும் என்று எண்ணுகிறீர்கள்.**

கவலைப்படாதீர்கள்... நீங்கள் மிக இலகுவான வேலையைப் பார்த்தாலும், உங்கள் அன்புக்குரியவர்கள் நீங்கள் கஷ்டப்படுவதாகத்தான் சொல்லப்போகிறார்கள். இரும்படிக்கிற வேலை ரொம்பக் கஷ்டமானதுதான். ஆனால் உங்களுக்குப் பிடித்த இரும்பு அடிக்கிறவர்கள் தாங்கள் செய்யும் வேலையை மிகவும் நேர்த்தியாகவும் திருப்தியாகவும் செய்வதை நீங்கள் கவனித்திருக்க முடியும். அதனால்தான் நமக்கு அவர்களை மிகவும் பிடித்திருக்கிறது.

இங்கே ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். அவர்கள் உங்களது திருப்திக்காக அந்த வேலையைச் செய்யவில்லை. அவர்களின் திருப்திக்காகவே அந்த வேலையை அவர்கள் செய்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால்



உங்களைப் பற்றியெல்லாம், நீங்கள் அவர்களைப்பற்றி என்ன நினைப்பீர்கள் என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் கவலைப் படுவது இல்லை.

இந்தத்துறையில் இந்த வேலையின் நெளிவு சுளிவுகளை நன்றாகத் தெரிந்து வைத்துள்ள நான் திருப்தியாகச் செய்கிற எந்தப் பணியும், அடுத்தவர்கள் என்னிடம் எதிர்பார்ப்பதை விட அதிக அளவுக்கு சிறப்புள்ளதாகவே இருக்கும் என்று அவர்கள் ஆழ்மனதில் தீவிரமானதோர் நம்பிக்கை இருக்கும்.

அவர்கள், உங்களின் பாவம் வார்த்தைகளுக்கு மயங்கிப் போகிற அளவுக்கு பலவீனமானவர்கள் அல்ல. கோடரியோ... உளியோ கொண்டு ஆசையோடு ஒரு வேலையைச் செய்கிற போது, அதைக் கொண்டு இரும்பை அடிக்கிறபோது எழுகிற சத்தமும், வீசுகிற அனலும் அவர்களைத் துன்புறுத்துவதில்லை.

செய்கிற வேலையைத் திருப்தியாய் செய்து விட்டு ஒன்றுக்கு பத்துமுறை அது சரியாய் இருக்கிறதா என்று ரசித்துப் பார்ப்பதுதான் அவர்களுக்கு சுகம்.

அந்த முனியனோ, வெள்ளைச்சாமியோ அவனை வெளியிலிருந்து பார்க்கிறவர்களுக்குத்தான், "இரும்படிக் கிறவன்..."

ஒரு சிலை வடிக்கிறவருக்கும், தனக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்று நினைத்து அந்த வேலையை ரசித்துச் செய்கிற முனியனையும், வெள்ளைச்சாமியையும் உங்களுக்கு ரொம்பவே பிடித்துப்போகும்.

அடிக்கடி அவரிடமே போவீர்கள். நிறைய பேரை அவருக்கு அறிமுகப்படுத்துவீர்கள். அவருடைய பட்டறை பெரிதாகும்... ஒருநாள் முனியன் காரில் போகும்போது அது உங்களுக்கு உறுத்தலாக இருக்காது. சந்தோஷமாகத்தான் இருக்கும்.

**நீங்கள் ஆசைப்படுகிற "பாவம்" பாராட்டுகளைவிட இது கௌரவமானதாக இல்லையா? ஒரு நிலையில் இந்த "அய்யோ பாவத்திற்கு" உங்களது மனசு அடிமையாகி, உங்களது வளர்ச்சி நிலையும் மட்டுப்பட்டுப்போகிறதா இல்லையா? இதுதானே யதார்த்தத்தில் நடக்கிறது.**

முனியனுக்கும், நெருப்பில் கிடந்து அல்லாட வேண்டும் என்று ஆசை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவரின் கவனம் எல்லாம் வேலையில் இருந்தது. தான் நெருப்பில் கிடந்து வேகிறோம் என்ற எண்ணம் அவர் மனதில் அப்போது இல்லை. ஆனால் புலம்புகிறவர்களின் கவலை எல்லாம், தாங்கள் செய்யும் வேலையில் இருக்கிற கஷ்டங்களின் மீதேதான் இருக்கிறது.

ஒரு வேலையை விரும்பிச் செய்கிறபோது உங்களுக்கு அதன் கஷ்டம் தெரிவதில்லை. வருந்திச் செய்கிறபோது உங்கள் கஷ்டம் பல மடங்காகிறது.



நீங்கள் அழுதாலும், புரண்டாலும் அந்த வேலையைத்தான் நீங்கள் செய்தாக வேண்டும் என்றால் ஏன் நீங்கள் அதற்காக அழ வேண்டும். அதை ரசித்துச் செய்தால் நீங்கள் ஆசைப்படு கிற விஷயம் உங்களுக்கு மிகவும் அருகில் வரும்... அழுது கொண்டே செய்தால், "அய்யோ பாவம்" கரிசனங்கள் உங்களைத் தேடி நிறைய வரும். நீங்கள் எதை விரும்புகிறீர்கள்.

"உங்களுக்கு எது வேண்டுமோ அதைச் செய்யுங்கள்."



# 4

புதிதாய் ஒரு புத்தகக்கடை. புத்தம்புது மலர்கள் நிரம்பிய ஒரு பூக்கடை. உற்சாகமாய் பள்ளிக்கூடத்திற்கு போகிற பிள்ளைகள் என்று அந்தப் பாதையில் பட்ட காட்சிகள் எல்லாம் எனக்குப் புதிதாய் இருந்தன. நீண்டதொரு பயணத்திற்குப் பிறகு. வெந்நீர் வைத்துக் குளித்த மாதிரி இருந்தது அந்தப்பயணம்.

அமெரிக்காவின் மீசௌரி பல்கலைக்கழகத்தில் எனக்கு வில்லியம் தாமஸ் என்றொரு நண்பர் இருக்கிறார். வாழ்வியல் அணுகுமுறைகள் குறித்த பயிற்சியாளர் அவர். ஒருமுறை போனில் அவரிடம் பேசிக்கொண்டு இருந்தபோது... So how is life என்று கேட்டார். As usual... going on என்றேன்.

ஏன் இவ்வளவு அலுப்பு – இது தாமஸ்.

Nothing interesting இது நான்.

அதற்கு Then make it interesting... என்றார் அவர் சிம்பிளாக.

வாழ்க்கையை சுவாரஸ்யமாக வைத்துக் கொள்வது என்பது அப்படி ஒன்றும் கடினமான விஷயமல்ல... அது இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் என்றார் தாமஸ்.

உங்கள் ஒட்டு மொத்த வாழ்க்கையையும் சுவாரஸ்யமிக்கதாக, அலுப்புத் தட்டாத ஒன்றாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற பெரிய நோக்கம் உங்கள் எல்லாருக்கும் இருக்கிறது. வாழ்க்கையை மொத்த உருவாக பார்க்கிறபோது உங்களுக்கு மலைப்பாக இருக்கிறது.

உங்கள் வாழ்வில் நீங்கள் எதிர்கொள்கிற சின்ன சின்ன விஷயங்களைக்கூட இரசிக்கத் தொடங்குங்கள். அதன் மூலம் உங்கள் வாழ்க்கையைச் சுவாரஸ்யமுள்ளதாக்கத் தொடங் குங்கள். உங்கள் ஒட்டுமொத்த வாழ்க்கையுமே சுவாரஸ்ய மானதாகி விடும் என்கிறார் அவர்.

நீங்கள் தினமும் எந்த வழியாய் அலுவலகத்துக்குச் செல்வீர் கள்? - இதுதான் என்னிடம் தாமஸ் கேட்ட முதல் கேள்வி.

வழக்கமான பாதையில்தான்... என்றேன் நான். இன்று வேறுபாதையில் சென்று பாருங்கள். சுவாரசியப் படுத்தலின் முதல் அடி அதுதான் என்றார் தாமஸ்...

உண்மையிலேயே அன்று நான் பயணித்த அந்த மாற்றுப் பாதை, எனக்கு மிகவும் புதியதாய் இருந்தது. அங்கே நிறையக் கடைகள் முளைத்திருந்தன. புதியதாய் ஒரு புத்தகக்கடை, புத்தம்புது மலர்கள் நிரம்பிய ஒரு பூக்கடை, உற்சாகமாய் பள்ளிக்கூடத்திற்கு போகிற பிள்ளைகள் என்று அந்தப் பாதையில் பட்ட காட்சிகள் எல்லாம் எனக்குப் புதிதாய் இருந்தன. நீண்டதொரு பயணத்திற்குப் பிறகு, வெந்நீர் வைத்துக் குளித்த மாதிரி இருந்தது அந்தப் பயணம்.

வாழ்க்கையில் புதிது புதிதாய் பார்ப்பதற்கும், ரசிப்பதற்கும் இப்படி நிறைய விஷயங்கள் இருக்கவே செய்கின்றன. நீங்கள்தான் அவற்றை கவனிப்பதே இல்லை.

**பூப்போட்ட சட்டை, இட்லி, தோசை, 9 மணி ஆபீஸ், 4 மணி காபி இப்படி எல்லா விஷயங்களிலும் வாழ்க்கையை சுவாரஸ்யமாக்கிக் கொள்ள நமக்கு வாய்ப்புகள் பலவும் இருந்து கொண்டேதான் இருக்கின்றன.**

இந்த சின்னச்சின்ன விஷயங்களைக் கவனிக்காமல் அந்த பெரிய சுவாரஸ்யம் பற்றியே நீங்கள் அங்கலாய்க்கிறீர்கள். மனிதனாக வாழக்கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை ஏன் நீங்கள் ஏனோ - தானோ என்று கழிக்க வேண்டும். இந்தச் சின்ன சின்ன புதுமைகள் மூலம் நீங்கள் அனுபவிக்கும் சுவாரஸ் யங்கள், உங்கள் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை என்று நீங்கள் நினைக்கலாம்.



ஆனால் இந்த மாற்றங்கள் தரும் உற்சாகம் உங்களை வாழ்வின் பல உயரங்களுக்கு அழைத்துப்போகும்.

புதிய பாதையில் பயணம் செய்த அன்று மீண்டும் தாமசுக்கு போன் செய்தேன். புதிய பாதையில் இருக்கிற புதிய விஷயங்களை கவனித்தீர்களா என்று கேட்டார். Yes its was Interesting என்றேன். Good. இனி வாழ்க்கையை சுவாரஸ்ய மாக்கிக் கொள்ள யாரும் உங்களுக்குச் சொல்லித்தர வேண்டியது இல்லை என்றார். வாழ்க்கையை சுவாரஸ்ய மாக்கிக் கொள்ள நாம் எடுக்கும் முயற்சிகளின் முதல் புள்ளி தினந்தோறும் நம்மை புதுப்பித்துக் கொள்ள உதவும் என்கிறது அவரது நிரூபிக்கப்பட்ட பாடமுறைகள்.

சிலபேர் ஹோட்டலுக்குப் போனால்கூட எப்போதும் இட்லியும், தோசையும்தான் ஆர்டர் செய்வார்கள். புதிய விஷயங்களைப் பரீட்சித்து பார்ப்பதில் அவர்களுக்கு ஆர்வமில்லை என்பதை விட, புதியது இன்னமும் மோசமாக



இருந்தால் என்ன செய்வது... என்ற அவர்களது எண்ணமே அதற்குக் காரணம். அதற்குப் பதில் புலம்பிக்கொண்டே

எப்போதும் சாப்பிடுவதையே சாப்பிட்டு விட்டுப் போய்விடலாம்.

புதியதை ரசிக்காமல், கவனிக்காமல், பரீட்சிக்காமல் இருந்தால் வாழ்க்கை எப்படி இனிக்கும். உங்களுக்கு என்னதான் மிகவும் பிடித்த நடிகராக இருந்தாலும், அவர் எல்லா படத்திலும் ஒரே மாதிரிதான் இருப்பார் என்றால் அதில் என்ன சுவாரஸ்யம் இருக்கப்போகிறது. அற்பமான விஷயங்களையாவது அடிக்கடி மாற்றினாலன்றி அவர் தன் ரசிகர்களை கைக்குள் வைத்துக்கொள்ள முடியாது.

வச்சது வச்ச இடத்துலே இருக்கணும் என்று சொல்லு கிறவர்கள்கூட, தாங்கள் அவ்வாறு செய்வதில் ஒரு சுவாரஸ்யத்தை காண்கிறார்கள்.

**அதெல்லாம் சரி. வாழ்க்கையை ஏன் சுவாரஸ்யமாக வைத்துக் கொள்ளவேண்டும். இப்போது அது நன்றாகத்தானே இருக்கிறது... என்று நீங்கள் நினைக்கலாம். வழக்கமானதொரு வட்டத்துக்குள் வாழும் இந்த வாழ்க்கையே உங்களை இவ்வளவு உயர்த்தி இருக்கிறது என்றால், சுவாரஸ்யம் தரும் உற்சாகம் உங்கள் முழுத்திறனையும், களைப்பு இல்லாமல் வெளிப்படுத்த உதவும்.**

செய்கிற வேலை எதுவாக இருந்தாலும் அதை களைப்பின்றி செய்யவும், அதில் கிடைக்கும் சுகத்தை அனுபவித்து உணரவும் இந்த சுவாரஸ்யப்படுத்திக் கொள்ளுதல் அவசியம் - இது தாமஸ் எனக்கு சொன்னது.

அதே வீடு, அதே வேலை, அதே மூஞ்சிங்க, சிடு மூஞ்சி மேனேஜர் போர்ப்பா... என்று கடனே என வாழ்வதில் என்ன சுகத்தைக் கண்டீர்கள். இந்த பிரபஞ்சத்தில் உங்களால் மாற்ற முடியாதது என்று ஆயிரம் இருக்கலாம். மாற்றக்கூடியதென்று ஒன்றிரண்டாவது இங்கு உண்டுதானே... அதில் புதிதாய் ஏதாவதொன்றை செய்யலாமே.

உங்கள் புத்தக அலமாரியை வழக்கமான இடத்திலிருந்து மாற்றி வைக்கலாம். தங்கச்சிக்கு கணக்கு பாடம் சொல்லிக் கொடுக்கலாம். எப்போதும் நீங்கள் பார்த்து சிரிக்கிற பெண்ணையோ பையனையோ கண்டு கொள்ளாதது போல பாவ்லா காட்டலாம்.



சில நாட்களுக்கு உங்கள் இரண்டு சக்கர வாகனத்தை ஓரம் கட்டி வைத்து விட்டு பேருந்தில் போகலாம். கொஞ்சம் ஊர் தாண்டி இருக்கிற டூரிங் டாக்கீசுக்குப் போய் தரையில் உட்கார்ந்து படம் பார்க்கலாம். அப்பாவுக்கு பேண்ட்- சர்ட் போட்டு அழகு பார்க்கலாம்.


உங்கள் அறிவாளி மூளையை கழற்றி வைத்து விட்டு முட்டாள்தனமான குழந்தைத் தனங்களில் இறங்கலாம். பழைய நண்பருக்கு போன் செய்து பேசலாம்.



இந்த உலகம் எப்போதும் ஒரே மாதிரிதான் இருக்கும். அதை வெவ்வேறு கோணங்களில் நின்று கவனிப்பதும், ரசிப்பதும் நம்மிடம் இருக்கிற ரசனை சார்ந்த விஷயம்.

ஹ¨ம்... என்னத்த பண்ணி, என்னத்த செஞ்சு... என்று அலுப்பு தட்டுகிற அளவுக்கு புராணம் பாடுகிற என்னத்த கண்ணையாக்கள்தான் இங்கு அதிகம்.

தலையில் வகிடை மாற்றி எடுத்தால்கூட, வாழ்க்கையின் சுவாரஸ்யம் கூடத்தான் செய்கிறது. ஆனால் அது குறித்து நாம் பெரிதாக கவனம் செலுத்துவதில்லை என்கிறார்கள் நிபுணர்கள். ஒரு நிலையில் மூளை முடங்கிப்போய், மனதும் சலித்துக் கொள்கிறது.



மனதை தெளிவாக வைத்துக்கொள்வது என்பது, புதிது புதிதாய் வாழ்க்கையின் பக்கங்களை புரட்டிப் பார்க்கிற போதுதான் நடக்கிறது. இந்த குட்டிக் குட்டி மாற்றங்கள் தரும் புத்துணர்ச்சி உங்களுக்கு நிறைய சக்தியைக் கொடுக்கும்.

டி.வி. விளம்பரத்தில் வருவதுபோல் நீங்கள் கம்பியை பிடித்தெல்லாம் தொங்க வேண்டாம். உங்கள் வாழ்க்கையை, உங்களைச் சுற்றி நடப்பதை வேறு கோணத்திலும் ரசிக்க ஆரம்பியுங்கள்... வாழ்க்கை சுவாரஸ்யமாகும்.

நீங்கள் போகும் வழியில் இருக்கும் சிக்னலில் நிற்கும் போலீஸ்காரரின் ஸ்டைல், நீங்கள் டீ குடிக்கிற கடைக்காரர் டீ ஆற்றுகிற அழகு, உங்கள் பேருந்தின் ஓட்டுனர் தன் காலரைத் தூக்கி விடும் பந்தா, அயர்ன் வண்டிக்காரர் சட்டையை தேய்க்கிற நேர்த்தி இதையெல்லாம் கவனித்து இருக்கிறீர்களா? இல்லையென்றால் இன்னும் நீங்கள் வாழ்க்கையை சுவாரஸ்யமாய் பார்க்க ஆரம்பிக்கவில்லை என்றுதான் அர்த்தம்.

அட போங்க பாஸ்... அதுக்கெல்லாம் எங்க நேரம் இருக்கு... இருக்கிறதை பார்க்கவே நேரம் இல்லை என்று நீங்கள் சொல்வீர்களானால், நீங்கள் சுவாரஸ்யப்படுத்திக் கொள்ளலின் பலனை உணரவில்லை என்று அர்த்தம் அல்லது மனதார பொய் சொல்கிறீர்கள்.



**வாழ்க்கையில் தொடர்ந்து வெற்றி பெற்றுக் கொண்டி ருக்கிற, பரபரப்பாக ஓடிக் கொண்டிருக்கும் உலகின் மிக முக்கியமான புள்ளிகள் எல்லாரும் தங்களை மனதளவில் புத்துணர்ச்சி யுள்ளவர்களாக வைத்துக்கொள்ள, புதிது புதிதாய் தங்களின் செயல்பாடுகளை மாற்றிக்கொள்கிறார்கள் என்கிறார் தாமஸ்.**

நீங்கள் அவர்களைவிட பிஸியாக இருந்தால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் அவர்கள் இவ்வளவு பிஸியாகவும் வெற்றியாளர்களாகவும் இருப்பதற்கு காரணமே அவர்கள் தங்கள் வாழ்க்கையை சுவாரஸ்யமாக்கிக் கொண்டதுதான்.

போங்க பாஸ்... போங்க. தெரு நாயைத் தூக்கிக் கொஞ்சி விளையாடுங்க. அதுக்கு 'ஜிம்மி'ன்னு பேர் வைச்சுக் கூப்பிடுங்க. அதுக்கு பிஸ்கட் வாங்கிக் கொடுங்க. இன்னைலேர்ந்து உங்களுக்கு ஒரு புது நண்பன் கிடைச்சாச்சு.

சிக்னலில் வெறுப்பாகி நிற்காமல், பக்கத்து காரில் ஒரு அழகான குழந்தை உங்களைப் பார்த்து சிரிப்பதை கவனியுங் கள். நீங்கள் எரிச்சலோடு நிற்கிற அதே வரிசையில் ஒரு காதல் ஜோடி கிசுகிசுவென பேசிக்கொண்டு காதல் செய்து கொண்டிருக்கிறார்கள்...

உங்களுக்கு எரிச்சலான நேரம் அடுத்தவனுக்கு ஆனந்த மாகத்தான் இருக்கிறது. ஆக எல்லா நேரமுமே சுவாரஸ்ய மானதுதான்.

எந்த கணத்தையும் சுவாரஸ்யமாக்கிக் கொள்ள, நம்மைச் சுற்றி நிறைய விஷயங்கள் கொட்டிக் கிடக்கின்றன நாம்தான் அவற்றைக் கவனிப்பதில்லை.

தாமஸ் சொன்னது மாதிரி... வாழ்க்கை போரடிச்சா... அதை சுவாரஸ்யமானதாக ஆக்கிக் கொள்ளுங்கள். - அது ரொம்ப சிம்பிள்...



# 5

குழந்தை தடுமாறி விழுவதும், கஜினி முகம்மது 17 முறை படையெடுத்ததும் தோல்வி என்றால்... நீங்கள் தோல்வியடைவதில் எந்தப் பிரச்சனையுமில்லை.

"எதிர்க்கட்சிக்காரன் பார்த்தா என்ன நினைப்பான்" கவுண்டமணியின் பாப்புலர் ஆன காமெடி டயலாக் இது.

சீரியஸ் ஆகவே நமது வாழ்க்கையை இப்படித் தான் வைத்திருக்கிறோம் என்று சொல்கின்றன ஆய்வுகள்.

எந்த ஒரு செயலையும் செய்யத் துவங்கும் முன் அதில் இருக்கிற சாதக பாதகங்களைப்பற்றி ஆராய்கிறோமோ இல்லையோ அடுத்தவர் இதைப்பற்றி என்ன சொல்லுவார்களோ என்பது பற்றிதான் அதிகமாக யோசிக்கிறோம்.

அதிலும் நமக்கு வேண்டாதவர்கள் என்ன சொல்வார்கள் என்பது பற்றித்தான் நமக்கு அதிக அக்கறை. அவர் உனக்கு வேண்டாதவர்தானே. அப்படியிருக்கையில் அவர் என்ன சொன்னால் தான் என்ன? இந்த அலசல்களை எல்லாம் நம் மனசு செய்தாலும்கூட அடுத்தவர் என்ன சொல் லுவார் என்று கவலைப்படுவதை நம் மனசு நிறுத்தாது.



இந்த சுற்றம், சமூகம் இதனோடு இணைந்து வாழ்வதுதான் நமது பலம். அமெரிக்காவில் நல்லதோ, கெட்டதோ அடுத்த வீட்டுக்காரன் என்ன சொல்வான் என்பதைப் பற்றியெல்லாம் அக்கறைப்பட மாட்டார்களாம்.

அதற்குக் காரணமும் உண்டு. அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு பின்புலங்களில் இருந்து வந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள். அதனால் அடுத்தவர் விஷயத்தில் மூக்கை நுழைப்பது என்பது இயல்பிலோ அல்லது பழக்கத்திலோ அங்கு கிடையாது.

நமக்கு அப்படி இல்லைதான். நல்லது கெட்டதுக்கு நாலு பேர் வேண்டும்தான். ஆனால் உங்கள் விருப்பு வெறுப்பு களைக்கூட அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அதற்காக உங்கள் மனதில் பட்டதை யெல்லாம் செய்ய வேண்டும் என்றும் அதற்கு அர்த்தமில்லை.

நீங்கள் ஆய்ந்து, புரிந்து செயல்படுகிற விஷயம் குறித்து, அதோடு தொடர்பில்லாத இன்னொருவர் என்ன சொல்லுவார் என்று எதற்காக நீங்கள் சங்கடப்பட வேண்டும். அதற்குக் காரணம் நீங்கள் தோற்றுப்போனால் அவர் உங்களை ஏளனமாகப் பேசி விடுவார் என்பதுதான். அவர் ஏளனமாகப் பேசிவிடக் கூடாது என்பதா உங்கள் வாழ்வின் லட்சியம்.

அப்படிப் பார்த்தால் வாழ்க்கையில் நீங்கள் எந்தவொரு விஷயத்தையும் செய்துவிட முடியாது. தனக்கு அறிமுக மில்லாத, அனுபவம் இல்லாத விஷயம் பற்றி இன்னொருவர் விமர்சனம் செய்வது சகஜம்தான். நீங்கள் அதில் வென்றால் அதற்கு உங்கள் அசாத்தியத் துணிச்சல்தான் காரணம் என்கிற சமூகம் தோற்றால் அது உங்கள் அசட்டுத் துணிச்சலால்தான் என்கிறது.

எப்படிப் பார்த்தாலும் உங்களது செயல் யாரோ ஒருத்தருக்கு உறுத்தலாகத்தான் இருக்கப்போகிறது. உங்கள் வீட்டுப் பால்கனியில் நீண்ட நாள் கழித்துச் சந்திக்கிற பள்ளித் தோழியோடு அளவளாவிக் கொண்டு இருக்கிறீர்கள்.

கீழே ஒரு வயசுப் பையனும் அழகான பெண்ணும் டூவீலரில் சிரித்துப் பேசிக்கொண்டே போகிறார்கள். பாரு இந்தக்

காலத்து பசங்களை... டூ வீலர்ல போகும்போதே கூத்தடிக் குதுங்கன்னு நீங்கள் உங்கள் தோழியிடம் சொல்லலாம்.

அநேகமாய், அந்த டூவீலரில் போகிற பையன், பின்னால் உட்கார்ந்து இருக்கும் பெண்ணிடம், பாரேன், கொஞ்சம்கூட கூச்சமில்லாம அதுங்க ரெண்டும் பால்கனியில் கொஞ்சிக்கிட்டு இருக்குதுங்கன்னு சொல்லலாம்.

உங்கள் இரண்டு ஜோடிகளையும் பார்க்கிற பெரியவர் (பாருங்கள்... நான்கூட உங்களை ஜோடி என்றுதான் விமர்சிக்கிறேன்) கலிகாலம்டா... பால்கனில, பைக்ல எங்க பாரு ஜோடி ஜோடியா திரியதுங்கனு விமர்சிக்கலாம்.

**எல்லாருக்கும் நல்லவனாக இருக்க யாராலும் முடியாது. நீங்கள் தப்பு செய்ய வேண்டும் என்று நினைக்காமல் செய்யும் எந்த செயலுக்காகவும், சம்பந்தமில்லாதவர்களின் விமர்சனங்களுக்காகப் பயந்து கொண்டு அதை செய்யாமல் முடங்கிப் போகாதீர்கள்.**

தோல்வி என்பது அவமானகரமானது என்று பல தலைமுறைகளாக உங்கள் மூளைக்குள் ஏற்றப்பட்டு இருப்பதால்தான் இந்த சங்கடம் உங்களுக்கு நேர்கிறது. தோற்றால் மீண்டு எழ நீங்கள் தயார். ஆனால் அடுத்தவரின் கேலிப் பேச்சை சந்திக்க நீங்கள் தயாராயில்லை.

உங்களிடம் ஒரே ஒரு கேள்வி: தோற்காமல் ஜெயித்தவர்கள் யாராவது ஒருவரைக் காட்டுங்களேன்... ப்ளீஸ்!

குழந்தை நடப்பதற்கு முன்னால் தடுமாறித் தடுமாறி விழுகிறதே அது அதற்குக் கிடைத்த தோல்வியா? இல்லவே இல்லை. நடப்பதற்கான அதன் முயற்சி அது.

அப்படித்தானே எல்லாமும். சமூக அபிப்பிராயங்களுக்காக பயந்து கவலைப்பட்டுக் கொண்டு நம் கனவுகளை எல்லாம் பல வருடங்களாக காயப்படுத்தி வைத்திருக்கிறோம். உங்களுடைய முயற்சியில் ஏற்படுகிற விளைவுக்கு அடுத்தவர்கள் வெற்றி, தோல்வி என்று என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளட்டும்.



நீங்கள் அதை எப்படி அணுகப் போகிறீர்கள் என்பதுதான் முக்கியம். கவிஞர் வைரமுத்துவிடம் வெற்றி- தோல்வி இவை இரண்டையும் நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் எளிமையாகவும் தெளிவாகவும் ஒரு விளக்கம் சொன்னார்.

"வெற்றி என்பதும் தோல்வி என்பதும் உங்கள் பார்வைதான். எனக்கு அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. இந்த வருடம் எனக்கு தேசிய விருது கிடைத்தது உங்கள் பார்வையின்படி அது எனக்குக் கிடைத்த வெற்றி என்றால், அடுத்த வருடம் அது எனக்குக் கிடைக்காமல் போனால் அதன் பெயர் தோல்வி என்றாகி விடும். இது இரண்டுமே என்னைப் பற்றிய உங்கள் பார்வைகள்தான். என்னைப் பொறுத்தவரை, வெற்றி என்பதும் தோல்வி என்பதும் இருவேறு சம்பவங்கள்... இந்த வாழ்க்கை என்பது பல சம்பவங்களால் ஆனது. அவ்வளவுதான்.

இப்படி புறச்சூழ்நிலைகளையும், சொந்தப் புரிதலையும் வேறுபடுத்திப் பார்க்க முடிந்ததால்தான் இத்தனை தேசிய விருதுகளுக்கு வைரமுத்து சொந்தக்காரர்.

**நீங்கள் செய்கிற வேலை, எதிர்பார்த்த அளவுக்கு பலன் தரவில்லை என்றால், நீங்கள் அதை செய்த முறை தவறு. அதை சரி செய்ய முயலுங்கள். அவ்வளவுதான். இதில் மூன்றாவது மனிதர் எங்கிருந்து வந்தார்.**

உங்களை இந்த சமூகம் ஹீரோவாகப் பார்க்க வேண்டும் என்கிற ஆசையும், ஆவலும் தானே உங்களுக்கு தோற்கக் கூடாது என்ற பயத்தையும் தந்தது. உலகம் உங்களைப் பார்ப்பது இருக்கட்டும். நீங்களே உங்களை ஒரு ஹீரோவாகப் பார்க்கிறீர்களா? உங்கள் ஹீரோ இமேஜை உங்களின் வெற்றி, தோல்விகளுக்கு ஏற்ப சுற்றம் தூக்கி வைத்துக் கொண்டாட லாம் அல்லது பொத்தென தரையில் போட்டு விட்டு சிரிக்கலாம்.

ஆனால் நீங்கள் உங்களுடைய அந்த மன ஹீரோவை எப்போதும் உயிர்ப்புடன் வைத்திருங்கள். அவனை மோட்டிவேட் பண்ணிக் கொண்டே இருங்கள். அடுத்து

ஜெயிக்கப் போகிறேன் என்று அவனிடம் சொல்லுங்கள். ஊர் உங்கள் மன ஹீரோவை என்ன வேண்டுமானாலும் சொல்லி விட்டுப்போகட்டும். ஆனால் உங்களைப் பொறுத்தவரை அவன்தான் சூப்பர் ஸ்டார்.


புரிதல் இல்லாமல் உங்கள் தோல்வியைப் பற்றி மட்டுமே விமர்சிப்பவர்களைப் பற்றி ஏன் நீங்கள் கவலைப்பட வேண்டும். அவர்களுக்கு தோல்வி என்றால் என்ன என்றே தெரியாதே. கஜினிமுகம்மது 16 முறை தோற்று 17வது முறையாக வென்றான் என்று இன்னமும் அவர்கள் தங்கள் வசதிக்கேற்ப சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

போரிட்ட 16 தடவையும் கொஞ்சம் கொஞ்சமாக செல்வ வளங்களை நம்மிடமிருந்து கஜனி முகம்மது அபகரித்துக் கொண்டு போய் தன் கஜானாவில் சேர்த்ததை இன்னமும் கஜினி முகம்மது தோற்றான் என்று கதை சொல்கிறவர்களுக்கு, தோல்வி, வெற்றி இரண்டைப் பற்றியுமே தெரிவதற்கு வாய்ப்பு இல்லை. அவர்களைப் பொறுத்த வரையில் ஜெயித்தால்தான் நீங்கள் ஹீரோ. அது அவர்கள் அபிப்ராயம். தோற்றாலும் உங்கள் மன ஹீரோ எப்போதுமே உங்களுக்கு ஹீரோதான். அவனை களைப்படையாமல் வைத்திருக்க வேண்டியது உங்கள் பொறுப்பு.

சினிமாவில்கூட ஹீரோ என்றால் ஜெயிக்க வேண்டும் என்று ஒரு எழுதப்படாத சட்டம் இருக்கிறது. எல்லாருமே ஜெயிக்கத்தான் வேண்டுமென்றால் யார்தான் தோற்பது. அடிப்படையில் தோல்வி என்ற ஒன்று இல்லவே இல்லை... பிறகேன் அது குறித்த வேண்டாதவர்களின் கேலிச் சொல்லுக்காக நீங்கள் கவலைப்பட வேண்டும்.

குழந்தை தடுமாறி விழுவதும், கஜினி முகம்மது 17 முறை படையெடுத்ததும் தோல்வி என்றால்... நீங்கள் தோல்வியடைவதில் எந்தப் பிரச்சினையுமில்லை.

புரியாதவர்கள் புலம்பிக் கொண்டிருக்கட்டும். உங்கள் மன ஹீரோவுடன் கைகுலுக்கி விட்டு கஜினி முகம்மதுவின் குதிரையில் ஏறுங்கள். இந்த உலகம் முழுவதும் உங்களுக்குத் தான். விளையாடுங்கள்.



# 6

யோசித்துப்பார்த்து பிரச்னை என்னவென்று கண்டுபிடித்து விட்டால்... அதனைத் தீர்க்க வேண்டுமே... அதனை சந்திக்க வேண்டுமே... அதற்கு பதிலாக இப்படி முனகிக் கொண்டே இருந்தால் அதுவாகவே சரியாகி விடும் என்பது நம் எண்ணம். உளவியல் ரீதியாக உண்மை அப்படி இல்லை.

மனசு என்னமோ மாதிரி இருக்கிறது. ஏன்னே தெரியலை. Really I am Feeling down. கோயிலுக்குப் போகலாமா...? சினிமாவுக்குப் போகலாமா... இல்லை. ஒரு ரவுண்ட் விடலாமா? இப்படி நமக்கு, நாம் சோர்வுற்ற நேரங்களில் நிறைய யோசனைகள் வரும்.

சரி நண்பரிடம் பேசுவோம் என்று...

அவரிடம்... மனசு என்னமோ மாதிரி இருக்கு என்றால்...

ஏன் என்ன பிரச்னை என்கிறார் அந்த நண்பர்.

தெரியலை ஆனா மனசு ஒரு மாதிரி இருக்கு.

உங்களுக்கு என்னமோ மாதிரி இருக்க என்ன காரணம் என்றே உங்களுக்கே தெரியவில்லை என்றால் யார்தான் அதற்கு தீர்வு சொல்வது.

உங்களுக்கு மட்டும்தான் உங்கள் மனசு ஏன் அப்படி இருக்கிறது என்பதற்கான காரணம் தெரியும். என்ன... அதற்கு நீங்கள் கொஞ்சம் ஆழ்ந்து யோசிக்க வேண்டும். அப்படி யோசித்தால் கொஞ்சம் மங்கலாகத் தெரிகிற விஷயம், மிகவும் தெளிவாகப் புரியும்... இதெல்லாம் உங்களுக்கும் தெரியும். ஆனாலும் நீங்கள் யோசிக்கமாட்டீர்கள்.

யோசித்துப் பார்த்து அந்த பிரச்சினை என்னவென்று கண்டுபிடித்து விட்டால்... அது என்னவென்று தெரிந்து விட்டால் அதனைத் தீர்க்க வேண்டுமே... அல்லது அதனை சந்திக்க வேண்டுமே... அதற்கு பதிலாக இப்படி முனகிக் கொண்டே இருந்தால் அதுவாகவே சரியாகி விடும் என்பது நம் எண்ணம். உளவியல் ரீதியாக உண்மை அப்படி இல்லை. ஆரம்பத்தில் அரசல் புரசலாக உங்களால் உணரப்படுகிற அந்த விஷயத்தை, என்னமோ மாதிரி இருக்கு என்று தள்ளிப் போட்டுக் கொண்டே போனால் அடுத்த பிரச்னை உங்கள் முன் வந்து நிற்கும்போது, இந்த பழையது உங்கள் மனசுக்குள்ளேயே தங்கிப் போகிறது.

புதிதாய் வந்த பிரச்னையை நீங்கள் சந்தித்து அதற்கு தீர்வு கண்டுபிடித்து விட்டாலும் பழையது ஆழ்மனதுக்குள் பொதிந்தேதான் கிடக்கிறது. **நீங்கள் கவனிக்காமலும் கண்டு கொள்ளாமலும் விட்ட விஷயம் மெகாசைஸ் 'என்னவோ மாதிரி இருக்குது' ஆக மாறி உறுத்திக் கொண்டே இருக்கிறது.**

இப்போ அந்த என்னவோ மாதிரி இருக்குது மேட்டரை சந்திக்க நீங்கள் தயார். ஆனால் அதற்குள் புதிது புதிதாய் நீங்கள் பல விஷயங்களை சந்தித்து விட்டதால் பழைய விஷயத்தை மறுபடியும் ஞாபகத்திற்குக் கொண்டு வருவதற்கு சிரமமாகிறது. அந்த உறுத்தல் பெரிதா, சிரிதா என்று தெரியாமலேயே உங்கள் மனசும் உடம்பும் சோர்ந்து போகிறது.

இப்போது நீங்கள் மீண்டும் நண்பருக்கு போன் செய்கிறீர்கள்... ''என்னவோ மாதிரி இருக்குது'' என்று. "என்னன்னு சொல்லித் தொலைடா..." நண்பர் எரிச்சலாகிறார்.



உங்களுக்கும் ஆசைதான் அவரிடம் சொல்ல... ஆனால் அது என்னவென்றுதான் உங்களுக்கும் தெரியாதே. அதனால்தான் 'என்னவோ மாதிரி இருக்கு' வில் இருந்து வெளியே வர கோயில், பீச், ஹோட்டல் என பல இடங்களை நீங்கள் தேட வேண்டி இருக்கிறது.

ஒருவர் மெர்க்குரி லைட் கம்பத்துக்கு கீழ் எதையோ தேடிக் கொண்டு இருந்தார். என்ன சார் தேடுறீங்க என்றார் அங்கு வந்தவர். மோதிரம் கீழே விழுந்துடுச்சு. அதைத்தான் தேடுறேன் என்றாராம் தொலைத்தவர். அக்கறையா விசாரிச்ச பார்ட்டி எங்க, தொலைச்சீங்க என்று கேட்க வீட்டுக்கிட்ட என்றது தொலைச்ச பார்ட்டி. அப்புறம் ஏன் இங்க தேடுறீங்க...? என்றால் இங்கதானே வெளிச்சம் இருக்கு என்று விளக்கம் கொடுத்தது தொலைச்ச பார்ட்டி.



இப்படித்தான் 'என்னமோ மாதிரி இருக்கு' மனசுகளும். அமைதியாக உட்கார்ந்து, ஆழமாக கவனித்தால் ஓ... இதுதானா விஷயம்! இதுக்குத்தான் இவ்வளவு நெருடலா இருந்ததா என்று தீர்வுக்கு வரலாம். வெளிச்சம் இருக்கிற இடமாப்பார்த்து தேடுற மாதிரி கோயிலிலும், ஹோட்டலிலும், கடற்கரையிலும் அதை தேடினால் கடைசி வரை உங்கள் மோதிரம் கிடைக்கப் போவதில்லை.

இந்த 'என்னமோ மாதிரி இருக்கு' உணர்வு நம் எல்லோருக்கும் ஏற்படுவதுதான். பல நேரங்களில் அது அற்பமான விஷயமாகத்தான் இருக்கும்.

அதை உடனே மீண்டும் ஞாபகத்திற்குக் கொண்டு வராமல் விடுகிறபோது மனசுக்குள் பூதாகரமாக அது உருவெடுத்து நிற்கிறது. இதுமாதிரி நிறைய என்னமோ மாதிரிகள் சேர்ந்துதான் ஒருவருக்கு மனதளவில் களைப்பையும்

உடலளவில் சோர்வையும் கொடுக்கிறது என நிபுணர்கள் சொல்கிறார்கள்.

நண்பன் ஒருவன் அன்பாகத் திட்டியது, தோழி ஏதோ வருத்தத்தில் கோபித்துக் கொண்டது. தலைவலிக்கு டாக்டரைப் பார்க்கப் போகவேண்டும் என்று நினைத்திருந்தது. உண்மை புரியாமல் 'நீ முன்ன மாதிரி இல்லை' என்று யாரோ சொன்னது. உங்க நண்பர் சரியில்லை அவர்கூட கொஞ்சம் கவனமாக டீல் பண்ணுங்கன்னு ஒருத்தர் குறிப்பால் உணர்த்தியது. தொலைபேசி கட்டணம் சம்பந்தமாக ஒரு விளக்கம் கேட்க வேண்டியது. இதையெல்லாம் அவ்வப்போது ஞாபகத்திற்கு கொண்டு வந்து சரி செய்து விட்டால் சாதாரண விஷயம்தான்.

இவற்றையெல்லாம் மனதுக்குள்ளேயே ஊறப்போட்டீர்கள் என்றால் அற்ப காரணத்துக்காக நீங்கள் தூக்கம் இல்லாமல் தவிப்பீர்கள்.

**மனசு என்னமோ மாதிரி இருக்குது விஷயத்தை கையாள சில நடைமுறை சாத்தியமான வழிகளும் உண்டு. மனதை உறுத்துவது பெரிய விஷயமாக இருந்தால் அதன் முழு வடிவத்துக்கும் தீர்வு சொல்ல உடனே முனையாதீர்கள்.**

என்னோட நண்பர் ஒருத்தங்க எலனா பெர்கோவிக் என்று பெயர். குரோஷிய நாட்டின் முன்னணி உடல் நலம் குறித்த பத்திரிகையை சேர்ந்தவர். மனவியல் வல்லுநர்கள் நிறைய பேரை சந்திக்க வாய்ப்பு பெற்றவர். அவர் சொன்ன ஒரு முடிவு இதுதான்.

முதலில் என்னவோ மாதிரி இருப்பதன் பின்னணியில் இருக்கிற பிரச்சினையை தெரிந்து கொள்ளுங்கள்...

மனதை அரிக்கிற அந்த பிரச்சினை என்ன?

வயசாகிகிட்டே போகுது. இன்னும் சரியாக சம்பாதிக்கலை, நல்ல வேலை இல்லை, வங்கியில் இருப்பு ஏதும் இல்லை. இன்னும் வீடு வாங்கலை, கல்யாணம் பண்ணலை. பார்க்கிற வேலையும் பிடிக்கலை. இப்படி பத்து பதினைந்து காரணங்கள் சேர்ந்த ஒரு பிரச்னை உங்களுக்கு.



முதலில் இது எல்லாத்தையும் சேர்த்து ஒரே பிரச்னையா மாற்றுங்க. அதாவது இதற்கு ஒரு தலைப்பு கொடுங்க. "வாழ்க்கையில் செட்டில் ஆகணும்." உங்களுடைய இதுதான் பிரச்னை. அடுத்த கட்டமாக இதுக்கு தடையாக இருப்பது என்ன? என்ன என்று கேள்வியை எழுப்புங்கள்.

இப்போது உங்கள் பிரச்னை பொத்தாம் பொதுவாக இல்லை. முதலில் தீர்க்க வேண்டியது எது என்பது குறித்து பிரச்சினையை சுருக்கியாச்சு. ஒகே முதலில் 10,000 ரூபாய் சம்பளத்தில் உங்களுக்கு ஒரு வேலை வேணும். இனி உங்கள் முயற்சிகள் அனைத்தையும் 10,000 ரூபாய் சம்பளத்தை தரும் வேலையை நோக்கி செலுத்துங்கள்.

இப்படி ஒவ்வொரு கேள்விக்காய் விடை தேட ஆரம்பியுங்கள். உங்கள் பிரச்னையின் நீள, அகலம் என்ன என்றே தெரியாமல் இருப்பதும் அதனை பகுதி பகுதியாக பிரிக்காமல் விட்டதும்தான் நீங்கள் செய்த தவறு.

**பிரச்னைக்குள் இருக்கிற சின்ன விஷயம், பெரிய விஷயம் எல்லாவற்றுக்கும் சம முக்கியத்துவம் கொடுத்து மலைத்துப் போய் உட்காருவதை விட ஒன்றொன்றாய் தனித்தனியாய் அவற்றை எடுத்துக்கொண்டு அதற்கு தீர்வுகாண முயலுங்கள்.**

முழு இட்லியை முழுங்க நினைத்தால் விக்கல்தான் வரும். அதை பிட்டு பகுதி பகுதியாக சாப்பிடுங்கள். அதுதான் எளிது.



# 7

முதலில் நீங்கள் உங்களை கவுரவமாகப் பாருங்கள். ஆராதியுங்கள். இந்த உலகம் உங்களை எப்படிப் பார்க்க வேண்டும் என்பதன் முதல் புள்ளி உங்களிடம் இருந்துதான் தொடங்குகிறது.

கடைசியாய் கண்ணாடி முன்னால் நின்று கொண்டு உங்களை நீங்களே ரசித்துப் பார்த்தது எப்போது?

உங்கள் பலகீனங்கள் என்ன? பலங்கள் என்ன என்று எப்போதாவது பரிசோதித்துத் தெரிந்து கொண்டிருக்கிறீர்களா?

உங்களுடைய சிறப்பம்சமாக நீங்கள் நினைப்பது எதை?

நம் சினிமா கதாநாயகிகள் மாதிரி கண்ணாடி முன்னாடி நின்று "கீது நீ ரொம்ப அழகுடி" என்று என்றைக்காவது உங்களை நீங்களே கொஞ்சி யிருக்கிறீர்களா? உங்கள் மன அழகையும், புற அழகையும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது நீங்கள் ரசித்தது உண்டா. அது எப்போதாவது அபூர்வமாக நடக்கிற விஷயம்தானே.



யாரோ ஒருவர், நீங்கள் அழகாய், அம்சமாய் இருப்பதாகச் சொன்னாலன்றி, நாமாகவே நமது அழகையும் தனித் தன்மையையும் ரசித்திருக்கிறோமா? நேசித்திருக்கிறோமா. எல்லாரையும் அப்படி சொல்லிவிட முடியாது என்றாலும், நிறைய பேருக்கு சுயரசிப்புத் தன்மை என்பது கிடையாது என்பதுதான் யதார்த்தம்.

எனக்கு எந்த உடை பொருந்தும், வாய்விட்டு சிரிக்கிற போது நான் எப்படி இருப்பேன். புருவத்தை உயர்த்தி ஆச்சர்யம் காட்டும்போது நான் எப்படி தோற்றமளிப்பேன் இப்படியெல்லாம் நீங்கள் யோசிக்க வேண்டும் என்கிறார்கள் மாடர்ன் ஏஜ் குருக்கள். பர்சனாலிட்டி டெவலப்மென்ட் மாஸ்டர்கள்.

ஏற்கனவே பலபேரு கண்ணாடி முன்னால நின்னுதான் வெட்டியா பொழுத போக்குறாங்க... நீ வேற ஏம்ப்பா உசுப்பேத்துறா என்று கேட்காதீர்கள். அப்படி நிற்கிற பெரும்பாலானோர் அடுத்தவர் பார்வைக்கு நான் எப்படி இருப்பேன் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்திலேதான் அதிக நேரம் அப்படி நிற்கிறார்கள். தன்னைத்தானே ரசித்துக் கொள்ள அல்ல.


**உங்களை அடுத்தவர் ரசிக்க வேண்டும், கவனிக்க வேண்டும், உங்கள் சிறப்பியல்புகளை, உங்கள் தனித்துவங்களை அடையாளங்கண்டு பாராட்ட வேண்டும் என்று நீங்கள் ஆசைப்படுவது உண்மை என்றால், அதை உங்களில் இருந்து நீங்கள்தானே தொடங்க வேண்டும்.**

ஜெயிச்ச போதெல்லாம் உங்களை நீங்களே எப்போதாவது தட்டிக் கொடுத்துக்கொண்டதுண்டா... இப்படி நம்மை நாமே ரசிக்கிற, பாராட்டுகிற மனோபாவம் நமக்குள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அதை விட்டேத்தியாய் விட்டு வைத்திருக்கிறோம்.

நீங்கள் பயிற்சி செய்யும் ஜிம்மில் இந்த சுய பாராட்டையும், சுய தூண்டுதலையும் பார்க்கலாம். உடம்பை அழகாகவும், ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ள விரும்புகிறவர்கள் அப்படி இருப்பார்கள்.

கபாலி... கமான்... You can do it da... Yes... Come on என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டு அந்த பளுவை தூக்குவார்கள். பிறகு ஒரு திருப்தியோடு கண்ணாடி முன்பு சென்று தங்கள் புஜபலத்தையும், மார்பையும் ரசிப்பார்கள். அடுத்தவர்கள் தங்கள் புஜ, பல பராக்கிரமத்தை ஆராதிக்க வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு இருந்தாலும், அவர்களின் முதல் ரசிகன்/ ரசிகை அவர்கள்தான்.

இப்படி தன்னைத்தானே ரசிக்கிற, நேசிக்கிற அவர்களின் செயல்கள் உங்களை ரொம்பவே ஈர்க்கும். அவராக வந்து கையை மடக்கி, தன்னுடைய புஜ பலத்தைக் காட்டவில்லை என்றாலும் நீங்கள் அதன் புகழ்பாடிக் கொண்டு இருப்பீர்கள். ஜனகராஜ் ஒரு படத்தில் சொல்வதுபோல என்னமோ போடா... பின்றடா என்று சொல்லிக் கொள்வதற்கு உங்களுக்குக் கொஞ்சம் கூச்சமாக இருக்கலாம். ஆனால் தன்னையும், தன் அழகு, குறை இரண்டையும் நேசிக்கிற ஒருவரால்தான் தன்னிடமுள்ள சரிகளை மேம்படுத்திக் கொள்ளவும் தவறுகளை கட்டுக்குள் கொண்டுவரவும் முடியும் என்கிறது மனவியல் பயிற்சி.



உங்களை நீங்களே கூர்ந்து கவனிக்கவும், ரசிக்கவும் ஆரம்பிக்கும்போதுதான் உங்களின் மன அழகு, உடல் அழகு,



திறன் இப்படி ஒவ்வொன்றின் மீதும் உங்களுக்கு ஒரு தனி அபிப்பிராயம் ஏற்படுகிறது. இந்த அபிப்ராயம் உங்களைப் பற்றிய நிறைகுறைகளை அலசி ஆராய்ந்து பார்க்கச் செய்து உங்களுக்கே உங்கள்மேல் ஒரு அபிமானத்தை ஏற்படுத்துகிறது.

உங்களைப் பற்றிய அடுத்தவரின் அபிமானம் இதைப் பொறுத்துதான் அமைகிறது. உங்களைப் பற்றிய உங்களின் சொந்த இமேஜைத்தான் நீங்கள் வெளியே பிரதிபலிக்கிறீர்கள். உங்களைப் பற்றிய அடுத்தவரின் அபிப்ராயங்களுக்கும் சில நேரங்களில் நீங்களே பொறுப்பாக வேண்டியிருப்பது இதன் பின்னணியில்தான்.

உங்களைப் பற்றி சம்பந்தமில்லாதவர்கள் சொல்வதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லி விட்டு இது என்ன புதுக்குழப்பம் என்கிறார்களா? குழப்பமெல்லாம் ஒன்றுமில்லை. உங்களை அறிந்தவர்கள் - உங்களோடு சேர்ந்து இயங்கப்போகிற உங்கள் முதல் வட்ட சமூகத்தினர் இவர்களிடம் நீங்கள் உங்களை எப்படி வெளிப்படுத்திக் கொள்ளப்போகிறீர்கள் என்பதைப் பற்றி அலசுவதுதான் இந்த சுயரசிப்புத்தன்மை.

> **நான் அசிங்கம் என்ற அபிப்ராயத்தோடு நீங்கள் இருப்பீர்கள் என்றால் உங்கள் சுற்றமும் உங்களைப் பற்றி அப்படித்தானே நினைக்கும். நீங்களே உங்கள் மனதையும் உடலையும் பற்றித் தரக்குறைவாக நினைக்கிறபோது அடுத்தவர்கள் அப்படி நினைப்பதில் ஆச்சர்யம் என்ன?**

நீங்கள் ஆரோக்கியமாக இருக்கவும், அழகான வடிவம் பெறவும் உங்கள் எடையைக் குறைத்து மெலிந்த தோற்றமுடையவராக நீங்கள் ஆக வேண்டியது அவசியம்தான். அப்படியானால் நீங்கள் அதற்குரிய வேலையைத்தானே செய்ய வேண்டும். அதை விடுத்து "தொந்தியும் தொப்பையுமாக என்னைப் பார்க்க எனக்கே பிடிக்கவில்லை" என்று நினைத்துக் கொண்டால் உங்களைப் பார்க்க யாருக்குமே பிடிக்காது.

உங்கள் எடையைக் குறைக்கிற வழிகள் என்னவென்று உடனடியாக ஆராயுங்கள். அது ஒரு பக்கம் இருக்கட்டும். அதற்காக இருக்கிற உடம்பை ஏன் கேவலப்படுத்திக்

கொள்கிறீர்கள். இந்த குண்டு உடம்பும் அழகுதான். இதை மேலும் அழகாக்கவும், ஆரோக்கியமாக்கவும்தான் என் உடம்பை குறைக்கப் போகிறேன் என்கிற மனோபாவம் உங்களிடம் இருக்க வேண்டியதுதான் இங்கே அவசியம்.

குண்டு உடம்பு பிடித்து விட்டால் ஒல்லியாக மாறத் தயக்கம் காட்டுவோம் என்ற பயம் எல்லாம் வேண்டாம். இந்த குண்டு உடம்பை ரசித்துக் கொண்டே ஒல்லியாக முயற்சிக் கிறபோது... நீங்கள் மேலும் அழகாக முயற்சிக்கிறீர்கள்... எனவே அது தொடர்பான வேலைகள் உங்களுக்கு வேத னையாகத் தெரியாது. அசிங்க மாக இருப்பதிலிருந்து அழ காக முயற்சிப்பதாக நீங்கள் நினைத்தால் நீங்கள் செய்யும் அத்தனைப் பயிற்சியும் உங்களுக்கு ஒரு தண்டனை போலத்தான் தோன்றும்.



எத்தனையோ குண்டு உடம்புக்காரர்களைப் பார்த்து இவர்கள் பொசுபொசு வென்று, கொழுகொழுவென்று அழகாயிருக்கிறார்கள் என்று நீங்கள் நினைத்துக் கொண்டதுண்டல்லவா? காரணம் அது சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் உடல் அப்போதிருக்கும் நிலையை அசிங்கமானதென்று நினைக்கவில்லை. எனவே அதற்கேற்ப அலங்காரம் செய்து கொள்கிறார்கள்.

நீங்களோ "இந்த லட்சணத்துக்கு அலங்காரம் வேறயா" என்று மேலும் உங்களை அவலட்சணமாக்கிக் கொள்கிறீர்கள். அழகு என்ற ஒன்று மட்டுமல்ல... அத்தனை விஷயங்களுக்கும் இந்த சுயரசிப்புத்தன்மை பொருந்தும்.

இந்த உலகில் நீங்கள் போற்றுகிற ஞானிகள், அறிஞர்கள் எல்லாரும் அழகானவர்களோ அடிப்படையிலேயே அறிவாளி கள் என்று ஆரம்பத்தில் நம்பப்பட்டவர்களோ அல்லர். ஆனால் சுயரசிப்பும் சுயகவனமும் கொண்டவர்கள்.



பேராசிரியர் சாலமன் பாப்பையாவை இவ்வளவு கருப்பா இருக்கிற நீ என்ன காலேஜில படிக்கிற என்று கிண்டல் செய்தார்களாம். நான் கருப்பாய் இருப்பது எனக்கு ஒரு குறையாய்ப்படவில்லை. அதனால் அந்த கருத்து என்னை பாதிக்கவில்லை என்றார் அவர்.

"நான் பாவம்", "நான் செஞ்சா எதுவுமே விளங்காது." "அதிர்ஷ்டக்கட்டை" இப்படி சொல்லிக் கொண்டே இருக்கிற எல்லாரும் அப்படியேதான் ஆகிப்போகிறார்கள். உங்கள் உடம்பு மீதும், உங்கள் மன அழகின் மீதும் உங்களுக்கே காதல் வரவில்லை என்றால் யார் வந்து உங்களைக் காதலிக்கப் போகிறார்கள்.

உங்கள் சிறப்புத் திறமைகளை நீங்களே கண்டு ரசித்து பாராட்டவில்லை என்றால் அடுத்தவர்கள் எங்கிருந்து வந்து அதைப் பாராட்டப் போகிறார்கள்.


இந்த மொகரக்கட்டைக்கு இதுபோதும் என்று யாராவது சொன்னால் ஏன் ஆத்திரப்படுகிறீர்கள். நீங்களே உங்களை அப்படித்தானே நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள். அதற்காக உங்களை நான் அகம்பாவம் பிடித்து ஆடச்சொல்லவில்லை. நாங்க யார் தெரியும்ல... என்று வெட்டி பந்தா பண்ணிக் கொண்டு நீங்கள் திரிய வேண்டியதுமில்லை.

**உங்கள் அகம், புறம் இரண்டையும் அணுஅணுவாய் ரசியுங்கள். காதலியுங்கள். உங்கள் புருவ அழகு பற்றி புளாங்காகிதம் அடையுங்கள். உங்கள் கண்ணில் இருக்கிற கூர்மையையும் வசியத்தையும் ரசியுங்கள். முதலில் உங்களை நீங்கள் கௌரவமாகப் பாருங்கள், ஆராதியுங்கள்.**

இந்த உலகம் உங்களை எப்படிப் பார்க்க வேண்டும் என்பதன் முதல் புள்ளி உங்களிடம் இருந்துதான் தொடங்கு கிறது.

நான் அழகா இருக்கேனா என்று இனி யாரிடமும் நீங்கள் கேட்க வேண்டாம்.

உள்ளூர உங்களை நீங்களே ரசிக்க ஆரம்பித்து விட்ட பிறகு இனி எப்போதுமே நீங்கள் கொள்ளை அழகுதான்.



# 8

உங்களுக்கென்று தனிப்பட்ட கருத்துகளை வைத்துக்கொள்வதில் குறையொன்றுமில்லை. வம்படியாய் எந்தச் சூழலிலும் அதை விட்டுக் கொடுக்கமாட்டேன் என்று சொன்னால் உங்களை விட்டு விட்டு எல்லாரும் போய் விடுவார்கள்.

'**கொ**ண்ட கொள்கையில் உறுதியாக இருப்பதற்காக நான் எதை வேண்டுமானாலும் இழப்பேன்'. ரொம்பவும் உறுதியாகத் தெரிகிற இந்த வார்த்தைகளுக்குப் பின்னால், கொண்ட கொள்கையில் இருக்கிற நல்ல விஷயத்துக்காக அதை நீங்கள் தொடர்ந்து கடைபிடிக்கிறீர்களா அல்லது அதை தொடர்ந்து கடை பிடிப்பதால் கொள்கைவாதி என்ற பெயர் உங்களுக்குக் கிடைக்குமென்பதற்காக முரண்டு பிடிக்கிறீர்களா என்ற கேள்வியும் இருக்கிறது.

இங்கே சொல்லப்படுகிற பெரும்பாலான கொள்கைகள் மாற்றப்பட்டவை அல்லது மறுசீரமைப்பு செய்யப்பட்டவை என்பதுதான் உண்மை. காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப ஒரு விஷயத்தைப் பற்றிய நமது கருத்துகள் மாறிக் கொண்டே இருக்கின்றன.



அதெப்படி கருத்துக்களை நமது வசதிக்கேற்ப மாற்றிக் கொள்ளலாமா. அப்புறம் அந்தக் கருத்துக்கு என்னதான் மரியாதை? என்று நீங்கள் கேட்டால் அது நல்ல கேள்விதான். ஆனால் வாரத்தில் உள்ள 6 நாள்களும் கடுமையாக உழைத்து விட்டு ஞாயிற்றுக்கிழமையன்றைக்கு கொஞ்சம் அசந்து தூங்க ஆசைப்படுபவரை, 'விடிகாலையில்' எழுந்து கொள்ளாதவன் சோம்பேறி என்ற உங்களின் கருத்துக்காக வதைப்பது எப்படி நியாயமாகும். மெழுகுவர்த்தி ஸ்டாண்ட் இருந்த இடத்தில் இப்போது காஸ் சிலிண்டர் வந்து விட்டது. அதெல்லாம் முடியாது மெழுகுவர்த்தி ஏற்றுவது அங்கேதான் நடக்கும் என்று உங்களுடைய 'பெர்பெக்ஷனிஸ்ட்' பதவிக்காக சண்டை போட்டால் ஆபத்துதானே.

எப்போதும் எல்லாமும் ஒழுங்காக இருக்க வேண்டும், எடுத்த பொருளை எடுத்த இடத்தில் வைக்க வேண்டும். கோயிலுக்குப் போய் விட்டு வந்துதான் வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். காக்கைக்கு சாதம் வைத்த பிறகுதான் சாப்பிட வேண்டும் என்று ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு பொதுக்கருத்து இருக்கும். ஒரு நாள் காக்கை வரவில்லை என்பதற்காக அவசரமாக ஆபீசுக்கு கிளம்புகிற அண்ணன், உங்களுக்காக ஆசை ஆசையாக சமைத்த மனைவி, உங்கள் அழைப்பின் பேரில் வீட்டுக்கு வந்த விருந்தினர் இப்படி எல்லாரையும் காகம் வரும்வரை காக்க வைப்பது நியாயம் இல்லையே.



கூட்டமாக இருக்கும் இடங்களில் நிற்கமாட்டேன் என்ற கொள்கையோடு இருந்தால் இங்கே எந்த வேலையும் நடக்காது. கொள்கையை பின்பற்ற வேண்டும் என்கிற தீவிரம் ஒரு நிலையில் உங்களையும் உங்களைச் சார்ந்தவர்களையும் ரொம்பவே தொந்தரவு செய்து விடுகிறது.

ஒரு நிலையில் நீங்கள், உங்களைத் தவிர மற்றவர்கள் தான்தோன்றித்தனமாக திரிகிறார்கள் என்ற முடிவுக்கு வந்து

விடுகிறீர்கள். 10 மணிக்கு எல்லாரும் படுத்துவிட வேண்டும் என்பதற்காக 10.10 வரை முழித்திருப்பவனை... இவன் தவறு செய்கிறானே எப்படியாவது இவனைத் திருத்த வேண்டுமே என்று ஆரம்பித்து விடுகிறீர்கள்.

விளைவு... அய்யோ இம்சை வருதுடா என்று ஆளாளுக்கு ஒரு பக்கம் தலை தெறிக்க ஓடுகிறார்கள். ஏம்ப்பா கொள்கையோடு வாழ்வது தப்பா? என்று நீங்கள் கேட்கலாம். அதில் தப்பே இல்லை. அந்தக் **கொள்கையை நீங்கள் ஆள்வதற்கு பதிலாக அது உங்களை ஆட்சி செய்து கொண்டு இருக்கிறதே. அதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா?**

காலையில் எழுந்து படித்தால்தான் மண்டையில் ஏறும் என்பது என் நண்பனுடைய அப்பாவின் பொதுக்கருத்து. என் நண்பன் ரொம்ப நல்லா படிக்கிறவன். ஆனா இரவு நேரத்தில் படிப்பதுதான் அவனுக்குப் பிடிக்கும். அவனைக் கொடுமைப் படுத்தி காலையில் எழுப்பி விட்டு, காபியெல்லாம் போட்டுக் கொடுத்து அடியோ அடி என்று அடித்ததில் விளைந்தது, 80 மார்க் எடுத்துக் கொண்டிருந்தவன் 50 மார்க் வாங்கும்படி ஆனதுதான்.

இப்படி கொள்கை அளவுக்கு மீறி ஆட்சி செய்ய ஆரம்பித்தபின் அந்தக் கொள்கைக்குத் தக்கவாறு இந்த உலகத்தையே நீங்கள் மாற்ற முயல்கிறீர்கள்.

உங்கள் 'பெர்பெக்ஷனிஸ்ட்' தாகம், கொள்கைவாதி பேனர் இது இரண்டும் அடுத்தவர்களால் கேலி செய்யப்படுவது தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் அதில் தீவிரமாக உங்களை இயங்க வைக்கிறது, உங்களை ஆட்சி செய்கிற அந்த பொதுக் கருத்து.

நாங்க அந்தக் காலத்துல இருந்தே அந்த கட்சிதான்... எங்க தாத்தா, அப்பா, இப்ப நான் எல்லாருமே அந்தக் கட்சிக்கு தான் ஓட்டுப்போடுவோம். உங்கள மாதிரி ஒவ்வொரு தேர்தலுக்கும் ஒவ்வொரு கட்சிக்கு மாறி மாறி ஓட்டுபோட மாட்டோம். நல்லா இருக்கு சார் உங்க கொள்கை. உங்க தாத்தா இருந்தப்போ அந்தக் கட்சி நல்லாட்சி நடத்தி



இருக்கும். அந்த பொதுக்கருத்தை அவரேகூட இருந்திருந்தால் மாற்றி இருக்கக் கூடும்.



இப்போ அவங்க என்ன செய்றாங்க. இந்த நாட்டுக்கு நல்லது செய்வாங்களான்னு எல்லாம் யோசிக்காம கொள்கைக் குன்று மாதிரி அதே கட்சிக்குதான் ஓட்டுப்போடுவேன் என்கிறீர்களே. அதுகூடப் பரவாயில்லை. சூழ்நிலை கருதியும், நல்லது கெட்டதை யோசித்தும் மாற்றி ஓட்டுபோடுகிறவனை கொள்கை இல்லாதவன் என்று சொல்லுகிற அளவுக்கு, உங்களை அறியாமல் உங்கள் கருத்து ஆதிக்கம் செலுத்தி முடமாக்கி இருக்கிறது.

கருத்துகளை மாற்றிக் கொள்வதில் ஒன்றும் குற்றமில்லை அது தவறாக இல்லாத பட்சத்தில். பூமி உருண்டையா தட்டையா என்பதில் தொடங்கி நிறைய கொள்கைகள் காலத்திற்கு காலம் மாறி இருக்கின்றன. 10 - 15 வருடத்துக்கு முன்பு வரை திருமணத்துக்கு முதல் நாள் மாப்பிள்ளையும், பெண்ணும் சேர்ந்து நின்று போட்டோ எடுத்துக் கொள்ளக்கூட அனுமதிக்க மாட்டார்கள்.

இப்போது முதல் நாள் வரவேற்பு, அடுத்த நாள்தான் திருமணம்... காரணம் மண்டப வாடகை.

எங்கே போச்சு சார் நம்ம கொள்கை? தேவையில்லாத செலவைத் தவிர்க்க நாம் மாறிக் கொள்ளவில்லையா.

உங்களுக்கென்று தனிப்பட்ட கருத்துகளை வைத்துக் கொள்வதில் குறையொன்றுமில்லை. வம்படியாய் எந்தச் சூழலிலும் அதை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று சொன்னால் உங்களை விட்டு விட்டு எல்லாரும் போய் விடுவார்கள்.

சந்தோஷ் சுப்ரமணியத்தில், கிளைமாக்ஸ் வரும்வரை காத்திருந்து ஜெயம்ரவி, பிரகாஷ்ராஜிடம் ஒவ்வொரு பாயிண்டாக சொல்லுகிற மாதிரியா யாரும் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

பொய் சொல்லக்கூடாது என்பது உங்கள் கொள்கை. நாலு கொலைகாரர்கள் ஒருவரை துரத்திக் கொண்டு வருகிறார்கள். அவர் ஓடி வந்து உங்களிடம் உதவி கேட்டு வீட்டுக்குள் ஒளிந்து கொள்கிறார். இப்போது அவரைத் தேடி வரும் கொலைகாரர்களிடம் என்ன சொல்வீர்கள்.

நான் பொய்யே சொல்லமாட்டேன் அது என் கொள்கை... அவர் உள்ளேதான் இருக்கார் நீங்க கொன்னுட்டு போகலாம்னு சொல்வீர்களா... அப்படி என்றால் கொலையை தடுக்க வேண்டும் என்ற கொள்கை உடையவர் வீட்டைத் தேடித்தான் பாதிக்கப்பட்டவர் போய் ஒளிந்து கொள்ள வேண்டும்.

**ஒரு காலத்தில் மறுவீடு சடங்கு என்று ஒன்று இருந்தது. பையன் ஊர் திருநெல்வேலி, பெண் ஊர் சென்னை கல்யாணம் நடப்பது பெங்களூரில் என்ற நிலை வந்த பிறகு அதை நீங்கள் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளவில்லையா.**

நம்மை நாமே நெறிப்படுத்திக் கொள்ளவும், சரியான பாதையில் பயணிக்கவும் நாமே வகுத்துக் கொண்ட விதிமுறைகளும், கொள்கைகளும் நமக்கே விலங்காக மாறுமென்றால், நீங்கள் மாறிக் கொள்ளுங்கள்.



மது அருந்தக்கூடாது என்பது என் கொள்கை. நாலு பேர் சொல்கிறார்கள் என்பதற்காக அதை மாற்றிக் கொள்ளவா என்று கேட்கலாம். வேண்டாம். ஆனால்... உங்கள் உயிரைப் பாதுகாக்க கொஞ்சம் ஆல்கஹால் தேவைப்படுகிறது. அதனால் 2 நாள் கொஞ்சம் குடிக்க வேண்டும் என்று டாக்டர் சொன்னால் அதை செய்யலாமே. **உயிரே போனாலும் என் கொள்கையை விட்டுத்தரமாட்டேன் என்று நீங்கள் சண்டை போட்டால் அதற்குப் பெயர் கொள்கை அல்ல மனோ வியாதி.**

ஒரு நிலையில் இந்தக் கொள்கையை விட்டு விட்டால் நாம் சீர்கெட்டுப் போவோம் என்ற உங்கள் அச்சம்தான் அர்த்தமில்லாமல் உங்களை அந்தக் கொள்கையை பிடித்துக் கொண்டு தொங்கச் சொல்கிறது.

உங்களை இயக்கத்தான் கொள்கைகள்... முடக்க அல்ல.

இதுபோன்ற கொள்கையைப் பற்றி அலசுகிற எழுத்தை எல்லாம் படிக்கக்கூடாது என்பது உங்கள் கொள்கை என்று நீங்கள் மீண்டும் ஆரம்பித்தால் யாரால் என்ன செய்ய முடியும்.



# 9

மனைவிக்கு தலைவலி மாத்திரை வாங்கிக் கொடுத்தீர்களே... இப்போது எப்படி இருக்கிறது? நான் வேணும்னா மருந்து தேய்ச்சு விடட்டா என்று கேட்டீர்களா? கேட்டிருந்தால் அங்கே மருந்துக்கே தேவை இருந்திருக்காது.

"அன்பாக இருங்கள்..." என்று நான் சொன்னால்... ஆரம்பிச்சுட்டானுங்கய்யா என்று உடனடியாக ஒரு விமர்சனம் ஏதாவது ஒரு மூலையிலிருந்து வரும். நீங்கள் விமர்சனம் செய்வது இருக்கட்டும். அன்பாக இருங்கள் என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டேதான் இருக்கிறார்கள் மனவியல் வல்லுநர்கள்.

அன்பு காட்டுவது உங்கள் மனசை லேசாக்குகிறது. எவ்வளவு இறுக்கமான சூழலையும் தளர்த்துகிறது. இன்னும் சொல்லப்போனால் மாற்றுகிறது.

அதனால்தான் எந்த ஊரிலும் சிடுமூஞ்சிகளுக்கு மதிப்பிருப்பதில்லை. அன்புக்கு மட்டும்தான் சில சிறந்த தன்மைகள் உண்டு. நீங்கள் அதை இன்னொருவரிடம் வெளிப்படுத்தினாலும் அல்லது யாரோ யாருக்கோ அன்பை வெளிப்படுத்தினாலும் அது எல்லாருக்கும் மகிழ்ச்சியாகிறது.



நம்ம சென்னை சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் மாதிரி ஒரு பரபரப்பான ஒரு கூட்டமான இடம்... அடுத்த ரயிலுக்காக காத்திருப்பவர்கள், 24 மணி நேர பயணம் முடித்து களைப்புடன் திரும்புபவர்கள் இரண்டு நாள் பயணம் செய்யணுமே என்று எரிச்சலோடு முனகிக் கொண்டிருப்பவர்கள், இந்தியன் ரயில்வே எப்போதுமே இப்படித்தான் சொன்ன நேரத்துக்கு ரயில் வரவே வராது என்று முனகிக் கொண்டிருப்பவர்கள்...



கர்ம சிரத்தையாய் பாப்கார்ன் விற்றுக் கொண்டிருக்கிறவர்கள்... அழுகையை நிறுத்தப் போறியா இல்லையா என்று அதட்டிக் கொண்டிருக்கிற அம்மாக்கள்... 10 ரூபாய் போட்டுக் குடு சார் என்று பேரம் பேசிக் கொண்டிருக்கிற போர்ட்டர்கள். கால் கடுக்க நின்று களைத்துப்போன போலீஸ்காரர்கள்... இப்படி பல மனநிலைகளில் இருக்கிற எல்லாரும் சங்கமிக்கிற இடம்...அது..

ஒவ்வொருவர் மனதிலும், காரணமின்றியோ காரணத்துடனோ ஏதோ ஒரு எரிச்சல். ஒரு டிரெயின் வந்து நிற்கிறது. அதிலிருந்து தேவதை மாதிரி ஒரு பெண் இறங்குகிறாள்...

கூட்டத்தை விலக்கிக் கொண்டு எங்கிருந்தோ ஓடி வருகிறான் ஒரு இளைஞன் பூங்கொத்தோடு...

அவன் அவசரத்துக்கு உங்களை தள்ளிக் கொண்டு போன எரிச்சலோடு அவனைப் பார்க்கிறீர்கள். வேகமாய் ஓடுகிற அந்தப் பையன் அந்தப் பெண் முன்னால் போய் நிற்கிறான்.

தேவதை அவனை முறைக்கிறது.

அவள் முன் மண்டியிட்டு பூங்கொத்தை நீட்டியபடி "I Love you" என்கிறான் அந்த இளைஞன். லேசாய் சிரிக்கிற தேவதை அவன் அருகில் மண்டியிட்டு அவனை அணைத்துக் கொள்கிறது.

நான் சொல்கிறபோதே இந்தக் காட்சிகள் உங்கள் கண் முன்னே விரிகிறது. உங்களையும் அறியாமல் ஒரு சந்தோஷமும், உற்சாகமும் உங்களிடத்தில் முளைக்கிறது. அப்படியானால் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு... ஒவ்வொருவரும் ஏதேதோ மனநிலைகளில் இருந்தாலும் அன்பைப் பரிமாறிக்கொண்டே இருவரையும் பார்க்கிறபோது கண்கள் விரிகிறது... அலுப்பு குறைகிறது. இதழோரம் ஒரு சின்ன சிரிப்புகூட வருகிறது.

இறுக்கமான, நெரிசலான அந்த சூழல் இப்போது கொஞ்சம் லேசாகிறது. நமக்கும் அந்த இளைஞனுக்கும், இளைஞனின் தேவதைக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா? ஆனாலும் அந்த அன்புப் பரிமாற்றம் அழகாய் இருக்கிறது. சந்தோஷமாய் உணரப்படுகிறது. இந்த காட்சியை பார்த்து விட்டு கலிகாலம்டா என்று முனகிக் கொண்டு போகிற சிலருக் கும்கூட உள்ளுக்குள், ஒரு தழுவலான உணர்வுதான் அது.

அவர்கள் வெளிப்படுத்தியது அன்பு... முற்றிலும் பொய்யில்லாத ஒரு அன்பின் வெளிப்பாடு எல்லாரையும் மகிழ்ச்சிப்படுத்துகிறது.

**யாரோ யாருக்கோ வெளிப்படுத்துகிற அன்பு உங்களை சந்தோஷப்படுத்தும் என்றால் நீங்கள் அன்பாயிருப்பதும், நம்மிடம் அடுத்தவர் அன்புடன் நடந்து கொள்வதும் எவ்வளவு அலாதியான விஷயம்.**



ஒரு நிமிடம் பொறுங்கள் கோபி. இங்க எனக்கு ஒரு சந்தேகம்... நான் எல்லாரிடமும் அன்பாகத்தான் இருக்கிறேன். ஆனா அவங்களும் என்னிடம் அன்பாக இருக்கணுமே. ஒண்ணு அவங்க என் அன்பை புரிஞ்சுக்கணும். இல்லேன்னா என்னை பைத்தியக்காரனா நினைக்காம இருக்கணும் இல்லையா...

உண்மைதான்... இங்கு அன்பை பத்தி ஒரு தெளிவான விளக்கம் தேவைப்படுது. திரும்ப ஏதாவது கிடைக்கும்னு உறுதியா தெரிஞ்சாதான் அன்பு செலுத்துவேன்னு நீங்க சொன்னா அது வியாபாரம். அவர்களும் என் மீது அன்பாக நடந்து கொள்ள வேண்டுமே என்ற சந்தேகத்தோடோ அல்லது நிபந்தனையோடோ நீங்கள் செலுத்துகிற அன்பு எப்படி முழுமையானதாக இருக்கும்.

**அன்பு செலுத்துவதே ஆனந்தமான அனுபவம் என்கிறபோது அவர் திருப்பிச் செலுத்தினால்தான் சந்தோஷம் என்றில்லை.**

நான் வழக்கமாக டீ குடிக்கிற கடைக்கு ஒரு நாய் வரும், வாலாட்டும்... நானும் அதற்கு பிஸ்கட் எல்லாம் வாங்கிக் கொடுப்பேன். பிஸ்கட்டை தின்றவுடன் அது வாலாட்டுவது நின்று விடும்.

பக்கத்தில் இருப்பவரிடம் போய் வாலாட்டும். எனக்கு எரிச்சலாய் வரும். இதற்கு நாம் வருகிறபோதெல்லாம் பிஸ்கட் வாங்கித் தருகிறோம். ஆனால் நம்மீது அதற்கு ஒரு ஸ்பெஷல் கவனிப்பு இல்லையே என்று நினைப்பேன். அதற்கு காரணமும் உண்டு. அதற்கு அவ்வளவாக பசியில்லாத நேரங்களில் அது என் அருகில் வந்து வாலாட்டாது. அந்த சமயங்களில் என்னை கண்டு கொள்ளவும் செய்யாது.

அப்போது எனக்கு அதன் மீதான எரிச்சல் மேலும் அதிகமாகும். அதனால் அது வாலாட்டினாலும் சில நாட்கள் எதுவும் அதற்கு வாங்கிக் கொடுக்க மாட்டேன். நான் அன்பு செலுத்துகிறேன். அதை அது கண்டு கொள்வதில்லையே என்ற கோபம் எனக்கு அதன் மீது.

ஒருநாள் இரவு 11 மணி இருக்கும். அந்தக் கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தேன். வழக்கம்போல் அந்த நாய் வந்து வாலாட்டியது. இப்போது நான் அதைக் கண்டுகொள்ள வில்லை. அன்பில்லாத நாயை நான் ஏன் கண்டுகொள்ள வேண்டும்? அதன் வாலாட்டலை உதாசீனப்படுத்தி விட்டு பைக்கில் ஏறி 50 மீட்டர் தூரம் சென்று வளைவில் திரும்பினேன். மண் கொட்டி கிடந்தது தெரியாமல் வழுக்கி பொத்தென்று கீழே விழுந்தேன்.

இப்போது என்மேல் பைக் கிடக்கிறது... என்னால் எழவும் முடியவில்லை. அந்த சந்தில் யாருமில்லை. எப்படிதான் அங்கு ஓடி வந்ததோ தெரியாது அந்த நாய். என்னை சுற்றி சுற்றி வந்து குரைத்தது... பதறியது... திடீரென ஓடிப்போய் டீக்கடையில் நின்று கொண்டு குரைத்தது... காட்டுக் கத்தல் கத்தியது... டீக்கடை மாஸ்டர் அது குரைத்த சத்தம் தாளாமல் வெளியேவந்து நான் விழுந்து கிடப்பதை பார்த்து விட்டு என்னிடம் ஓடி வந்தார்.

அன்றைக்கு அந்த நாய் குரைத்த குரைப்பும் அது அடைந்த பதட்டமும், இன்றைக்கும் என் கண் முன்னால் நிற்கிறது. இத்தனை நாளாய் அன்பில்லாத நாய் என்று அதை பலமுறை மனதுக்குள் திட்டி இருக்கிறேன்.

மெதுவாய் நடந்து கடைக்கு வந்தவுடன் மாஸ்டர் எனக்கு தண்ணீர் கொடுத்தார். வழக்கம்போல வாலாட்டியபடி என்னை சுற்றி சுற்றி வந்தது அந்த நாய்... என்கிட்ட வந்து வந்து நகர்ந்து போனது... வேகமாய் இரண்டு பிஸ்கட் எடுத்து அதனிடம் போட்டேன்... என்னை உற்றுக் கவனித்தவாறே வாலாட்டிக் கொண்டே ஓடி விட்டது.

மாஸ்டர் சொன்னார்... 'பாவம் சார் அதுக்கு செம பசி... உங்களுக்கு அடிபட்டதுல ரொம்ப கலங்கிப் போயிடுச்சு போலிருக்கு... அதான் பிஸ்கட்டை சாப்பிடாம போகுது.' என்றார். அதைக் கேட்டதும் எனக்கு ரொம்பவே வலித்தது. இப்படித்தான் என் மீது அவர் அன்பு காட்டுவதில்லை என்று பலரையும் நாம் நினைக்கிறோம். அதனாலேயே அவர்கள் மீது அன்பு காட்டவும் தயங்குகிறோம்.



**உங்கள் அன்பு உண்மையானதாகவும் நியாயமானதாகவும் இருந்தால் எதிர்தரப்பிலும் அப்படி இருந்துதான் ஆகவேண்டும். அன்பு என்கிற பெயரில் அடுத்தவரை வதைக்கிறபோதோ அல்லது அளவுக்கு மீறி எதிர்பார்க்கிற போதோதான் நீங்கள் நினைப்பது கிடைப்பதில்லை.**

இது ஒரு பக்கம்... எதிர்பார்ப்பில்லாத அன்பு இனிமை யானது. ஆனால் அன்பு செலுத்துகிறவரை அலட்சியப் படுத்துவதும், அன்பை வெளிப்படுத்துவதில் கருமியாய் இருப்பதும் அன்பினால் கிடைக்கிற சந்தோஷத்தை உணராததால்தான்.

தான் கண்டிப்பான பேர்வழி என்று காட்டிக் கொள்வதற்காக இறுகிய முகத்தோடு திரிகிறவர்கள் ஏராளம். தான் அன்பு காட்டினால் அதை மற்றவர்கள் பலகீனமாக எடுத்துக் கொள்வார்கள் என்று அவர்கள் நினைப்பதுதான் இதற்கு காரணம். போதாததற்கு அவர் "கறார் பேர்வழி" என்ற பட்டம் வேறு கிடைக்குமல்லவா.

பிள்ளையிடம் அன்பை வெளிப்படுத்தினால் அவர்கள் கெட்டுப்போவார்கள் என்று நினைக்கிற அப்பாக்கள், மாணவனிடம் அன்பு காட்டினால் மரியாதை இருக்காது என்கிற ஆசிரியர்கள், கண்டிப்பாக இருந்தால்தான் வேலை நடக்கும் என்கிற எண்ணத்தில் பாசமாக பேசத் தயங்குகிற மேனேஜர்கள், இப்படி ஒவ்வொருவரும் அன்பை வெளிப்படுத்தக்கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு இருப்பதற்கு நிறைய காரணங்கள் வைத்திருக்கிறார்கள்.




மார்க் லூயிஸ்

மார்க் லூயிஸ் உங்கள் எல்லா ருக்கும் ஒரு தகவல் சொல்கிறார். நீங்கள் எது எதற்காக வெல்லாம் அன்பை வெளிப்படுத்த தயங்குகிறீர்களோ அது அத்தனையையும் விட அன்பு உயர்வானது.

அன்பை வெளிப்படுத்தாமல் ஒருவர் மறைப்பது அவருடைய பலவீனத்தைக் காட்டுகிறது. ஒரு நீயா - நானா நிகழ்ச்சியில் வேலைக்குச் செல்லுகிற பெற்றோர்கள் ஒருபுறம் அவர்களின் பிள்ளைகள் மறுபுறம். நிறைய பிள்ளைகள் வைத்த குற்றச்சாட்டு ஏனைய பெற்றோர்கள் போல் இவர்கள் எங்கள் மீது அன்பு காட்டுவதில்லை என்பது.

ஒரு தந்தை அதற்கு விளக்கம் கொடுத்தார். அவர்களுக்காகத்தான் இவ்வளவு கஷ்டப்படுகிறோம்... அவர்களுக்கு எங்கள் அன்பு புரியவில்லை என்றார்... இந்த வேலையை எல்லாம் - தூக்கிப்போடுங்கள்... இந்தப் பணம் எல்லாம் எங்களுக்கு வேண்டாம் - எங்கள் மீது அன்பு காட்டுங்கள் என்று பொட்டில் அடித்தாற்போல் சொன்னாள் ஒரு சிறுமி.



உண்மையில் குழந்தைகள் மீது இருக்கிற அளவற்ற அன்பால்தான் பெற்றவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் அந்த அன்பை வெளிப்படுத்தாதபோது அந்தக் குழந்தைக்கு எப்படி அது புரியும். ஒரு நிலையில் அவர்கள் இருவருக்கும் உள்ள இடைவெளி அதிகமாகி தன் மீது அன்பு காட்டுவதாக நடிப்பவரை நோக்கி அந்தக் குழந்தை நகரும்.

இங்கே அன்பை வெளிப்படுத்தாத காரணத்தால் குழந்தையும் சந்தோஷமாக இல்லை... அந்தக் குடும்பமும் சந்தோஷமாக



இல்லை. உங்கள் கடும் உழைப்பு இங்கே அர்த்தமில்லாததாகி விடுகிறது.

இயல்பிலேயே அன்பை வெளிக்காட்டுவதில் அதிக கூச்சம் கொண்டவர்கள்தான் அநேகம்பேர். அடுத்தவரை நோகடிக்கிற கோபத்தை, எரிச்சலை, வன்மத்தை, பொறாமையை, ஆக்ரோஷத்தை வெளிப்படுத்த தயங்காத நாம் ஏன் அன்பை வெளிப்படுத்தத் தயங்கவேண்டும்.

வெறும் உணர்தலிலேயே புரிந்து கொள்ளப்பட வேண்டியதுதான் அன்பு, என்றெல்லாம் தத்துவம் பேச முடியாது.

5 வருடம் கழித்து வீட்டுக்கு வருகிற பிள்ளையை அம்மா ஓடிப்போய் அணைத்துக் கொள்கிறாள். சில அப்பாக்கள் கரகரத்த குரலில்... "கை கழுவிட்டு வா சாப்பிடலாம்"... என்கிறார்கள். காரணம் அவர் அப்படித்தானாம்... அன்பையெல்லாம் வெளிப்படுத்த மாட்டாராம். ஏன் சார்... உங்க பையன் சாப்பாட்டுக்கு வழி இல்லாமலா உங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறான்...

உங்கள் மனது துடிக்கவில்லை... அணைத்துக் கொள்ள வேண்டும் என்று பரபரக்கவில்லை... அட போப்பா இதென்ன சினிமாவா என்று கேட்பீர்கள். "நானெல்லாம் இரும்பு மாதிரி" என்று டயலாக் விடுவீர்கள்... அப்புறம் ஏன் சார் அவன் தூங்கிய பிறகு அருகில் போய் அமர்ந்து கொண்டு "கருத்துப் போயிட்டானில்லடி" என்று பெண்டாட்டியிடம் சொல்லி கவலைப்படுகிறீர்கள்.

**உங்கள் பிள்ளைக்கு தெரியாமல் வெளிப்படுத்த அன்பு ஒன்றும் மோசமான விஷயமில்லையே. நீங்க இரும்புதான்- அந்த பதக்கத்தை காப்பாத்த எத்தனை நாளைக்கு இப்படி மனசுக்குள்ளேயே அன்பை சுமந்து கொண்டு திரிவீர்கள்.**

நீங்கள் அன்பானவரா இல்லையா என்பதை அம்மாவிடம் தான் மகன் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டுமா என்ன? இல்லை வேலு நாயக்கரிடம் கேட்கிற மாதிரி நீங்கள் நல்லவரா கெட்டவரா என்று விசாரிக்க வேண்டுமா?

நீங்கள் 5 வருடம் கழித்து வருகிற பிள்ளையை மனசு ஆசைப்படுகிற மாதிரி ஓடிப்போய் அணைத்துக் கொண்டால், தூணுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த அவன் தங்கை

ஓடிப்போய் கட்டிக் கொண்டிருக்கும். உங்கள் வீட்டு பப்பி ஓடி வந்து குதித்திருக்கும். உங்கள் அம்மா - பாட்டி பேரனை உச்சி முகர்ந்து முத்தம் கொடுத்திருப்பார்.

5 வருடம் கழித்து வீட்டுக்கு வருகிற பிள்ளைக்கு அதுதானே வரவேற்பு. அவன் காத்திருந்தது இதற்காகத்தானே. இட்லி திங்கவா இவ்வளவு தூரம் வந்தான். நீங்கள் அன்பை வெளிப்படுத்தி இருந்தால் நீங்கள் மட்டுமல்ல அந்த இடமே மகிழ்ச்சியில் திளைத்திருக்குமே.

நீங்க இரும்பா இருந்துட்டுப் போங்க சார். அன்பை வெளிப்படுத்துவதில் கிடைக்கும் சுகத்தை, சுகானுபவத்தை உணராத மரமாய் இருக்காதீர்கள்.

இந்த பிரபஞ்சமே அன்பால் நிறைந்திருக்கிறது. நீங்கள் ஏன் ஓடி ஓடி ஒளிந்து கொள்ளுகிறீர்கள். என் கடமைகளைச் செய்வதன் மூலம் அன்பை வெளிப்படுத்துகிறேன்... அதை அடுத்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் விளக்கம் சொல்ல வேண்டாம்.

மனைவிக்கு தலைவலி மாத்திரை வாங்கிக் கொடுத்தீர்களே... இப்போது எப்படி இருக்கிறது? நான் வேணும்னா மருந்து தேய்ச்சு விடட்டா என்று கேட்டீர்களா? கேட்டிருந்தால் அங்கே மருந்துக்கே தேவை இருந்திருக்காது.

அன்பாய் இருப்பதும், அன்பை வெளிப்படுத்துவதும்தான் மனிதனின் இயல்பு. "நாங்க இரும்பு பார்ட்டி" என்று மார்தட்டிக் கொண்டு திரிபவர்களுக்கெல்லாம் ஒரு விஷயம். உங்கள் கழுத்தில் 'அவர் ரொம்ப ஸ்டிரிக்ட்டு' என்ற பதக்கத்தை தொங்க விட்டு விட்டு உங்கள் முதுகுக்கு பின்னால் நிறையபேர் முனகிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**அன்பைக் கொடுப்பதும் பெறுவதும் ஒரு ஆத்மார்த்தமான அனுபவம். "இரும்பு மனிதன்" என்ற உப்புப் பெறாத ஒரு பட்டத்துக்காக அந்த அனுபவத்தை அடகு வைத்து விடாதீர்கள்.**

போங்க சார்... வீட்டுக்குப் போய் பிள்ளையை, பொண்டாட்டியை, நாய்க்குட்டியை எல்லாரையும் கொஞ்சுங்க...

உங்களிடம் அன்பு செய்ய இந்த உலகமே காத்திருக்கிறது.



# 10

இன்றைக்கு பெரும் கோடீஸ்வரர்களாய், அதிகாரத்தை கையில் வைத்திருப்பவர்களாய், மக்களின் அபிமானம் பெற்றவர்களாய் இருக்கிற எல்லாரும் முதலில் மனதில் கோடீஸ்வரர்களாய் இருக்கிறார்கள்.

உங்களுக்கு நூறுகோடி ரூபாய் பணம் கிடைக்கிறது. அதை வைத்துக் கொண்டு நீங்கள் என்னவெல்லாம் செய்வீர்கள்?

முதல்ல என் கடனை எல்லாம் அடைப்பேன்...

சரி. 10 லட்சம் ரூபாய் அதற்காகப் போகட்டும்... அப்புறம்?

ஒரு பெரிய வீடு வாங்குவேன்...

சரி அதுக்கு ஒரு 2 கோடி. அப்புறம்?

ஒரு பெரிய பார்ட்டி கொடுப்பேன்.

சரி அதுக்கு ஒரு 5 லட்சத்தைத் தனியாக ஒதுக்குங்கள். அப்புறம்...?

அப்புறம் எல்லாருக்கும் நிறைய துணி எடுப்பேன்...

குட். அதுக்கு ஒரு 2 லட்சம் எடுத்து வையுங்கள். பின்னே...

ஹ்ம்... அப்புறம் 1 கோடி ரூபாய்க்கு நகை வாங்குவேன்.

சரி... அடுத்து...?

அப்புறம்... அப்புறம்... தெரியலையே இதுதான் அநேகம் பேரின் பதிலாக இருக்கும்.

நாம்தான் 100 கோடி ரூபாய் பணம் என்பதை பற்றி யோசித்ததே இல்லையே. அவ்வளவு பெரிய பணத்துக்கும் நமக்கும் சம்பந்தமே இல்லையே. மனதில் கற்பனைக்காககூட அதிக பட்சம் 50 லட்சம் ரூபாயை நாம் தாண்டியதில்லையே அப்புறம் எப்படி 100 கோடி ரூபாய் பணத்தை கையாள நமக்குத் தெரியப்போகிறது.



என்ன, கடனை அடைச்சுட்டு, அரை கிரவுண்டுல ஒரு வீடு, ஒரு கார்னு சந்தோஷமா இருந்தால் போதும்... ஏன்னா நாம இப்ப இருக்குற இருப்புக்கு அதுவே பெருசு.

இப்படித்தான் கற்பனையில் கூட நமக்கு கஞ்சத்தனம். ஆசைப் படுவதென்று முடிவெடுத்தாயிற்று அப்புறம் அற்பமாக 5 லட்சம், 10 லட்சம் என்று ஏன் யோசிக்க வேண்டும். 50 கோடி, 100 கோடின்னு யோசிக்கலாமே.

பணக்காரன்தான் அப்படி யோசிக்கலாம்... நாம அப்படி யோசிக்கக்கூடாது. அதுக்கெல்லாம் ஒரு தகுதி வேணும்.

இதுக்கு என்ன தகுதி வேண்டி கிடக்கு... நீ 100 கோடி சம்பாதிப்பதாக யோசித்துப் பார்த்தாயாமே என்று யாராவது கைது செய்து விடுவார்களா என்ன?

இல்லதான... ஆனா நடக்காதத யோசிச்சு என்ன ஆகப்போகுது.

நடக்காதுன்னு யாரு சொன்னா.

-இப்படி எடக்கு மடக்கா கேள்வி கேட்டா என்ன பண்றது?

இல்ல தெரியாமத்தான் கேட்கிறேன். 10 லட்சம் சம்பாதிக்கலாம்னு நினைக்கிறது... நடக்கும்னா 100 கோடி சம்பாதிக்கலாம்னு நினைக்கிறது நடக்காதா.



-அது எப்படி நடக்கும். இப்ப இருக்கிற நிலைமைக்கு நான் இவ்வளவுதான் கனவு காண முடியும்.

-இதுதான்... இதுதான் விஷயம். நம்முடைய கற்பனைகள் - யோசனைகள்- கனவுகள் எல்லாவற்றையுமே இப்போதைய சூழலை வைத்தே நாம் அமைத்துக் கொள்கிறோம்.

**நீங்கள் ஏழையாய் இருந்தால் உங்கள் மனசும் ஏழையைப் போலவே சிந்திக்க வேண்டுமா? நீங்கள் எதை சிந்திக்கிறீர்களோ அதைத்தான் பெறுகிறீர்கள். நீங்கள் எதை ஈர்க்கிறீர்களோ அதுதான் உங்களுக்குக் கிடைக்கிறது.**

இதெல்லாம் நமக்குக் கிடைக்குமா என்றால் கிடைக்காது தான். இது எனக்கு கிடைக்கும் என்று நீங்கள் நம்பினால் அது உங்களுக்குக் கிடைக்கும். இது எப்படி சாத்தியம் என்றால்... சாத்தியம்தான் என்று சொல்கிறார்கள், சம்பந்தப்பட்ட வல்லுனர்கள்.

ஏழை ஏழையாகவே இருப்பதற்கும் பணக்காரன் இன்னும் பணக்காரன் ஆவதற்கும் இதுதான் காரணம் என்கிறார்கள்.

என்னய்யா இது புதுக்கதையா இருக்கு என்கிறீர்களா?

உங்கள் சிந்தனையில் எதை ஈர்க்கிறீர்களோ அதுவே உங்களுக்குக் கிடைக்கிறது. சில பேர் அடிக்கடி இடித்துக் கொள்வார்கள். எங்கயாவது எனக்கு அடிபட்டுக் கொண்டே இருக்கும் என்று சொல்வார்கள். அவர்களுக்கு அப்படியே நடக்கும்.

நிலைப்படி இடிக்கும், கருங்கல் இடறும், ஃபேனில் விரல் மாட்டும், காலில் சுடுநீர் கொட்டும். இப்படி அத்தனையும் ஒருவருக்கு மட்டுமே ஏன் நடக்கிறது? "எனக்கு அடிபட்டுக் கொண்டே இருக்கும்'' என்கிற அவருடைய ஆழ்ந்த நம்பிக்கைதான் அதற்குக் காரணம். நேர்மறைச் சிந்தனையோ, எதிர்மறைச் சிந்தனையோ எதை நீங்கள் தீவிரமாக நம்புகிறீர்களோ அதுதான் நடக்கும். இது மந்திர மாயஜாலம் எல்லாம் இல்லை.

சரி... 100 கோடி ரூபாய் மேட்டருக்கு வருவோம். நீங்கள் ஏழையாக பெரிய சொத்து சுகம் இல்லாதவராக இருக்கலாம்.

ஆனால் உங்கள் மனதை நீங்கள் ஏன் ஏழையாக வைத்து இருக்க வேண்டும். மனசு ஏழையாக இருந்தால் அது ஏழ்மை யாகவே எதையும் சிந்திக்கும், குறுகிப்போய் உட்கார்ந்து கொள்ளும். 5க்கும் 10க்கும் மட்டுமே ஆசைப்படும்.

நான் ஏழை என்கிற எண்ணம், மனசு நாலு பேரை அணுக பயப்படும். அவங்க முன்னால நாம எப்படிப் பேசறது என்று தடைபோடும். கோடீஸ்வர மனசு உயர்வாக சிந்திக்கும். விஸ்தாரமாக யோசிக்கும். அப்படி யோசிக்கிற மனசு அந்த மனதை வைத்திருப்பவரையும் அந்த இலக்கை நோக்கி இயங்க வைக்கும்.


நீங்கள் யாரையெல்லாம் பார்த்து "கொடுத்து வைத்தவர்கள்" என்று பெருமூச்சு விடுகிறீர்களோ அவர்கள் எல்லாரும் பணக்கார மனசுக்காரர்கள். தங்களின் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப கனவுகளை சுருக்கிக் கொள்ளாதவர்கள்.

10க்கு 10 வீட்டில் வாழ்ந்தாலும் பங்களா மனசு அவர்களுக்கு. மூன்று வேளை சோத்துக்கே திண்டாட்டம். அப்புறம் எங்கிட்டு கோடீஸ்வரன் மாதிரி சிந்திக்கிறது. நாம ஏழைன்னா மனசும் ஏழைதான் என்று நீங்கள் சொல்லலாம். இது ஒரு பயிற்சிதான். மனதை பணக்காரனாக வைத்துக் கொள்கிற ஒரு பயிற்சி.

**உலகின் மிகப்பெரிய பணக்காரர்கள் எல்லாம் நம்ப முடியாத அளவுக்கு வறுமையான நிலையில் இருந்து மிகப்பெரிய மனிதர்கள் ஆனவர்கள்தான். மனதை பணக்காரராக வைத்துக் கொள்ளவேண்டும் என்பது வெறும் பணம் சார்ந்த விஷயம் மட்டும் அல்ல.**

உயர்வாகவும், எண்ணங்களில் ஏழ்மை இல்லாமலும் மனதை வைத்துக் கொள்வது. எனக்கு வாய்ச்சது இவ்வளவுதான் என்று நொந்து கொள்ளாமல் இருப்பது. நான் துரதிர்ஷ்டக் கட்டை என்று பஞ்சப் பாட்டு பாடாமல் இருப்பது...





உங்கள் சிந்தனைகள் எதை ஈர்க்கிறதோ அதுவாகத்தான் நீங்கள் ஆகிறீர்கள் - இதுதான் பிரபஞ்சத்தின் நியதி. நான் சிறுவனாக இருக்கிறபோது ஒரு மளிகைக் கடைக்காரரை எனக்கு ரொம்பப் பிடிக்கும். எனக்கு மட்டுமல்ல... எல்லாருக்குமே ரொம்பப் பிடிக்கும்.

அது ஒரு சிறிய கடை. உள்ளே அவர் நிற்பதற்குத்தான் இடம் இருக்கும். கடைக்குப் பின்னால் சின்ன வாடகை வீட்டில் அவர் இருந்தார். அந்தக் கடையில் கிடைக்கிற அந்த சொற்ப வருமானத்தை வைத்துதான் அவர் குடும்பம் ஜீவனம் பண்ண வேண்டும். அவரைச் சுற்றி ஏழ்மை இருந்தாலும், மனிதர் அத்தனை திருத்தமாக, நேர்த்தியாக இருப்பார்.

துவைத்துக் கட்டிய பளீர் வேட்டி, ஷேவ் செய்து திருநீறு இட்ட முகம் என்று சுத்தமாய் பளிச்சென இருப்பார். "மளிகைக் கடையில் கிடக்கறதுக்கு என்னத்துக்கு இதெல்லாம்" என்று இருக்கமாட்டார். பணக்கார எண்ணம் கொண்டவர்கள் அப்படித்தான் இருப்பார்கள்.

அவரை மேம்பட்ட, நாகரிகமான, அடுத்தவர் நேசிக்கிற மனிதனாக முன்னிலைப்படுத்தியது அவருடைய அந்த

பணக்கார மனசுதான். அந்த "பெரிய மனுஷன்" மனசு. அவர் முகத்தில் இருக்கிற திருத்தமும் நேர்த்தியும் அவரின் கோடீஸ்வர மனசு அவருக்கு கொடுத்த பரிசுகள்தான்.

ஒருமுறை அவர் கடைக்கு வந்து விட்டால் காத்திருந்தாவது அவரிடம் பொருள் வாங்கிக் கொண்டுதான் போவார்கள் எல்லாரும். தன் கடைக்கு வரும் ஒவ்வொருவரிடம் நல்லா இருக்கீங்களா என்று நலம் விசாரிப்பார் அந்த அண்ணன். யாரும் அவரை வாய்யா போய்யா என்று கூப்பிடமாட்டார்கள். அவரோடு சிநேகம் வைத்துக் கொள்ளவும்... நட்பு பாராட்டவும் எல்லாருக்கும் பிடிக்கும்.


பெரிய மனிதர்களுடன் நட்பு பாராட்ட எல்லாருக்கும் ஆசையாகத்தானே இருக்கும். எங்கள் ஊரில் வாழும் பரம்பரை பணக்கார, நாகரிகமான பெரிய மனிதர்களின் அத்தனை பண்பட்ட வெளிப்பாடுகளையும் அவரிடம் பார்க்க முடியும்.

அவரின் சூழல் எவ்வளவு ஏழ்மையானதாக இருந்தாலும் அவர் மனதால் கோடீஸ்வரனாகத்தான் இருந்தார். இதோ இன்று வாடகைக்கு இருந்த சின்ன கடை மட்டுமல்ல அந்த ஒட்டு மொத்த கட்டிடமே அவருடையது. மனதால் மட்டுமல்ல வெளியிலும் அவர் இப்போது கோடீஸ்வரர்.

பணம் வந்தால் எல்லாரும் பளிச்சென்று மாறி விடுவார்கள் என்றெல்லாம் சொல்வார்கள். அவரிடம் இப்போது எந்த மாற்றமும் இல்லை. அவர் அப்போதும் பளிச்சென்று திருத்தமாய் இருந்தார். இப்போதும் அப்படியே இருக்கிறார். அவருடைய கோடீஸ்வர மனசு அவரை பெரும் கோடீஸ்வரனாக்கி விட்டது. உங்கள் வங்கி இருப்புக்கும் மனதை பணக்காரத் தன்மையுடன் வைத்திருப்பதற்கும் எந்தத் தொடர்புமில்லை. அந்த மனோபாவத்துடன் நீங்கள் வெளிப்படுத்துகிற மிடுக்கு அடுத்தவரை ஈர்க்கும்.

இந்த விஷயத்தை ரொம்பச் சரியான முறையில் அணுக வேண்டும். பணக்காரத் தன்மை என்பது வெறும் பணத்தை மட்டும் அல்ல... நாகரிகம். அணுகுமுறை, பழக்க வழக்கங்கள், பெருந்தன்மை இவையெல்லாம் சேர்ந்ததுதான் அந்த 'பெரிய மனுஷன்' மனசு.





தான் ஏழையாக இருந்தாலும், மனதளவில் பணக்காரனாக இருந்து கொண்டு, பொறுப்பில்லாத பணக்காரன் போல் ஆட்டம் போட வேண்டும் என்று அர்த்தமில்லை.

கோடீஸ்வர மனசுக்கு அருமையான உதாரணமாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நிக் வுஜிசிக் - கை (Nick Vujicic)யை சொல்லலாம். அவருக்கு ரொம்ப அரிதாக நடக்கிற Tetra - amelia Disorder. தோளுக்கு மேல் கைகள் கிடையாது... இடுப்புக்குக் கீழ் கால்கள் கிடையாது.

பேருக்கு பாதம் மாதிரி இடது புறம் ஒன்று இருக்கும். இப்படி ஒரு மனிதன் பிறந்தால் அவ்வளவுதான். அவன் வாழ்க்கையில் சூனியம் என்பதே பொதுவான மனநிலை.

உடம்பில்தான் குறை இருந்ததே அன்றி மனசில் வுஜிசிக் நம் எல்லாரையும்விட மகா கோடீஸ்வரர்... இன்றைக்கு உலகின் மிகச் சிறந்த தன்னம்பிக்கை பேச்சாளர்களில் அவர் ஒருவர். சிறந்த பயிற்சியாளர். அவரின் செயல்பாடுகளையும் பேச்சையும் கேட்க பெரும் கூட்டம் கூடுகிறது.

இயங்கவே முடியாத வாழ்க்கைச் சூழல்தான் அவருக்கு... ஆனால் அவரது நம்பிக்கையான மனசு அவரை நிற்க வைக்கிறது. இசையமைக்க வைக்கிறது. பேச வைக்கிறது. ஆயிரமாயிரம் பேருக்கு நம்பிக்கையை தருகிறது.



தான் இருக்கிற நிலைமையில் தன்னால் நாலு பேருக்கு நம்பிக்கை ஊட்டுகிற ஆளாக வாழ முடியுமா என்று அவர் நினைக்கவில்லை. இன்று உலகமே அவர் சொல்வதைக் கேட்கிறது.

நீங்கள் சொல்வதையும் இந்த உலகம் கேட்கும். நீங்கள் மனதில் "நான் சொல்வதை நாடு கேட்கும்" என்று நம்பினால்.

இன்றைக்கு பெரும் கோடீஸ்வரர்களாய், அதிகாரத்தை கையில் வைத்திருப்பவர்களாய், மக்களின் அபிமானம் பெற்றவர்களாய் இருக்கிற எல்லாரும் முதலில் மனதில் கோடீஸ்வரர்களாய் இருந்திருக்கிறார்கள்.

நீங்கள் கோடீஸ்வர மனசுக்காரரா... இல்லை குறுகிய மனசுக்காரரா... நீங்கள் யாராக விரும்புகிறீர்களோ அந்த மனசை வார்த்துக் கொள்ளுங்கள்... அதுபோதும்.



## 11

எல்லாருடைய ஆழ்மனதுக்கும் அந்த சக்தி உண்டு. உங்களை ஊர் உலகம் நம்ப வேண்டும் என்றால் நீங்கள் உங்கள் ஆழ்மனதை சந்தேகம் இல்லாமல் நம்புங்கள். நிச்சயம் நீங்கள் நினைப்பது நடந்தேறும்.

மழை பெய்கிறபோது எல்லா பறவைகளும் பறப்பதை நிறுத்தி விட்டு பாதுகாப்பான இடம் தேடும். இந்தக் கழுகு மட்டும் மழை தருகிற மேகத்தைத் தாண்டி உயரே சென்று தன் பயணத்தை தொடருமாம். தன் பயணம் குறித்த தீவிரம் அதற்கு அதிகம்.

நான் ஆசைப்பட்டா எதுவுமே நடக்காது என்று அங்கலாய்த்துக் கொண்டு வருந்திக் கொள்ப வர்கள் எண்ணிக்கை நம்மில் அதிகம். உங்கள் ஆசை பலமான ஆசையா... கழுகு போல மேகத்துக்கு மேலே போய் பறக்கிற அளவுக்கு அதை அடைய வேண்டும் என்பதில் உங்களுக்கு தீவிரம் இருந்ததா?

அப்படியானால் இந்த அங்கலாய்ப்பு வந்திருக்க வாய்ப்பே இல்லையே. நாமும் அதற்கு சும்மா ஆசைப்பட்டு வைப்போமே என்று நினைத்தால் திருவிழாவில் பலூன் கேட்டு அழுகிற பிள்ளை யாகிப்போவோம்.

**உங்கள் எண்ணத்தில் உங்களுக்கு வேண்டியது குறித்து ஒரு தெளிவும், தீவிரமும் இருந்தால் அது உங்களிடம் கட்டாயம் வந்துதான் தீர வேண்டும் என்கிறார்கள் விபரமறிந்தவர்கள், அனுபவஸ்தர்கள்.**


ஏதாவது வேலை வேணும் சார்... கொஞ்சம் பார்த்துச் செய்யுங்க... நான் பார்க்கப்போன ஒரு பிஸினெஸ் மேனிடம் இப்படிக் கெஞ்சிக் கொண்டு இருந்தார், ஒருவர். இவரோ என்ன வேலை வேணும்... என்று கேட்டார். எதுவா இருந்தாலும் செய்யறேன் சார்... நீங்க மனசு வச்சா போதும்.

என்ன படிச்சிருக்கே...?

டிகிரி படிச்சிருக்கேன் சார்.

கம்ப்யூட்டரை இயக்கத் தெரியுமா...

தெரியும் சார்...



ஆங்கிலத்தில் கடிதம் டைப் பண்ணத் தெரியுமா...

தெரியும் சார்...

இவ்வளவு தெரிஞ்ச உனக்கு என்ன பண்ணணும்னு தெரியலையா?



வந்தவர் கொஞ்சம் நம்பிக்கையிழந்து, சார் உங்க கம்பெனில இல்லன்னாலும் வேற ஏதாவது கம்பெனில கொஞ்சம் சொல்லி விடுங்க சார்...

சரிப்பா சொல்றேன். உனக்கு என்ன வேலை வேணும்...

எதுவா இருந்தாலும் சரி சார்.

என்னோட ஆட்டோ மோபைல் கம்பெனில மெக்கானிக்கா ஆக சேர்ந்துக்கிறியா?

எனக்கு வேலை தெரியாது, வேற ஏதாவது வேலை கொடுங்க சார்...

வேறன்னா என்ன வேலைய்யா... என்று அவர் எரிச்சலானார்.

வந்தவர் விக்கித்து நின்றார். போங்க தம்பி என் நேரத்தை வீணடிக்காதீங்க என்று சொல்லி அந்த பையனை விரட்டாத குறையாக அனுப்பி விட்டார். அவர் எனக்குக் கொஞ்சம் தெரிந்தவர்தான். அதனால் கேட்டேன்.

ஏன் சார் இங்கே வேலை எதுவும் காலி இல்லையா?

ஏன் இல்லை... நிறைய இருக்கு. ஆனா! அவனுக்கு தகுதி இல்லை என்றார். என்ன செய்யணும்னே தெரியாதவன வச்சிட்டு என்ன வேலை வாங்க முடியும் தம்பி.

நானும், அவனா ஏதாவது கேட்பானான்னு கம்ப்யூட்டர் தெரியுமா? இங்கிலீஷ் தெரியுமா?ன்னுல்லாம் கேட்டுப் பார்க்கிறேன். ஏதாவது வேலை குடுங்கன்னுதான் கேட்கிறானே ஒழிய வேற எதுவும் சொல்றானா பாத்தியா... அவனுக்கு என்ன வேணும்னு அவனுக்கே தெரியலை.

பொழச்சு கெடந்தா போதும்னு நினைக்கிற அடிமை மனசு அவன் கிட்ட இருக்கு. விபரம் தெரிஞ்சு யாரும் அவனை வேலைக்கு வச்சுக்க மாட்டாங்க. எந்த குறிக்கோளும் இல்லாம இருக்கிற இவன் எதையும் கத்துக்கவும் மாட்டான் என்றார் தீர்க்கமாக.

இப்படித்தான் நிறைய பேர் இருக்கிறோம், ஏதாவது ஒரு வேலை கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டு... ஆனால் நாம்

என்னவாக வேண்டும் என்பது குறித்து நமக்கே தெரியாது. நாம் யாரிடம் உதவி கேட்டுப் போகிறோமோ அவரே இவருக்கு... இவர் திறமைக்கு என்ன வேலை பொருத்தமாக இருக்கும்... எதிர்காலத்தை உயர்த்தும் என்பதை ஆய்ந்தறிந்து நமக்கு வேலை தரவேண்டும்.

**என்னவாக வேண்டும் என்பதில்கூட தெளிவில்லாத ஒருவருக்கு யாரால்தான் உதவி செய்ய முடியும். நான் ஆசைப்படுகிறது எதுவுமே நடக்கிறதில்லை என்பவர்களை இறுக்கிப் பிடித்துக் கேட்டால் அவர்களது எல்லா ஆசைகளும் மங்கலாகவே இருக்கும்... தெளிவானதாக இருக்காது.**

நமக்கு என்ன வேண்டும், என்ன பிடிக்கும் என்பதே நமக்கு முதலில் சரியாய்த் தெரிய வேண்டும்தானே. உங்களுக்கு பிடித்த 10 விஷயங்கள் சொல்லுங்கள் என்று கேட்டால் பட்டென்று நாம் அதற்கு பதில் சொல்லி விடுவோமா. அதற்கு



நமக்கு குறைந்தது அரை மணி நேரமாவது ஆகும். நமக்கு வேண்டியதில் நமக்குப் பிடித்த பத்தை நம் மனசுக்குள் வைத்திருந்தால் பட்பட்டென்று 10 செகண்டில் அது நம் வாயிலிருந்து வந்திருக்குமே.

யாரு சொன்னா... எனக்கும் நிறைய ஆசைகள் இருக்கு... திட்டங்கள் இருக்கு. எனக்கு என்ன பிடிக்கும் என்ன வேணும்னு எனக்குத் தெரியும்... சரி உங்களுக்கு பிடிச்ச 10 விஷயங்களை பட்டுனு சொல்லுங்க (சும்மா சொல்லிப் பாருங்க). நமக்கு நிறைய பிடிச்ச விஷயங்கள் ஆசைகள் இதெல்லாம் உண்டுதான்... ஆனா அதெல்லாம் மாறிக்கொண்டே இருக்கிறது என்பதுதான் உண்மை.

யாரையாவது பார்க்கிறபோது, அவர்களிடம் இருக்கிற பொருட்களை பார்க்கிறபோது, இப்படியெல்லாம் ஆக வேண்டும் என்று ஏற்படுகிற ஆர்வம் அது. அந்த வகை விஷயங்கள் அடிக்கடி மாறும். நீங்கள் தீவிரமாக எதை வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அதுதான் உங்களின் இலக்கு.



யாராவது யமஹா பைக் வைத்திருப்பதை பார்த்தால்... நானும் ஒரு யமஹா பைக் வாங்கணும் என்று நீங்கள் நினைப்பதும் ஆசைதான். ஆனால் அதைவிட பெரிய CBZஐ பார்த்தவுடன் அந்த ஆசை பணால் ஆகிறது. பைக்கில் தொடங்கி அழகான பெண்ணை மணமுடிக்க வேண்டும் என்பது வரை இப்படி வந்து போகிற ஆசைகளும், அவாக்களும் நிறைய.

கொஞ்சம் நாள் ஃபார்மல் பேன்ட் பிடிக்கும், அப்புறம் ஜீன்ஸ் பிடிக்கும், அப்புறம் இரண்டும் பிடிக்காது. வேட்டி சட்டை மீது விருப்பம் வரும். இரட்டை சடை போட்ட பெண் பிடிக்காமல் போய் நவநாகரிக பெண் பிடிக்கிற மாதிரி... இதெல்லாம் தீவிர ஆசை. இதில் CBZல் வராது. இதுதான் எனக்கு ரொம்ப பிடித்தது என்று உங்களுக்கே தெரியாத வரை உங்களுக்கு புலப்படாது.

அது புலப்படாத வரையில் உங்களுக்கு தேவையானது அருகில் இருந்தாலும் அதை அடையாளம் கண்டு கொள்ள உங்களால் முடியாது. நம்முடைய புஜ, பல பராக்கிரமம், அறிவுத்திறன், பயிற்சித்திறன். இத்யாதி இத்யாதி இது எல்லாவற்றையும் விட ரொம்பவும் பலசாலி நமது ஆழ் மனதுதான்.

அதனிடம் நீங்கள் யாராக வேண்டும் என்பதை அழுத்தமாகச் சொல்லி விட்டு, நீங்கள் பேசாமல் இருங்கள். ஆழ்மனது உங்களை அந்த இடத்துக்கு கொண்டு போய் சேர்க்கும் என்று மனவளக்கலை வல்லுனர்கள் உறுதியாகச் சொல்லுகிறார்கள்.

**உங்களுக்கு என்ன வேண்டும் என்று தெளிவாகத் தெரிந்தால்தானே ஆழ்மனதுக்கு அதை நீங்கள் சொல்ல முடியும். எதிரில் இருப்பவரிடமே 'ஏதாவது வேலை வே.ண்டும்' என்று சொல்லும்போது ஆழ்மனதிடம் என்னத்தை அழுத்தமாக சொல்வது.**

பெரும்பாலான நேரங்களில் நமக்கு பிடித்தது என்பது, அடுத்தவருக்கும் பிடித்ததாகத்தான் இருக்கும். நிறைய பேருக்கு ரஜினி பிடிக்குமென்றால் எனக்கும் ரஜினியை பிடிக்கும். நிறைய பேர் எதை விரும்புகிறார்களோ அதுதான் சரியானதாக இருக்கும் என்பதே இந்த விருப்பத்தின் பின்னணி.

ஒரு ஜவுளிக்கடையில் மஞ்சள் நிறம் நீல பார்டர் போட்ட புடவை ஒன்று 'தேமே' என்று கிடக்கும். போகிற வருகிற பெண்கள் எல்லாம் அதை கண்டும் காணாமல் போவார்கள். ஒரே ஒரு பெண் மட்டும் அதை எடுத்து தன் மேல் போட்டு அழகு பார்ப்பார். அவ்வளவுதான். அதே புடவை கேட்டு 5 பேர் வரிசையில் நிற்பார்கள்.

அநேகமாய் அந்த புடவையை முதலில் எடுத்த பெண்ணும் பக்கத்து வீட்டுக்காரம்மா கட்டியிருந்ததை பார்த்து... அதை வாங்க வந்தவராகத்தான் இருப்பார். நமக்கு எது அழகாய் இருக்கும் என்று அறிந்து கொள்வதைவிட வேறென்ன வேலை நமக்கு.

அதெப்படி இதுதான் வேண்டும் என்று ஆரம்பத்திலேயே தீர்மானிக்க முடியும்... உண்மைதான். நாலு விஷயத்தை பார்த்த பிறகு எதன் மீது நமக்கு அதிகமான லயிப்பும், ஈர்ப்பும் இருக்கிறதோ அதுதான் நமக்கு அதிகம் பிடித்ததாக இருக்கும். இந்த யதார்த்தம் சரியானதுதான்.

ஆனால் பார்ப்பதையெல்லாம், பக்கத்து வீட்டுக்காரர் சொல்வதையெல்லாம் கேட்டு கேட்டு நம் ஆசைகளை வளர்த்துக் கொண்டால் ஆழ்மனது என்னத்தைத்தான் புரிந்து கொள்ளும். உங்களுக்கேதான் இன்னமும் உங்களுக்கு என்ன வேண்டுமென்று முழுதாகப் புரியவில்லையே.

**குறைந்த பட்சம், நான் பெரிய ஆளா வரணும் என்று யோசிக்காமல், இசைத்துறையில் பெரிய ஆளாக வரணும், கலைத்துறையில், அறிவியல், தொழில் நுட்பத்தில் என்கிற அளவுக்காவது ஆரம்ப நிலையில் ஆழ்மனத்துக்கு சொன்னால் நன்றாக இருக்கும்.**

நீங்கள் காலம் முழுவதும், இது நல்லாருக்குப்பா இதை முயற்சி பண்ணலாம், ஹோ... அது நல்லாருக்குப்பா அதை





பண்ணலாம் என்றே திரிந்தால் ஆழ்மனது Confuse ஆகி... இவன் இப்படித்தாம்பா இவனுக்கு ஒரு தெளிவான எண்ணம் கிடையாது. என்று எரிச்சலாகி விடும்.

குறைந்த பட்சம் ஒரு விஷயத்தில் உங்களது ஒட்டு மொத்த மான பார்வை என்ன என்பதை தெரிவித்தால் ஆழ்மனது அது தொடர்பான விஷயங்களை கவனிக்க வைக்கும். ஒரு நிலையில் அது தொடர்பான விஷயங்கள் உங்களிடம் தானாக வந்து சேருவதை நீங்கள் கவனிக்க முடியும்.

"நான் எந்த விஷயத்துக்காக ரெபரென்ஸ் தேடினாலும் எனக்குத் தேவையான அந்தப் புத்தகம் பெரும்பாலும் என்னிடமே இருக்கும். பெரும்பாலும் யாராவது எனக்கு அதை பரிசளித்திருப்பார்கள். அல்லது நான் எது பற்றி தெரிந்து சொல்ல முனைந்து கொண்டு இருக்கிறேனோ அது தொடர்பாக யாராவது என்னிடம் பேசுவார்கள்."

இப்படி என்னிடம் ஒரு எழுத்தாளர் சொன்னபோது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. ஆனால் அது உண்மைதான். நான் எந்த விஷயத்தை செய்யணும்னு தீவிரமா நினைக்கிறேனோ அது தொடர்பான விஷயங்கள் என்னிடம் தானா வந்து சேரும் என்றும் அவர் சொன்னார்.

**எல்லாருடைய ஆழ்மனதுக்கும் அந்த சக்தி உண்டு. உங்களை ஊர் உலகம் நம்ப வேண்டும் என்றால் நீங்கள் உங்கள் ஆழ்மனதை சந்தேகம் இல்லாமல் நம்புங்கள். நிச்சயம் நீங்கள் நினைப்பது நடந்தேறும்.**

தமிழ்நாட்டின் பிரபலமான நடிகர் அவர். அவரோடு ஒரு பேட்டி... நானும் அவரும் நடந்து கொண்டே பேசுவது போன்ற ஒரு ஏற்பாடு. அவரை பார்க்கவும், கையெழுத்து வாங்கவும், தொட்டு விடவும் கூட்டம் அலை மோதுகிறது. கஷ்டப்பட்டு அந்த பேட்டி நடக்கிறது.

சின்னதாய் ஒரு பிரேக்... நானும் அவரும் டீ குடித்துக் கொண்டு இருக்கிறோம். தூரத்தில் நிற்கும் கூட்டம் அவர் நிமிரும் போதெல்லாம் கையசைத்து கரகோஷம் எழுப்புகிறது. அவர் என்னிடம் மெதுவாகச் சொன்னார் இந்தக் காட்சியை எல்லாம் நான் ஏற்கனவே பார்த்திருக்கேன் கோபி என்று.

ஏன் சார் எல்லா சூட்டிங்லயும் இப்படித்தான் கூட்டம் வருமா... என்றேன். இல்லை 20 வருடத்துக்கு முன்னாலே பார்த்திருக்கேன. என் மனசுல இந்தக் காட்சி அப்படியே ஓடும், என் கனவுல வரும்... அதுல... நான் நடந்து போவேன். கூட்டம் அலை மோதும்... ஆட்டோகிராப் கேப்பாங்க, பேப்பர்ல என் போட்டோ வரும்... ஊரெல்லாம் என் போஸ்டர் ஒட்டி இருப்பாங்க.


தினமும் இந்தக் காட்சிகள் என் மனசுல ஓடிகிட்டே இருக்கும். சில வருஷங்களா நிஜத்துல அது நடக்குது. இன்னும் சொல்லப்போனா இந்தக் கூட்டத்துல இருக்கிற முகங்கள்கூட நான் பார்த்த மாதிரி இருக்கு என்றார். எந்த அளவுக்கு... தான் என்ன ஆக வேண்டும் என்பதை தன் ஆழ்மனதுக்கு விளக்கமாக சொல்லி இருக்கிறார் அவர் என்று பாருங்கள்.

இந்த நடிகரும் நிறைய தோல்விகள் நிறைய கஷ்டங்கள் சந்தித்தவர்தான். ஆனாலும் அவர் தீவிரமாக விரும்பிய விஷயம், மனதில் வைத்திருந்த காட்சி உண்மையில் நடக்கிறது. சந்தேகம் இல்லாமல் உங்கள் ஆழ்மனத்தை நம்புங்கள்.

அடிக்கடி உங்களின் தீவிரமான ஆசையை அதற்கு வடிவம் கொடுத்து அதனிடம் சொல்லுங்கள். அதற்குப் பிறகு அது உங்களை சும்மா இருக்கவிடாது. அது தொடர்பான




விஷயங்களை நோக்கி உங்களை துரத்தி விடும். பெரிய விஞ்ஞானி ஆக வேண்டும் என்று சொல்லிவிட்டு சும்மாயிருக்கிறாயே...



ஒரு... வர்த்தக மையத்தில் கண்காட்சி நடக்கிறது ஓடு என்று விரட்டும். இரயில் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர் ஒரு விஞ்ஞானி அவரை விடாதே... அவரிடம் பேசி தொடர்பை ஏற்படுத்திக் கொள் என்று நச்சரிக்கும். அந்தப் புத்தகத்தை படி... இந்த புத்தகத்தை வாங்கு என்று தொல்லை பண்ணும்.

அது தொடர்பான வெற்றிகளுக்காக உங்களை தட்டிக் கொடுக்கும், தோல்விகளுக்காக ஆறுதல் சொல்லும், அவசரப் பட்டால் தடுத்து நிறுத்தும், முடங்கி கிடந்தால் எழுப்பி விடும் முட்டாள் என்னடா செய்ற... என்று அசிங்கப்பட்டால் ஆவேசமாய் திட்டும்.

**நீங்கள் நினைத்ததைப் பெற ஆழ்மனதின் திடம் ஒன்று போதும்... பணம் உள்பட எல்லாவற்றையும் அது கொண்டு வந்து சேர்க்கும். நீங்கள் செய்ய வேண்டியது இரண்டே இரண்டு விஷயம்தான்... ஒன்று உங்களின் இலக்கை ஆழ்மனதுக்கு அழுத்தமாகவும் தெளிவாகவும் சொல்வது. இன்னொன்று ஆழ்மனதின் சக்தியை சந்தேகம் இல்லாமல் நம்புவது.**



## 12

இந்த உலகமே உங்களுக்கு எதிராக நடக்கிறது என்றால் இந்த ஒட்டு மொத்த உலகத்திற்கு எதிராக நீங்களும் நடந்து கொள்கிறீர்கள் என்றுதானே அர்த்தம்.

“இந்த உலகமே எனக்கு எதிராக நிற்கிறது.

“நான் எது செஞ்சாலும் அதுல குத்தம் கண்டு பிடிக்கிறதே இந்த மேனேஜரோட வேலை.”

“நான் செஞ்ச வேலைக்கான கிரெடிட் எல்லாத்தையும் அவர்கள் எடுத்துக் கொண்டார்கள்.”

“எனக்கு ஆதரவாக இங்கு யாருமே இல்லை.”

“யாரையுமே நம்ப முடியவில்லை.”

“நண்பனைப்போல இருந்து கழுத்தை அறுத்து விட்டான்.”


இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ குறைகளை சொல்கிறோம் தினந்தோறும். நாம் நினைத்தபடி ஒரு விஷயம் நடக்கா விட்டாலோ அல்லது செய்ய வேண்டிய எல்லாவற்றையும் முறையாகச் செய்தும் அதற்குரிய பலன்கள் கிடைக்காமல் போனாலோ இப்படி நிறைய சொல்கிறோம்.



இந்த அத்தனை குற்றச்சாட்டுகளையும் ஒரே வரிக்குள்ளும் அடக்கலாம்.

“இங்கு எல்லாமே எனக்கு எதிராக நடக்கிறது.”

இந்த உலகமே உங்களுக்கு எதிராக நடக்கிறது என்றால் இந்த ஒட்டு மொத்த உலகத்திற்கு எதிராக நீங்களும் நடந்து கொள்கிறீர்கள் என்றுதானே அர்த்தம்.



அதெப்படி இத்தனை பேரில் ஒருவருக்கு கூடவா உங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இல்லை... இல்லை “என் நண்பன் ஒருவன் இருக்கிறான் அவன்தான் என்னை முழுமையாகப் புரிந்து கொண்டவன்.”

நன்றாக யோசித்துப் பாருங்கள் போனமாதம் வரை உங்களை புரிந்து கொண்டதாக நீங்கள் அடையாளம் காட்டியது வேறொரு நண்பனை. “நண்பனாக நடித்து ஏமாற்றி விட்டான்” என்று 10 நாட்களுக்கு முன்புதான் அவனோடு சண்டை போட்டு பேச்சு வார்த்தையை முறித்துக் கொண்டீர்கள்.

உங்கள் மனதுக்குப் பிடித்த நம்பிக்கைக்குரிய நண்பன் மாதா மாதம் மாறிக்கொண்டே இருக்கிறான். இப்படிச் சொல்லுகிற... செய்கிற பலரும் “தங்களின் கருத்தே சரி... தங்களின் செயலே தலை சிறந்தது” என்ற எண்ணத்தைக் கொண்டவர்கள் என்கிறார் - கெய்ல் சேயர்ஸ்.

தங்களின் கருத்தை, கண்டுபிடிப்பை, அறிவுத்திறனை “அர்த்தமில்லாமல்” அளவுக்கு அதிகமாக நேசிப்பதால் வருகிற வினை இது என்கிறது கேயர்சின் ஆராய்ச்சி.

**உங்களை ஒருவரும் புரிந்து கொள்ளவில்லை என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருக்கிறீர்களே நீங்கள் ஏன் இதுவரை யாரையும் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வில்லை.**

காரணம் நீங்கள் செய்வதுதான் சரி... நீங்கள் செய்வது மட்டும்தான் சரி என்கிற மனோபாவம்... உண்மையில் இப்படிப்பட்ட குணம் கொண்டவர்கள் நல்ல அறிவாளிகளாகவும், உழைப்பாளிகளாகவுமே இருக்கிறார்கள் என்று சேயர்சின் ஆய்வு சொல்லுகிறது.

தன்னையே முன் மாதிரியாக உருவகப்படுத்திக் கொள்வதால் தன்னைப் போன்று இயங்காத எல்லாரும் உழைக்காமல் சம்பாதிக்கிறார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு வந்து விடுகிறதாம். விளைவு நீ அதைச் செய்யவில்லை. இதைச் செய்யவில்லை... ஆனால் உனக்கு எல்லாமே கிடைத்து விட்டது என்று எரிச்சல் அடைகிறார்கள்.

உண்மையில் நான் உண்டு என் வேலை உண்டு என்று சொல்லிக் கொண்டு இருக்கிற நீங்கள்தான் உலகம் என்ன செய்கிறது என்று ஒவ்வொன்றாய் கவனித்துக் கொண்டே இருக்கிறீர்கள்.



நீங்கள் அடுத்தவன் என்ன செய்கிறான் என்று கவனித்துக் கொண்டே இருப்பதைப்போல, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை உலகம் பார்த்துக் கொண்டும், கவனித்துக் கொண்டும் இருப்பதாக நினைத்துக் கொள்கிறீர்கள்.



முதலில் நீங்கள் உங்களை கவனியுங்கள். அடுத்தவன் அவனது வேலையை கவனிக்கட்டும் என்று தீர்மானமாகச் சொல்லுகிறார் - கெய்ல் சேயர்ஸ், எங்கே தனது திறமையையும், அறிவையும், உழைப்பையும் இந்த சமுதாயம் கவனிக்காமலும் அங்கீகரிக்காமலும் போய் விடுமோ என்கிற கவலையையும் பதட்டத்தையும் விட்டு விடுங்கள். சுதந்திரமாக உங்கள் பணிகளைச் செய்யுங்கள்.

அடுத்தவர் என்ன செய்கிறார் என்பதை கவனித்து, அதனுடன் உங்கள் பணியை ஒப்பிட்டு நீங்கள் பேசுகிறபோது அது குற்றச்சாட்டு ஆகி விடுகிறது. உங்கள் பணியை அதன் பலனை முன் வைத்துப் பேசுகிறபோது அது நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை விளக்குவதாகிறது.

**தொடர்ந்து நீங்கள் அடுத்தவருடன் உங்களை ஒப்பிடுவதால் பலவீனமாகிறீர்கள். "இவருக்கு இதாம்ப்பா வேலை... யாரையாவது குறை சொல்லிக் கொண்டே இருப்பார்" என்று உங்களுக்கெதிரான கூட்டத்தை நீங்களே உருவாக்கி விடுகிறீர்கள்.**

உங்களுக்கு எதிரான கூட்டத்தின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில் உங்கள் பயம் அதிகமாகிறது. விளைவு முன்பை விட அதிகமாக குறை சொல்ல ஆரம்பிக்கிறீர்கள். அப்போதைக்கு உங்கள் திறனை பாராட்டும் ஒருவர் உங்கள் நண்பனாகிறார். உங்கள் கருத்துக்கு விரோதமான விஷயத்தை அவர் சொல்லும்போது அவரும் உங்கள் பார்வையில் உங்களுக்கு எதிரியாகி விடுகிறார். கடைசியில் நீங்களே சொல்வதுபோல் இந்த உலகமே உங்களுக்கு எதிராக நிற்கிறது.

அடிப்படையில் நீங்கள் மற்றவர்களை எப்படி நினைக்கிறீர்களோ, அவர்களும் உங்களை அப்படித்தானே நினைப்பார்கள்.

ஊருக்கு வெளியே ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். அந்த ஊரில் குடியேறலாம் என்ற எண்ணத்தில் அங்கு வந்த ஒருவர், பெரியவரிடம் ஐயா இந்த ஊர்க்காரர்கள் எப்படி என்று கேட்டார். பெரியவர் பதிலுக்கு நீங்கள் இருந்த ஊரில் இருந்த மனிதர்கள் எப்படி என்று கேட்டாராம்.

"ஐயோ அந்த ஊர்க்காரர்கள் எல்லாரும் திமிர் பிடித்தவர்கள், அடுத்தவனுக்கு கெட்டது நடந்தால் சந்தோஷப் படுவார்கள், பொறாமை பிடித்தவர்கள்" என்று பட்டியல் வாசித்துக் கொண்டே போனாராம் குடியேற வந்தவர். பெரியவர் ஒற்றை வரியில் இந்த ஊர்க்காரர்கள் அதைவிட மோசமான வர்கள் இங்கு குடியேற வராதே என்று அவனை அனுப்பி வைத்தாராம்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அந்த ஊர் இளைஞன் ஒருவன்... என்ன ஐயா இப்படிச் சொல்லி விட்டீர்கள். நம் ஊர்க்காரர்கள் எல்லாரும் நல்லவர்கள்தானே என்று கேட்டான். அதற்கு பெரியவர், இவனை இங்கு குடியேற விட்டால் இன்னும் ஒரு மாதம் கழித்து பக்கத்து ஊரில் போய் நம்மூர்க்காரர்கள் எல்லாரும் கேவலமானவர்கள் என்று சொல்லுவான் என்றாராம்.

இப்படிதான் எல்லாரையும் குறை சொல்ல ஆரம்பிக்கிற வர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். கடைசியில் யாரை நம்புவது... யாரை நம்பாமல் இருப்பது என்ற குழப்பம் வந்து எல்லாரையும் நம்பாமல் போக வேண்டிய நிலைமை வருகிறது.

முதலில் ஒரு விஷயத்தை புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. உலகமே எதிர்க்கிற அளவுக்கு நீங்கள் பெரிய ஆள் இல்லை.

**இந்த உலகம் முழுவதும் நீங்களாகவே இருந்தாலன்றி, நீங்கள் நினைக்கிற மாதிரி உலகம் இருக்காது. உங்கள் வறட்டுத்தனங்களை கழற்றி வைத்து விட்டு "எல்லாரும் நல்லவர்கள்" என்ற நம்பிக்கையுடன் பழகுங்கள்.**

இந்தக் காலத்துல அப்படியெல்லாம் இருக்கக்கூடாது. எல்லாரையும் நம்புனா என்னத்துக்கு ஆகுறது என்று உங்கள் உள் மனசு சொல்லலாம்.

**"எல்லாரையும் நம்புவது ஆபத்து**
**யாரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து"**

நீங்கள் எதையாவது நம்பித்தான் வாழ்ந்தாக வேண்டும். கடவுளையாவது நம்பத்தான் வேண்டும். இப்படி உலகமே



உங்களுக்கு எதிராக இயங்குவதாக நினைத்துக் கொண்டால் கடவுள் வருவதும் உங்கள் கண்ணுக்குத் தெரியாது.

ஒரு படகில் கொஞ்சம் பேர் போய்க்கொண்டு இருந்தார்கள். திடீரென பேரலை... அலையின் ஆவேசத் தாக்குதலுக்கு தாக்குபிடிக்க முடியாமல் படகு கவிழ்ந்து போனது. யாரையும் நம்பாத குணமுள்ள ஒரு ஆள் அதிலிருந்து தட்டுத்தடுமாறி ஒரு மணல் திட்டுக்கு வந்து சேர்ந்தார். மறுநாள் காலை அந்த வழியாய் ஒரு படகு வந்தது. அதில் இவருடன் பயணம் செய்து தப்பியவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். இவரைப் பார்த்தவுடன் வா... தப்பித்துப் போகலாம் என அழைத்தார்கள். இவரோ நான் வரவில்லை நீங்கள் போங்கள்... கடவுள் என்னைக் காப்பாற்றுவார் என்றார்.



படகில் இருந்தவர்களோ புயல் வரும்போல் இருக்கிறது வா... போகலாம் என எவ்வளவோ சொல்லியும் அவர் மறுத்து விட்டார். காரணம் படகைக் கவிழ்த்ததே அவர்கள்தான் என்பது இவரது எண்ணம். அடுத்ததாக ஒரு ஹெலிகாப்டர் வந்தது. அவர்களின் உதவியையும் நிராகரித்து விட்டு அவர் கடவுளுக்காக காத்திருந்தார்.

கடவுளுக்கு பதிலாக புயல் வந்தது. மணல் திட்டு மூழ்கி இவரின் உயிரும் போனது. மேலோகத்திற்கு போன நம்பிக்கையில்லா பார்ட்டி கடவுளிடம் சண்டைக்குப் போனார்... கடவுளே உன்னை எவ்வளவு நம்பினேன். நீ ஏன் என்னை காப்பாற்ற வரவில்லை என்று கடிந்து கொண்டார்.

அட மூடனே ஒன்றுக்கு இரண்டு முறை நான் வந்தேன். நீதான் என்னுடன் வரமறுத்து விட்டாய் என்றார் கடவுள். படகில் வந்தவர்கள் வடிவிலும், ஹெலிகாப்டரில் வந்தவர்கள் வடிவிலும் வந்த கடவுளை நம்பிக்கையில்லாத பார்ட்டியால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அருகில் இருக்கிற மனிதனையே புரிந்து கொள்ள மறுக்கிற, நம்ப மறுக்கிற நாம் கடவுளை எப்படிப் புரிந்து கொள்வது. யாரையுமே நம்ப மறுக்கிற உங்களை கடவுள் எப்படி நம்புவார்.

இந்த உலகம் எப்போதும்போல்தான் இருக்கிறது. நீங்கள்தான் அதை எதிரியாகப் பார்க்கிறீர்கள். ஸ்லாட்டர் சொல்வது போல "மனிதனை எதிரியாகப் பார்க்கிறவன்... கடவுளையும் எதிரியாகவே பார்க்கிறான்."

உங்களை சுற்றி நடக்கிற எல்லாம் உங்களை துன்புறுத்து வதற்காக நடக்கவில்லை என்று நம்புங்கள். இல்லையென்றால் கடைசிவரை மண் திட்டில் கடவுளுக்காக காத்திருக்க வேண்டியதுதான்.



# 13

இழந்துபோனதை குறித்த நினைவுகளையும், கவலைகளையும் உள்ளங்கைக்குள் வைத்து மூடிக்கொண்டு சிரமப்படுகிறோம். அதை விட்டுவிட்டால் வெளியே வந்து விடலாம். ஆனால் விடமாட்டோம். குரங்குக்குத்தான் இது தெரியாது. நமக்குங்கூடவா தெரியாது.

எங்ககிட்ட ஒரு ஏற்றுமதி கம்பெனி இருந்துச்சு, எங்க தாத்தா, அப்பா எல்லாருக்கும் அதுதான் பிசினஸ். டாலர் மதிப்பு குறைஞ்சதால கொஞ்சம் கொஞ்சமா நஷ்டம் ஆகி கடைசியில அந்த கம்பெனியவே மூடிவிட்டோம். அது மட்டும் இப்ப இருந்து இருந்தா எங்க நிலைமையே வேற... இப்படி நாங்க அல்லாட வேண்டியதில்லை...

கிராமத்துல 10 ஏக்கர் நஞ்சை... 10 ஏக்கர் புஞ்சை, தென்னந்தோப்பு, பம்பு செட்டுன்னு முப்போகம் விளையுற பூமி. ஹூம் அதெல்லாம் ஒரு காலம். அது மட்டும் இப்ப இருந்தா... கால நீட்டிகிட்டு உட்கார்ந்து சாப்பிடலாம்.

உண்மையாகவே இதெல்லாம் இருந்து தற்போது இல்லாமல் போனவர்களின் நிலை ரொம்பவே வருத்தமானதுதான். காசு இருக் கிறப்ப எல்லாரும் வந்தாங்க... இப்ப யாருமே கண்டுக்கறது இல்ல. அப்பல்லாம் கோவில் திருவிழான்னா எங்க வீட்டுல இருந்துதான் சாமியே எடுப்பாங்க. இப்ப யாரும் ஏன்னு கூட கேக்குறது இல்ல.

இந்த வருத்தமெல்லாம் கவலைக்குரியதுதான். யாரிடமாவது நாம் இப்படி புலம்புகிறபோது அவர்களும் கவலைப்படாதீர்கள் எல்லாம் திரும்ப வரும் என்று தெம்பாக நாலு வார்த்தைகள் சொல்வார்கள். அதற்காகத்தானே இத்தனை புலம்பல். ஆனால் அவர் அப்படிச் சொல்வதனால் எதுவும் நடக்கப்போவதில்லை.

இது இல்லாமல் போனதால் நமக்கு எதுவுமே இல்லாமல் போனது என்று நினைக்கிற வரை, போன எதுவும் திரும்ப வரப்போவதில்லை. பூர்ண கும்ப மரியாதை, 10 ஏக்கர் தோப்பு, ஏற்றுமதி கம்பெனி இப்படி எதுவும்...

ஏம்ப்பா... நீ ரொம்பத்தான் அநியாயம் பண்ற. இருந்ததெல்லாம் போச்சேன்னு மனுஷன் புலம்பக்கூட கூடாதா என்று கேட்கலாம். அப்படிப் புலம்பினால் போனதெல்லாம் வந்து விடும் என்றால் புலம்புங்கள். அழுங்கள். ஆறுதல் சொல்கிறேன் பேர்வழி என்று இன்னமும் உங்களை இன்னும் நாலு பேர் மேலும் அசமந்தமாக்கப் போகிறார்கள் அவ்வளவுதான்.





உண்மையில் பார்க்கப்போனால் உங்களிடம் இருந்தது எல்லாமே உங்களின் முந்திய தலைமுறையின் உழைப்பாலும் தன்னம்பிக்கையாலும் வந்தது. அப்படி வந்த பொருட்கள் இல்லாமல் போனதால் நமக்கு முந்தைய தலைமுறையிடமும் நம்மிடமும் நிறைய இருந்த நம்பிக்கையையும், மன உறுதியையும் தொலைத்து விட்டோம். இன்னொரு கோணத்தில் பார்த்தால் "காலாட்டிக் கொண்டே சாப்பிடலாம்" என்ற எண்ணத்தில் அடி விழுந்ததால் ஏற்பட்ட எரிச்சல் அது.

கார்ன் ஹூயி... ஒரு பெரிய மனவியல் ஆராய்ச்சிக்கு பிறகு ஒன்று சொல்கிறார். இவர்கள் எல்லாரும் தங்கள் சோம்பேறித்தனத்தை மறைக்கவும் தொடர்ந்து உழைத்து ஜெயிக்க வேண்டும் என்று சொல்லுகிற அவர்களின் போராட்ட மனதை ஏமாற்றவும் இப்படி இல்லாததை காரணம் காட்டி தங்களைத் தானே ஏமாற்றிக் கொள்கிறார்கள் என்கிறார்.

**அது இருந்திருந்தால் இதைச் செய்திருப்பேன், இது இருந்திருந்தால் அதைச் செய்திருப்பேன் என்று சொல்ல ஆரம்பிக்கிறபோது, இல்லாமல் போன விஷயம் மட்டுமே மனதுக்கும், கண்ணுக்கும் தென்படுகிறது. மேலும் மேலும் உயரவும், விட்ட இடத்தை பிடிக்கவும் உங்கள் கண் முன்னே கிடக்கிற வாய்ப்புகள் எல்லாம் வீணாகின்றன.**

ஒரு நிலையில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த மூளையும், மனதும் சுருங்கிப்போய் புலம்புவதற்கு ஆள் தேடுவதிலேயே பொழுது விடிகிறது... முடிகிறது. இதன் அடுத்த நிலை இன்னமும் ஆபத்தானது. நீங்கள் புலம்புகிற நபரிடமும் இதே மாதிரி கதை இருக்குமென்றால் இந்த பரிமாற்றப் புலம்பல்கள் உங்களுக்கு ரொம்பவே பிடித்துப் போகும்.

நீங்கள் உங்கள் முதல் மரியாதை கதையை எடுத்து விட்டால், அவர் நாட்டாமை கதையை போட்டிக்கு சொல்லுவார். போராடி ஜெயிப்பதில் வல்லவரான நீங்கள் ரெண்டு பேரும் புலம்புவதில் யார் சிறந்தவர் என்று போட்டி வைத்துக் கொண்டு இருப்பீர்கள்.

விட்டதைப் பிடிப்பது எப்படி என்று அவ்வப்போது பேசுவீர்கள். விட்டதை ஒரே நாளில் பிடிப்பதற்கான வில்லங்கமான வழிகளைத் தேடுவீர்கள். நிறைய யோசனைகளை உருவாக்குவீர்கள். இழந்ததை பிடிக்க வேண்டும் என்பது மட்டும்தான் உங்கள் குறியாக இருக்குமே ஒழிய இருப்பதை வைத்துக் கொண்டு படிப்படியாக உயர்வது எப்படி என்பது உங்கள் பரிசீலனையில்கூட இருக்காது.

இதில் உள்ள இன்னொரு உளவியல் சிக்கல் என்னவென்றால், தாங்கள் தாழ்ந்து விட்டோம் என்று ஊர் பேசாத அளவுக்கு, தங்களை காட்டிக் கொண்டு உடனடியாக உயர்ந்து விட வேண்டும் என்று நீங்கள் நினைப்பதுதான் அது.

நீங்கள் ஒரே இரவில் உங்களுடைய அனைத்து சொத்துக்களையும் இழந்து விட்டதாக சொல்லிக் கொண்டாலும், அவை படிப்படியாகத்தான் பறிபோய் இருக்கும் என்பதே யதார்த்தம்.

அப்படித்தான்... மீண்டும் படிப்படியாகத்தான் உங்களால் உயர முடியும். நீங்கள் பணம் வைத்திருக்கிறபோது மட்டும் உங்களோடு அளவளாவிய கூட்டம் இன்றைக்கு உங்களை மதிக்கவில்லை என்று ஏன் கவலைப்படுகிறீர்கள். அவர்கள் உங்களோடு இருந்தது உங்கள் காசுக்காகத்தான் என்று இப்போது புரிந்து விட்டதுதானே. பிறகேன் அவர்களைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள்.

**உங்களின் உண்மையான நண்பர்களையும் உறவுகளையும் உங்களது வீழ்ச்சி அடையாளம் காட்டியிருக்கிறதே... அதற்காகச் சந்தோஷப்படுங்கள். காசுக்காக பழகுகிற கூட்டம் பணம் வந்தால் தானாக வரப்போகிறது.**

இந்த உலகம் அப்படித்தான்... இதற்கெல்லாம் கவலைப் பட்டுக்கொண்டே இருக்க முடியாது. நீங்கள் இழந்தது எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். நம்பிக்கையை மட்டும் இழக்கவே இழக்காதீர்கள்.

நான் என் வாழ்வை அடிப்படையில் இருந்து துவங்க வேண்டும்" என்ற முடிவுடன் உலகத்தைப் பாருங்கள்.



உங்கள் கண்ணெதிரே வாய்ப்புகள் கொட்டிக்கிடக்கும்.

எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக்கூடாது என்று தெளிவாய்த் தெரியும். என்ன செய்வது என்று பரிதவித்துக் கொண்டும், பயந்து கொண்டும் இருந்தால் உங்கள் கையிலேயே வாய்ப்பிருந்தாலும் அதை கவனிக்க முடியாது.

இன்னொரு முக்கியமான விஷயம், உங்களிடம் காசு இருந்தபோது நட்பு பாராட்டி விட்டு இப்போது ஏளனமாகப் பார்க்கிறவர்களுக்காக நீங்கள் உயர வேண்டியதில்லை. நீங்கள் உழைக்க வேண்டியதும் போராட வேண்டியதும் உங்களுக்காக, உங்கள் குடும்பத்துக்காக, அம்மாவை மீண்டும் காரில் கூட்டிப் போவதற்காக, தங்கையை பெரிய இடத்தில் திருமணம் செய்து கொடுப்பதற்காக... உங்களின் அன்புக்கு உரியவர்களுக்காக... அந்த பணத்துக்காக பழகியவர்களிடம் நிரூபிப்பதற்காக அல்ல.

விட்டுப்போன அந்த பழைய நண்பர்களின் செயலை மனதில் வைத்துக் கொண்டால் தானே ஒரு வைராக்கியம் பிறக்கும். உத்வேகத்தோடு வேலையைச் செய்யலாம்... என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. அந்த எண்ணம் உங்களுக்கு அழுத்தமான நிர்பந்தத்தைக் கொடுக்கும். திட்டமிடுதலையும், செயலாற்றலையும் திசை திருப்பும். அவசரப்பட வைக்கும். உங்கள் நிதானத்தை விலை பேசும்.

உங்கள் பாசத்துக்குரியவர்களுக்காக நீங்கள் அதைச் செய்கிறபோது பலு தெரியாது, பதட்டம் இருக்காது. கண்முன் இருக்கிற வாய்ப்புகள் தெளிவாகப் புரியும்.

**இழந்ததைப் பற்றி கவலைப்படுவதை விட்டு இருப்பதை கவனிக்கத் துவங்கினாலே நீங்கள் பழைய நிலைக்கு செல்லும் பாதையின் முதல்படியை தொட்டு விட்டீர்கள் என்றுதான் அர்த்தம்.**

ஓய்வுக்குப் பிறகு நிறைய பேர் நான் எப்படி இருந்தேன் தெரியுமா என்று புலம்புவதற்குக் காரணம்... அவர்களுக்கு இழந்ததின் மீதிருக்கிற ஈர்ப்புதான்.

அதனாலேயே ஓய்வுக்குப் பிறகு பெற வேண்டிய உயரிய இடங்களையும் அவர்கள் கவனிக்கத் தவறி விடுகிறார்கள்.

அமெரிக்காவில் கர்னல் - சாண்டர்ஸ் என்கிற 65 வயதுத் தாத்தா ஓய்வு பெற்ற பிறகு அவரிடம் மிச்சமிருந்தது ஒரு உடைந்த காரும் நன்றாகச் சமைக்கிற அவர் அம்மா உருவாக்கிய ஒரு 'ரெசிபி'யும்தான்.

வேலையில் இருக்கிறபோது இருந்த வாழ்க்கை இப்போது இல்லை. என்ன செய்வது... புலம்பவில்லை, குழம்பவில்லை. வித்தியாசமாக யோசித்தார். தன் அம்மாவின் ரெசிபி புத்தகத்தை எடுத்துக் கொண்டு நிறைய உணவு தயாரிப்பு நிறுவனங்களின் கதவுகளைத் தட்டினார். ஒருவரும் அதை வாங்கிக் கொள்ளத் தயாரில்லை.



போய்யா கிழவா என்று வெளியேற்றிய கதவுகளும் உண்டு. நான் ரிடையர் ஆகுறவரை என்னை மரியாதை செய்த சமுதாயம் இப்போ ஏளனமாப் பார்க்குதே என்று யாரிடமும் புலம்பவில்லை சாண்டர்ஸ்.

அவரைப் பொறுத்தவரை அவர் தனது வாழ்வை மீண்டும் ஆரம்பித்து இருக்கிறார்.

ஒவ்வொரு நிறுவனமாக ஏறி இறங்கிய சாண்டர்சுக்கு திடீரென ஒரு யோசனை, ஓய்வூதியப் பணம் கொஞ்சம் நம்மிடம் இருக்கிறது. இதை நாமே செய்தால் என்ன என்று... உடனே முடிவெடுத்தார்.

இன்று உலகம் முழுவதும் அவரது நிறுவனம் கொடிகட்டிப் பறக்கிறது. இந்தியாவிலும்கூட வெற்றிகரமாக கால்பதித்து விட்டார்கள். ஒரு மீசைக்கார தாத்தா படம் போட்ட KFC கடைகளை நீங்களும் பார்த்திருப்பீர்கள். இன்று கென்டகி வறுத்த கோழி, உலகம் முழுவதும் பிரசித்தம்.



65 வயதுக்குப் பிறகு உலகம் அறியும்படி தன்னை உயர்த்திக் கொண்டது கர்னல் - சாண்டர்ஸின் சாதனை. அதற்குக் காரணம் கண் முன்னே இருந்த வாய்புகளை அவர் கவனித்தார்.

மூடிவிட்ட கதவுகளைப் பற்றி அவர் கவலைப்படவில்லை

**இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை என்றான பிறகு, புதிதாக வாழ்க்கையைத் தொடங்க வேண்டியதுதானே. அநேகமாய் ஆரம்பத்தில் அது பழைய வாழ்க்கையைப்போல் சுகமானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் இழந்துபோனதைப் பற்றி நினைத்துக் கொண்டே இருந்தால் எதிர்காலமும் இழப்புக்கு ஆளாகும்.**

அது எப்படி... அமோகமாய் வாழ்ந்த வாழ்க்கையை மறக்க முடியுமா... என்னப்பா பேசற நீ எனலாம். உண்மைதான்... ஆனால் நடைமுறை வேறல்லவா.

சில விஷயங்களை விட்டால்தான் பல விஷயங்களைப் பெற முடியும். உங்களுக்கு குரங்கை எப்படிப் பிடிப்பார்கள் என்று தெரிந்திருக்கலாம். ஒரு கையை கஷ்டப்பட்டு நுழைக்கிற அளவு சிறிய வாய் கொண்ட ஒரு கனமான பானைக்குள், குரங்குக்கு பிடித்த கடலைமிட்டாய், பதார்த்தங்கள் போன்றவற்றை போட்டு விடுவார்கள்.

குரங்கு அந்த வாசனையை வைத்து அங்கே வரும். பெண்கள் வளையல் மாட்டுகிற ஸ்டைலில் விரல்களை நேராக வைத்துக் கொண்டு கையை உள்ளே விடும். இப்போது கை எளிதாக உள்ளே சென்று விடும். உள்ளே கிடக்கிற பண்டங்களை எடுத்துக் கொண்டு கையை மூடும். இப்போது கை வெளியே வராது.

உள்ளங்கையை மூடிக்கொண்டு வளையலைக் கழட்டினால்... அதே மாதிரிதான். அந்த கனமான பானையை தூக்கிக் கொண்டும் ஓட முடியாது. கையில் இருப்பதை கீழே, உள்ளேயே போட்டு விட்டால் கையை உள்ளே நுழைத்த மாதிரியே வெளியே எடுத்துக் கொண்டு அது தப்பி விடலாம்.

ஆனால் குரங்குக்கு அது தெரியாது அல்லது தோன்றாது.

மூடிய கையுடனேயே கையை வெளியே கொண்டுவர படாத பாடுபடும். கண்ணி வைத்தவர் வந்து சிக்கிக் கொண்ட குரங்கை கொண்டுபோய் விடுவார்.

இப்படியேதான் இழந்து போனது குறித்த நினைவுகளையும், கவலைகளையும் உள்ளங்கைக்குள் வைத்து மூடிக்கொண்டு நாம் சிரமப்படுகிறோம். அதை விட்டு விட்டால் வெளியே வந்து விடலாம். ஆனால் விடமாட்டோம்.


சரி. குரங்குக்குதான் தெரியாது... நமக்கும் கூடவா தெரியாது.

சில நேரங்களில் தெரிந்தே சில அநாவசியச் சுமைகளை சுமக்கிறோம். ஒரு நிலையில் அது பழகி விடுகிறது. அடுத்த நிலையில் அந்த சுமை இல்லாவிட்டால் வாழ்க்கை நார்மலாக இல்லாதது மாதிரி ஆகி விடும்.

சாராய பேக்டரி இருக்கிற ஏரியாவில் இருக்கிறவர்களுக்கு அந்த வாசனை பழகிப்போவது மாதிரி...

> **"இழந்ததன் மீது மனிதனுக்கு எப்போதுமே ஒரு ஏக்கம் இருக்கிறது. அதைத் தொலைத்தாலன்றி அவனுக்கு புதிதாய் வேறொன்று கிடைக்கப்போவதில்லை" என்கிறார் ஆன் லீ.**

குரங்கு மாதிரி கையை மூடிக்கொண்டு அர்த்தமில்லாமல் போராடாதீர்கள். உதறி விட்டு வாருங்கள், உலகமே உங்களுக்காகத்தான் காத்திருக்கிறது. அது உங்களின் பழைய பிம்பங்களைவிட மேலானது.. உயர்வானது.



# 14

எந்த விஷயத்தை செய்வது உங்களுக்கு ரொம்பவும் எளிதாக இருக்கிறதோ, அதைவிட கடினமான வேலையை செய்ய நீங்கள் தகுதியானவராக இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

H.G.Wells என்று ஒரு அறிஞர். போட்டியில் இரண்டாவதாக வருபவன்...

இதைச் செய்யலாம். ஆனால் கடினம் என்று சொல்பவன்...

முதலாவதாக வருபவன்...

இது கடினம்தான் ஆனால் செய்யலாம் என்று சொல்பவன்

என்கிறார்.

கேட்பதற்கு கொஞ்சம் கஷ்டமாகத் தெரிந்தாலும் விஷயம் ரொம்பவே ஆழமானது. முதலில் வருபவன் இரண்டாவதாக வருபவன் இருவரின் பார்வையும் எதன் மீது இருக்கிறது என்பதுதான் முக்கியம்.

முதலில் வருபவனுக்கு "அந்த வேலையைச் செய்ய வேண்டும்" என்பதன் மீது கவனம்.

இரண்டாவதாக வருபவனுக்கு "அந்த வேலையைச் செய்வது கடினம்" என்பதன் மீது கவனம்.

நீங்கள் எதன் மீது கவனம் செலுத்துகிறீர்களோ அதன்படியே உங்களின் வெளிப்பாடுகள் இருக்கின்றன.

ஒருவேலையைச் செய்கிறபோது அதில் இருக்கிற சாதக, பாதகங்களை, கஷ்ட, நஷ்டங்களை கவனித்து அதில் கால் வைக்க வேண்டும் என்பது புத்திசாலித்தனம். ஆனால் இந்த புத்திசாலித்தனத்தை பல நேரங்களில் அந்த வேலை கஷ்டம் என்று சொல்லி ஒதுக்கி வைப்பதற்கு பயன்படுத்தி விடுகிறோம்.



எச்.ஜி.வெல்ஸ்

ஆங்கிலத்தில் Comfort zone என்று ஒரு வார்த்தை சொல்வார்கள். 'வசதியான சூழல்'- இதற்கு பழகிப்போகிற மனசும், உடம்பும் கண்முன்னே தெரிகிற வாய்ப்புகளைக்கூட அது கஷ்டம், அதனால் தேவையில்லை என்று சொல்லி ஒதுக்கி வைத்து விடுகிறது. நமக்குள் இருக்கிற திறமைக்கும் ஞானத்துக்கும் என்ன பலன் இருக்கிறது என்பதை பரீட்சித்து பார்க்காமலேயே முடங்கிப்போக வைக்கிறது.

இதை ஏன் இழுத்துப் போட்டுக்கிட்டு கஷ்டப்படுவானேன் என்கிற எண்ணம்... செய்வதற்கு சாத்தியமான பல சாதனைகளையும் தவிர்த்து விடுகிறது. ஒருவேளை இந்த Comfort zoneல் இல்லாமல் இருந்திருந்தால் அதைக் கட்டாயம் கையில் எடுத்திருப்போம்.

"இருப்பதை விட்டு விட்டு பறப்பதற்கு ஆசைப் படக்கூடாது" என்பது ஒரு விஷயம்.

ஆனால் நீங்கள் உங்கள் தகுதிக்கும், அறிவுக்கும், திறனுக்கும் உரிய தகுதியான இடத்தில்தான் இருக்கிறீர்களா என்பதுதான் முக்கியம். உங்களுக்கு இருப்பது போதும் என்ற எண்ணம் இருக்கலாம். ஆனால் ஆழ்ந்து யோசித்துப் பாருங்கள். இந்த



இருப்பதுபோதும் என்கிற எண்ணத்திற்குள் ஒளிந்து கிடப்பது ஏன் கஷ்டப்பட வேண்டும்? பின்னால் என்கிற எண்ணம் தானே.

இதை நான் சொல்லவேண்டும் என்று தோன்றியதற்கு காரணமும் இருக்கிறது. இன்றைக்கு எதிலுமே ஸ்திரத்தன்மை இல்லாத நிலையில் பொருளாதாரமும், சமூக சூழலும் நம்மை நெருக்கிக் கொண்டு இருக்கின்றன. எனக்குத் தலைமைப் பதவியில் இருக்கும் ஒருவர் - எப்போது நீ Comfort zoneல் இருப்பதாக உணர்கிறாயோ அப்போது அதை விட்டு விட்டு வெளியேறு என்று அடிக்கடி சொல்லுவார்.

அப்படியென்றால் இருக்கிற வேலையை விட்டுவிட்டு போய் விட வேண்டும் என்று அர்த்தமில்லை. எந்த விஷயத்தை செய்வது உங்களுக்கு ரொம்பவும் எளிதாக இருக்கிறதோ, அதை விட கடினமான வேலையை செய்ய நீங்கள் தகுதியானவராக இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

**உங்களால் மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் ஓட முடியும் என்றால் ஏன் 50 கி.மீ. வேகத்தில் நீங்கள் ஓட வேண்டும்? உங்கள் திறமைக்குரிய வேலை உங்களுக்கு இல்லை என்பதற்காக அலுத்துக் கொள்ளவும், எரிச்சல் அடையவும் உங்களுக்கு உரிமை இருக்கிறது என்றால் உங்கள் அறிவும், திறமையும்– அதன் தகுதிக்குரிய வேலையை செய்யாமல் நீங்கள் இருக்கும்போது உங்கள் மீது எரிச்சல் அடைய மற்றவர்களுக்கு எல்லா உரிமையும் உண்டு.**

உங்கள் அதீதமான திறமைகளை நீங்கள் இனம் காணாமல் இருப்பதற்குக் காரணம், உங்களை நீங்கள் சரியாக அறிந்து கொள்ளாததால்தான் என்கிறது விஞ்ஞானம்.

சிறு குட்டியாக இருந்தபோது எங்கிருந்தோ வந்த பருந்து ஒன்று கோழிக்குஞ்சுகளின் கூட்டத்தில் சேர்ந்தது. அவற்றோடு சேர்ந்து அதுவும் வளர்ந்தது.

அந்தக் கோழிகள் இருக்கிற பகுதிகளில் உயரத்தில் பறக்கிற பருந்துகளைப் பார்த்து... பார் எவ்வளவு உயரத்தில் எவ்வளவு உயரமாகப் பறக்கிறது பார் என்று ஆச்சர்யமாகப் பேசிக்

கொள்ளுமாம் கோழிகள். கூடவே இருக்கிற பருந்தும் ஆமாம் ஆமாம் எவ்ளோ உயரத்தில் பறக்குது. அடேயப்பா என்று ஆச்சர்யம் காட்டுமாம்.

பாவம் தானும் பருந்துதான், தனக்கும் உயரே பறக்க முடியும் என்று அந்தப் பருந்துக்கு தெரியாது. இருக்கிற கோழிக் கூட்டத்துக்கு உயரே பறக்கத் தெரியாது என்பதால் ஹே... நீ பருந்துப்பா உனக்கு நல்லா பறக்க வரும்ப்பா என்று சொல்லவும் தெரியாது.

இது பரவாயில்லை... பல நேரங்களில் பறக்கத் தெரியும் என்பது தெரிந்தே நாம் பறப்பது இல்லை.

அடபோப்பா... உயரமா பறந்தா எனக்கு ஒத்துக்காது என்று ஏதாவது கதை சொல்வோம்.

**மூட்டை சுமக்கிறவனின் கவனம் எல்லாம் மூட்டையின் எடை மீது இருந்தால் இமயமலையை இடுப்பில் கட்டிக் கொண்டு திரிவது போலவே இருக்கும். வாங்கப் போகிற கூலி மீது கவனம் இருந்தால் இன்னும் எத்தனை மூட்டை தூக்கலாம் என்ற எண்ணம்தான் மேலோங்கி நிற்கும்.**

கோபி... தட் ஈஸ் டு மச்... இப்படி எல்லாம நடக்க வாய்ப்பே இல்லை என்று நீங்கள் சொல்லலாம். நாம் நேரடியாக அனுபவத்தில் இருந்தே இதை புரிந்து கொள்ளப் பார்ப்போம். நீங்களே அடிக்கடி சொல்வதுண்டு, வேலை சுவாரஸ்யமா போய்கிட்டு இருந்ததுல தலைவலி தெரியலை. வேலை முடிஞ்சவுடன் தலைவலி கடுமையாக இருக்கு என்று.

அப்படியே பார்த்தாலும் தலைவலி... தலைவலிதானே... உண்மைதான். ஆனால் அந்தத் தலைவலியால் வேலை தடைபடல. காரணம் உங்கள் கவனம் முழுவதும் வேலையை வெற்றிகரமாக செய்து முடிப்பதிலேயே இருந்தது. எச்.ஜி.வெல்ஸ் சொன்ன விதிதான்: கவனம் தலைவலி மீது இருந்தால் வேலை கஷ்டப்பட்டு நடக்கும். பலனும் குறைவு. கவனம் வேலை மீது இருந்தால் தலைவலியால் தொந்தரவும் இல்லை... பலனும் அதிகம்.



இதெல்லாம் யோகிகளுக்கும்... ஞானிகளுக்குமே சாத்தியம்... சாமானியர்களுக்கு அல்ல - இப்படி ஒரு கருத்தையும் நாம் முன் வைப்போம். நீங்களும் நானும் கடவுளாகவேகூட இருக்க முடியும் என்று போதனைகள் சொல்லுகின்றன. (நிபந்தனைகளுக்கு உட்பட்டு) யோகியாக வும், ஞானியாகவும் இருந்து விட்டுப் போவோமே.



கப்ளாங்

"எனக்கு தெரிஞ்சு ரெண்டு பேர்தான் உலகத்துல இருக்கான். ஒருத்தன் வாழ்க்கையை புரிந்த வன்... இன்னொருத்தன் வாழ்க் கையை புரியாதவன் என்பார் கப்ளாங் என்னும் அறிஞர். கஷ்டம் - கஷ்டம் - கஷ்டம் என்று ஒதுக்கிக் கொண்டே போயிருந்தால் இந்த உலகத்தில் எந்த அருமையான படைப்புமே இருந்திருக்காது.

திங்கள்கிழமை காலைல எழுந்து நடக்க ஆரம்பிச்சம்னா ஞாயிற்றுக் கிழமை மதுரைக்கு போய் சேர்ந்து ரலாம்.

அமெரிக்கானு ஒரு கோள் இருக்கு அங்க மனிதர்களுக்கு 10 கால், 50 தலை, 3 வாலு இருக்கும் என்று யாராவது கதை அளந்து கொண்டு இருப்பார்கள்.

சித்தப்பா பெரிய கிளையிலேயும், பெரியப்பா சின்ன கிளையிலேயும் தொங்கிக் கொண்டு இருப்பார்கள்.

பகலுக்குள்ளேயே பசியாரத் தேவையான வேலைகளை முடித்துக் கொண்டு அந்தி சாயும் முன்பே கூடுகளுக்குள் ஓடிப்போய் படுத்துக் கொள்வோம்.

பழத்தை பிடுங்கித் தின்பதில் நமக்கும் குரங்குக்கும் பயங்கர சண்டை நடக்கும். கடைசியில் நாம தோற்றுப்போவோம்.

கிட்டத்தட்ட 10,000 விஷயங்களை கண்டு பிடிச்ச தாமஸ் ஆல்வா எடிசன் கஷ்டப்படாமலா இருந்திருப்பாரு. ஆனா அவருக்கு கஷ்டம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏன்னா அவருடைய கவனம் முழுவதும் கண்டு பிடிப்புகளின் மீதுதான் இருந்தது.



சுமை என்று தீர்மானித்து விட்டால் உடம்புதான் மிகப்பெரிய சுமை. இந்த சுமைக்கு ஏன் இவ்வளவு சாப்பாடு, சவரட்டணை எல்லாம். உயிரோடும் ஆரோக்கியத்தோடும் இருக்க வேண்டும் என்றுதானே. கவனம் உயிர் மீது இருப்பதால் உடம்பின் சுமை இங்கே உணரப் படுவதில்லை.

நமக்குள் இன்னும் எத்தனை எடிசன்கள், ரைட் சகோதரர்கள், கஸ்தூரி ரங்கன்கள், அப்துல் கலாம்கள் வல்லபாய் பட்டேல்கள், மன்மோகன் சிங்குகள், ஜி.டி.நாயுடுகள், தெரசாக்கள் இருக்கிறார்களோ யாருக்கும் தெரியாது. எல்லாம் Comfort zone கூட்டுக்குள் அடைகாத்துக் கொண்டு இருக்கிறோம்... ஃபிரிட்ஜுக்குள் இருக்கிற ஆப்பிள் மாதிரி.

என்றைக்காவது அது நின்று போனால் அவ்வளவுதான். இப்படி பயமுறுத்தியெல்லாம் நமது திறமையை வெளிக் கொண்டு வரவேண்டும் என்ற அவசியமில்லை.

கஷ்டம் என்கிற ஒரு பொய்க்காரணத்தை காட்டிக் கொண்டு நம் எல்லைகளை சுருக்கிக் கொள்ளவேண்டாமே. கவனத்தை சவால்களின் மீது திருப்புவோம். அதில் இருக்கும் சங்கடங்களின் மீதே பார்வை வைத்திருக்கும் பழக்கத்தை குறைத்துக் கொள்வோம்.

தேனீ இருக்கே தேனீ... சுறுசுறுப்பா இயங்குகிறவர்களை நாம் அப்படித்தான் சொல்வோம். அதனுடைய இறக்கை



களுக்கு அந்த உடம்பை தாங்குகிற சக்தி கிடையாது. அதாவது தேனீயின் உடலை சுமந்து கொண்டு பறக்கிற அளவுக்கு அதற்கு பலம் கிடையாது. ஆனாலும் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கி அது தேன் கொண்டு வருகிறது.

இதில் சுவாரஸ்யமான தகவல் என்னவென்றால் இந்த விஷயம் தேனீக்கு தெரியாது.

அதனால் அதற்கு கஷ்டத்தைப் பற்றி கவலை இல்லை.

நாம் ஏற்கனவே பார்த்த பருந்துக்கு தன் பலம் தெரியாது... இந்த தேனீக்கு தன் பலவீனம் தெரியாது.

தன் பலம், பலவீனம் இரண்டையும் ஆய்ந்த பிறகே ஒரு செயலில் இறங்க வேண்டும் என்றாலும் பலவீனம் தெரியாத தேனீயாவது அதுபாட்டுக்கு தன் வேலையை பார்க்கிறது. ஆனால் தன் பலம் தெரியாத பருந்து... சக பருந்தை பார்த்தே ஹையா எப்படி பறக்குது பார் என்று குதிக்கிறது. அதனால் எந்த பலனும் இல்லை.

**மூளையில், இயங்கும் தன்மையில், பிரித்து ஆய்வதில், விருட்டென புரிந்து கொள்வதில் சமயோசித புத்தியில் இப்படியான எல்லா சிறப்பம்சங்களிலும் உலக அளவில்... ஒப்பீட்டு அளவில் நமக்கு முக்கியமான இடம் உண்டு. இதெல்லாம் உலகம் முழுவதும் இருக்கிற எல்லாருக்கும் தெரியும்... நம்மைத் தவிர...**

நாம் இன்னமும் நம்முடைய திறனில் பாதியைக்கூட வெளிப்படுத்தவில்லை என்பதற்கு சாட்சியாகத்தான் நமது நாடு நிற்கிறது. நாம் இன்னமும் வேலைக்கார நாடுதான். நம்முடைய தயாரிப்புகளின் எண்ணிக்கை மிகமிக குறைவு. நாம் அன்றாடம் பயன்படுத்துகிற பொருட்களில் எத்தனை "Made in India". வேண்டுமானால் இந்தியாவில் இருந்து அந்தக் கம்பெனி இயங்கும். அதில் நாம் வேலை பார்த்துக் கொண்டு இருப்போம்.

கம்ப்யூட்டர், இருசக்கர வாகனம், கார், அயர்ன் பாக்ஸ், பிரிட்ஜ், வாஷிங் மிஷின், நாம் அணிந்திருக்கிற கடிகாரம்

இவ்வளவு ஏன்... உள்ளாடைகள்... இதில் எத்தனை "Made in India."

காரணம் வேலையாளாக இருப்பது Comfort zone. லாபம் வந்தால் நமக்கு. நட்டம் வந்தால் அவனுக்கு. இதிலிருந்து வெளியே வரவேண்டியது நமக்காக மட்டுமல்லாமல் நம் நாட்டுக்காவும்தான்.

ஜப்பான்... தென்கொரியா, அமெரிக்கா, தைவான், சீனா இப்படியான பல நாடுகளைப் பார்த்து இந்தியப் பருந்து இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பாரு பாரு எவ்வளவு உயரமாக பறக்குது பாரு என்று சொல்லிக் கொண்டிருக்கும்.

ஏதாவது... பண்ணனும் பாஸ்...
ஒரு சினிமா பாட்டுல வர்ற மாதிரி
ஆயிரம் தொழில் நுட்பம் அறிய வைப்போம்
இந்தியன் யார் என்று புரிய வைப்போம்.



# 15

உங்களின் முன்னேற்றம் என்பது உங்கள் கையில் மட்டுமில்லை. உங்களைச் சுற்றியிருப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் பொறுத்தும் அது தீர்மானிக்கப்படுகிறது என்கிறார் ஆன்ட்ரூ ஜான்.

இந்த புத்தகத்தை எழுதிக்கொண்டு இருக்கும் போது ஒரு போன்... என் தோழி ஒருவரின் தந்தை... கோபி வாழ்த்துகள் என்றார். எதுக்கு அங்கிள், என்றேன். வெரிகுட். ஒரு புத்தகம் எழுதிக் கொண்டு இருக்கிறீர்களாமே நல்லா எழுதுங்க. மை பெஸ்ட் விஷ்ஷஸ் என்றார். இப்பதான் எழுதவே ஆரம்பிச்சிருக்கேன் அங்கிள் என்றேன்.

இருக்கட்டும்... பாராட்டுவதை மட்டும் நான் ஒத்திப்போட மாட்டேன். நல்லபடியா எழு துங்க... நல்லா வரும். வாழ்த்துகள் என்றார்.

இப்படிப்பட்ட மனிதர்கள் நம்முடைய வாழ்க் கையில் எவ்வளவு நேர்மறையான பங்க ளிப்பை தருகிறார்கள் தெரியுமா? மனது நிறைய சந்தோஷத்தோடும் நல்லலெண்ணத் தோடும், உங்களின் வளர்ச்சி சார்ந்த அக்கறை யோடும் இது மாதிரி மனிதர்கள் சொல்லுகிற வார்த்தையும், அவர்களின் அருகாமையும் நம் வாழ்க்கையில் நிறைய வெற்றிகளை கொண்டு வந்து சேர்க்கிறது என்பதே உண்மை.

என் இன்னொரு நண்பரின் அப்பா இருக்கிறார்... உங்கள் மனசு எவ்வளவு சஞ்சலத்தோடும் கவலையோடும் இருந்தாலும் சரி... அவரைப் பார்த்தாலே அத்தனையும் மறந்து போகும். உங்களை அவர் நலம் விசாரிக்க வேண்டும் என்றெல்லாம்கூட அவசியமில்லை. அவ்வளவு பாஸிட்டிவிட்டியை தனக்குள்ளே சேர்த்து வைத்திருப்பார். எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்கிற அவருடைய நினைப்பும், சிந்தனையும் அவர் முகத்தில் தெரிகிற தேஜசில் வெளிப்படும்.

உங்களின் முன்னேற்றம் என்பது உங்கள் கையில் மட்டுமில்லை. உங்களைச் சுற்றி இருப்பவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதைப் பொறுத்தும் அது தீர்மானிக்கப் படுகிறது என்கிறார் ஆண்ட்ரூ ஜான்.

**உண்மைதான். நம்மைச் சுற்றி எவ்வளவு நேர்மறை எண்ணமுடைய மனிதர்கள் இருக்கிறார்களோ, உண்மையாக பாராட்டுகிற குணம் கொண்டவர்கள் இருக்கிறார்களோ, நம்முடைய வளர்ச்சியில் அகமகிழ்பவர்கள் இருக்கிறார்களோ அதை பொறுத்துதான் நம்முடைய வளர்ச்சியும் இருக்கிறது.**

ஒரு ஊருக்கு ஒரு ஞானி வந்திருந்தார். அந்த ஊரின் முக்கியப் புள்ளி ஒருவர் அவரை சந்திக்க வந்திருந்தார். அவரிடம் ஞானி... சொல்லுங்கள் நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்... ஏதாவது பிரச்னையா என்று கேட்டார்.

முக்கியப்புள்ளி... பிரச்னையெல்லாம் ஒன்றும் இல்லை. முன்பு நான் கஷ்டப்பட்டேன். இப்போது வாழ்வில் முன்னேறி சந்தோஷமாக இருக்கிறேன். அதற்காக கடவுளுக்கு நன்றி சொல்ல ஆசைப்படுகிறேன். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்.


நீங்கள் நன்றி சொல்ல வேண்டியது கடவுளுக்கு இல்லை... நீங்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று உங்களை வாழ்த்தியவர்களுக்குத்தான் என்றாராம் ஞானி. நீங்கள் நன்றாக இருப்பதற்குக் காரணம் நீங்கள் நன்றாக இருக்க வேண்டும் என பலர் நினைத்ததால்தான்... அதனால்



அவர்களுக்கு முதலில் நன்றி சொல்லுங்கள் என்றார் அந்த ஞானி.

**நம்மை பாராட்டவும், தட்டிக் கொடுக்கவும் உண்மைகளை தெளிவுபடச் சொல்லவும் எப்போதும் தயாராக இருக்கிறவர்களோடு எப்போதும் தொடர்பில் இருங்கள். அவர்கள்தான் உங்கள் தன்னம்பிக்கையின் உற்சாக டானிக்.**

உண்மையில் நமது மனது பாராட்டுகளாலும், நியாயமான புகழ்ச்சிகளாலும் உத்வேகம் அடைகிறது. அவர்களின் துறுதுறுப்பும் நேர்மறையான வார்த்தைகளும் நம்மை மேலும் உற்சாகப்படுத்துகின்றன.



நீங்கள் தடுமாறும்போது உங்களைத் தாங்கிப் பிடிப்பதும், முன்னேறும்போது தட்டிக் கொடுப்பதும் இவர்கள்தான்.

சே... சே புகழ்ச்சிக்கும் பாராட்டுக்குமெல்லாம் மனசு அடிமையாகக் கூடாது என்று 5ம் வகுப்பில் எங்கள் ஆசிரியர் சொல்லியிருக்கிறார் என்று சொல்லாதீர்கள். அந்த புகழ்ச்சி என்பது உங்களிடம் காரியம் சாதிக்க வேண்டும் என்பதற்காக அவிழ்த்து விடப்படும் பொய்கள்.

நேர்மறையான சிந்தனை கொண்டவர்கள் நம் அருகில் இருக்கும்போது உங்கள் தோல்விகள் உங்களை துன்புறுத்துவ தில்லை. அவற்றில் இருந்து மீண்டு எழவும் மேலும்


உயரங்களைத் தொடவும் அவர்களின் அந்த வார்த்தைகள் உங்களுக்கு உதவுகின்றன.

இவர்களை பக்கத்தில் வைத்துக் கொள்கிற அதே நேரத்தில் புலம்புவதற்கு யார் கிடைப்பார்கள் என்று அலைபவர்களை தூரத்தில் வையுங்கள்.

சில பேரிடம் போனில் பேசினாலே ஏண்டா பேசினோம் என்று இருக்கும்.

சரிதான்... உன் காட்டுல மழை. நல்லா சம்பாதிக்கிற... என் பொழப்புதான் கெட்டுபோய் கிடக்குது. என்ன பண்ணி னாலும் ஒண்ணும் நடக்க மாட்டேங்குது என்று ஆரம்பித்து உங்களின் நேர்மறை சக்திகளை தின்கிற சக்தி இவர்களுக்கு உண்டு.

தங்களின் எதிர்மறை சிந்தனைகளை உங்கள் மீது அள்ளித் தெளித்து விட்டு, அடுத்த ஆளைத் தேடிக் கொண்டு இவர்கள் போய் விடுவார்கள்.



இங்கே இரண்டு உரையாடல்களைக் கேட்போம். உங்களுக்கு எது பிடித்திருக்கிறது என்று பாருங்கள்.


**முதலாவது உரையாடல்**

1. Hi - da எப்படி இருக்கே?
2. ரொம்ப நல்லா இருக்கேண்டா, நீ நல்லா இருக்கியா?



1. நல்லா இருக்கேண்டா.
2. Super. வீட்ல எல்லாரும் நல்லா இருக்காங்களா?
1. ரொம்ப நல்லா இருக்காங்கடா.
2. உன் பிசினஸ் ரொம்ப நல்லா போகுதுன்னு கேள்விப்பட்டேன். I am Happy for you da இன்னும் நிறையபண்ணுடா.
1. Thanks da ஆனால் அப்பப்ப கொஞ்சம் பிரச்சினை வரத்தான் செய்யுது.
2. Businessனா பிரச்சினைகள் வரத்தான் செய்யும். அதுக்கெல்லாம் கவலைப்படாத. அத சரிகட்ட கொஞ்சம் கூடுதல் வேலை பார்த்தா போதும் - Relax ஆக Handle பண்ணு.
1. சரிடா... உன் பிசினஸ் எப்படி இருக்கு
2. Same Here பிரச்சினைகள் இருந்தாலும் Handle பண்ணிகிட்டே இருக்கேன். இன்னும் கொஞ்ச நாள்தாண்டா... அப்புறம் No Problem. I am Enjoying my work.

**இரண்டாவது உரையாடல்**



1. ஹாய்டா மாப்பிள்ளை எப்படி இருக்கே?
2. என்னத்த இருக்கேன்... என்னமோ வண்டி ஓடுது.

1. வீட்ல எல்லாம் எப்படி இருக்காங்க.

2. அவனுக்களுக்கென்ன நல்லா இருக்கானுங்க. என் உசிருல்ல போகுது.

1. லைப்னா கொஞ்சம் அப்படி, இப்படிதான்டா இருக்கும்.

2. என்னமோ போ... எரிச்சலா இருக்கு... ஆமா உன் பிஸினெஸ் படுத்துருச்சுன்னு சொன்னாங்களே இப்ப எப்படி இருக்கு?

1. கொஞ்சம் லாஸ்தான் மேனேஜ் பண்ணிரலாம்.

2. என்னத்த மேனேஜ் பண்ணுவ... இருக்கிறதையும் விட்டுட்டு ரோட்ல நிக்காம பார்த்துக்க. இப்படிதான் என் ஃபிரண்டும் லாஸ் லாஸ்ன்னுட்டு இப்போ சோத்துக்கு வழியில்லாம திரியுறான்.

1. உன் பிஸினெஸ் எப்படி போகுது.

2. கவலைப்படாத நானும் சீக்கிரம் உங்கூட சேர்ந்து ரோட்டுல நிப்பேன்.

**இரண்டு உரையாடலிலுமே நட்பு இருந்தது வெவ்வேறு வடிவங்களில். ஆனால் முதல் உரையாடலில் நம்பிக்கை தருகிற வார்த்தைகளும் அன்பும் இருந்தன. இரண்டாவதில் நம்பிக்கையை குலைக்கிற வார்த்தைகளும் எரிச்சலும் இருந்தன.**

இந்த இரண்டாவது பார்ட்டிகளை கொஞ்சம் தூரத்தில் வையுங்கள். அவருடன் சேர்ந்து திரிந்தால் அவரைப் போன்றே எதிர்மறையான எண்ணம் கொண்டவர்களின் கூட்டத்தில் சிக்கி விடுவீர்கள்.

அப்புறம் ஊருக்கு வருகிற ஞானியிடம் போய் நல்லா இருந்த நான் வீணாகி விட்டேன் என்று அழ வேண்டி இருக்கும்.



**உங்களை யாராவது நியாயமாக பாராட்டினால் அதை அனுபவியுங்கள். புகழ்ந்தால் வெளியே பெரிய ரியாக்ஷன் காட்டா விட்டாலும் அதை உள்வாங்கிக் கொள்ளுங்கள். அதுதான் உண்மையாக தங்கள் மன உணர்வை வெளிப்படுத்தும் அவர்களுக்கு நாம் செய்கிற மரியாதை.**


பாராட்டுகளையும், புகழுரைகளையும் ஏற்றுக் கொண்டால் தலைக்கனம் வந்து விடும் என்று பயப்படாதீர்கள். உண்மையான பாராட்டுகள் எது வெறும் புகழ்ச்சி எது என்பதை பிரித்துணரக் கற்றுக் கொள்ளுங்கள். வெற்றுப் புகழ்ச்சியை உதாசீனம் செய்யுங்கள். அதற்காக நியாயமான பாராட்டுகளையும் புகழ்ச்சியையும் ஏற்கவும், அனுபவிக்கவும் தயங்காதீர்கள்.

உங்கள் மனசு, உங்கள் அம்மா மாதிரி. யாராவது உண்மையாக பாராட்டினால் அது சந்தோஷப்படும், உற்சாகமடையும். மேலும் மேலும் உயரத்திற்கு உங்களை கொண்டு போகும். அந்த பாராட்டுகளின் மீது ஏற்படும் ஆசையும் அபிப்ராயமும் தொடர்ந்து அதைப் பெற போராட வைக்கும்.

பாராட்டுபவர்களை பக்கத்தில் வைத்துக் கொண்டால் சோம்பேறி ஆகி விடமாட்டீர்கள். துதிபாடிகள் வேறு... உங்கள் நலனில் அக்கறை கொண்டு பாராட்டுபவர்கள் வேறு.

பாராட்டையெல்லாம் நான் சட்டை செய்யமாட்டேன் என்று சொன்னாலும், அது நம்மை வேகமாய் இயங்க வைக்கிறது. சச்சின் டெண்டுல்கருக்கு கிடைக்காத பாராட்டா... அவர் அடிக்காத சிக்சரா, பவுண்டரியா... என்ன செய்யவில்லை அவர்... ஆனால் 10,000 ரன்களை கடந்த பின்னும் அவர் பவுண்டரி அடித்தால் கைதட்டுகிறோமே ஏன்? அது அவரை உற்சாகப்படுத்தும் என்பதால்தான்.

கைதட்டலையும், ஆரவாரத்தையும் உள்ளுக்குள் ரசித்துக் கொண்டே அடுத்த பந்தை சிக்சருக்கு அலேக்காக தூக்குவார்



சச்சின். ஆனானப்பட்ட சச்சினுக்கே பாராட்டு தேவைப்படு கிறது என்றால் நாம் எம்மாத்திரம்.


உங்கள் அபிமான சச்சின் துவக்க ஆட்டக்காரராக உள்ளே நுழைகிறார். உங்கள் அருகில் இருக்கும் நண்பன், இன்னைக்கு சச்சின் டக் அவுட் ஆவார் என்று சொன்னால் வேகமாய் அவன் வாயைப் பொத்துகிறீர்கள். ஏன்? அவரைப் போல் பத்து பேர் எதிர்மறையாக நினைத்தால் அது நடக்க சாத்தியமுண்டு என்பது உங்கள் உள்மனதுக்கு தெரியும்.

உங்களால் முடிந்தது ஒரு வாயையாவது பொத்துவோமே என்று அதை செய்கிறீர்கள். எங்கிருந்தோ வரும் ஒருவனின் எதிர்மறை சக்தி சச்சினின் விளையாட்டை பாதிக்கும் என்றால்... அவன் சச்சினின் நண்பனாக இருந்தால் அது சச்சினின் வெற்றிப்படிகளில் எவ்வளவு பெரிய தடையாக இருக்கும்.

அதுபோகட்டும்... சச்சினின் திறமையையே கெடுக்கிற எதிர்மறை சக்தி கொண்ட ஒருவனையா நீங்கள் நண்பனாக



வைத்திருக்கிறீர்கள். முதலில் அவனருகில் இருந்து எழுந்து போங்கள்.



இயக்குனர் சிகரம் கே.பாலச்சந்தரிடம் ஒரு பேட்டி. இத்தனை வெற்றிகளுக்குப் பிறகும் ரசிகனின் கைதட்டல் உங்களை உற்சாகப்படுத்துகிறதா என்று கேட்டேன். என்ன இப்படிக் கேட்டு விட்டீர்கள். இன்றைக்கல்ல என்றைக்கும் அந்தக் கைதட்டல்தான் என்னை இயங்க வைக்கிறது என்றார்.

உங்கள் சின்ன சின்ன வெற்றிகளைக்கூட 'வெல்டன்' சொல்லி வாழ்த்துகிறவர்களை அடிக்கடி சந்தியுங்கள்.

'இதெல்லாம் ஆகாது'

'நீ நினைக்கிறதெல்லாம் நடக்காது'

'இதெல்லாம் நடக்கிற கதையா'

இப்படி நேர்மறையாகப் பேசுகிறவர்களை தூரத்தில் வையங்கள்.

பாராட்டுபவனை தூரத்தில் வையுங்கள்.

விமர்சிப்பவனை அருகில் வைத்துக் கொள்ளுங்கள் என்ற பழைய தத்துவத்துக்கு இது விரோதமாக இருக்கலாம்.

உண்மையாகப் பாராட்டுபவர் சரியாக விமர்சனமும் கொடுப்பார். விமர்சிக்க வேண்டுமே என்பதற்காக மட்டும்...

உங்கள் நேர்மறை சக்தியை முடக்குபவர்களை தாட்சண்யம் இல்லாமல் தூர வையுங்கள்.

அதெப்படி... அது தவறில்லையா... அவர்களும் என் நண்பர்கள்தானே என்று கேட்பவர்களுக்கு காப்மேயர் சொல்வதைத்தான் கோடிட்டுக்காட்ட வேண்டும்.

**"உங்கள் மனம் ஒரு தொட்டி. அதை குப்புறக் கவிழ்த்து வையுங்கள்... இல்லை என்றால் குப்பையை வைத்துக் கொண்டு வருபவர்கள் அதில் கொட்டி விட்டுப் போவார்கள்."**

**உங்கள் மனத் தொட்டியில் மேலும் மேலும் குப்பை கொட்டுபவர்...**

**உங்கள் நண்பராக இருக்க முடியாது.**

■